இன்றைய செய்தி நாளைய வரலாறு

கலைஞர் 100 1924 - 2024

# முரசொலி

Murasoli

விழ்வது நாமாக இருப்பினும் வாழ்வது தமிழாக இருக்கட்டும்

www.murasoli.in நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 82 – ஒலி : 164 – திருவள்ளுவர் ஆண்டு 2055 – தை 11 – வியாழக்கிழமை 25 ஜனவரி 2024 – மதுரை 16 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 82 - Issue 164 : Thiruvalluvar Year - 2055 - Thai 11 - Thursday 25 January 2024 - Madurai 16 Pages ₹ 5.00



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (24.1.2024) மதுரை மாவட்டம், அலங்காநல்லூர், கீழக்கரை கிராமத்தில் உலகத் தரத்துடன் கட்டப்பட்டுள்ள கலைஞர் நூற்றாண்டு ஏறுதழுவுதல் அரங்கம் திறப்பு விழாவில், அரங்கத்தில் நிறுவப்பட்டுள்ள ஏறுதழுவுதல் சிலையை திறந்து வைத்தார். இவ்விழாவில், அமைச்சர் பெருமக்கள், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### கழக அரசு தடைகளை உடைத்தெறிந்ததால்தான் இன்றைக்கு ஏறு தழுவுதல் போட்டி கம்பீரமாக நடைபெறுகிறது! – இதுபோன்ற

# தமிழரின் பண்பாட்டுத் திருவிழாவை ஒற்றுமையாக நடத்துவோம்!

## மதுரை, அலங்காநல்லூரில் கலைஞர் நூற்றாண்டு ஏறு தழுவுதல் அரங்கை முதல்வர் மு.க.ஸ்டாலின் திறந்து வைத்து எழுச்சியுரை !

**மதுரை, ஜன. 25-**

**தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (24.01.2024) மதுரை, அலங்காநல்லூர், கீழக்கரையில், கலைஞர் நூற்றாண்டு ஏறுதழுவுதல் அரங்கத்தை திறந்து வைத்து ஆற்றிய விழாப் பேருரை வருமாறு:-**

வீரதீர விளையாட்டு களத்தை திறந்து வைக்க வந்திருக்கிறேன். மதுரையை தூங்கா நகரம் என்பார்கள். போட்டி என்று வந்துவிட்டால், தோல்வியை தூள்தூளாக்கும் நகரம் என்பதை வாடிவாசல் ஆண்டுதோறும் மெய்ப்பித்துக் கொண்டிருக்கிறது.

**மூன்றாண்டில் மூன்று கம்பீரச் சின்னங்கள் மதுரையில்!**

தமிழர் பண்பாட்டு விளையாட்டான ஏறுதழுவுதலுக்கு சங்கம் வளர்த்த மதுரையில் இந்த மாபெரும் அரங்கம் நம்முடைய திராவிட முன்னேற்றக் கழக அரசால் கட்டி எழுப்பப் பட்டிருக்கிறது. அதுவும், தமிழினத் தலைவர் கலைஞர் அவர்களுடைய நூற்றாண்டு விழா கொண்டாடுகிற ஆண்டில் அமைக்கப்பட்டிருப்பது கூடுதல் சிறப்பு!

பல்லாயிரம் ஆண்டு பெருமை கொண்ட நம்முடைய தமிழினம் கொண்டாடும் ஏறுதழுவு தலுக்கான அரங்கத்தை கட்டி எழுப்பியவன் இந்த ஸ்டாலின் என்று வரலாற்றில் என்னு டைய பெயர் இடம்பெறுவது எனக்கு கிடைத்திருக்கக் கூடிய பெருமை!

திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி அமைந்து, மூன்று ஆண்டுகள்தான் ஆகியிருக் கிறது. அதற்குள்ளாக, மூன்று முக்கியமான கம்பீரச் சின்னங்களை இந்த மதுரையில் ஏற்படுத்தியிருக்கோம்.

ஒன்று, தமிழினத்தினுடைய பழமையை சொல்கின்ற கீழடி அருங்காட்சியகம் மதுரைக்கு அருகில் அமைக்கப்பட்டிருக்கிறது.

இரண்டாவது, கலைஞரின் பெயரால் மாபெரும் நூலகம் பிரமாண்டமாக மதுரை மாநகரில் அறிவு மாளிகையாக அமைக்கப் பட்டிருக்கிறது.

இப்போது மூன்றவதாக, இந்த கலைஞர் நூற்றாண்டு ஏறுதழுவுதல் அரங்கம் ஜல்லிக் கட்டுக்கு பெயர்போன அலங்காநல்லூரில் அமைக்கப்பட்டிருக்கிறது.

**மதுரைக்கு ஒன்றிய அரசு அறிவித்து செயல்படுத்தப்படாத திட்டங்கள்!**

இதை சொல்லுகின்ற நேரத்தில், 2015ஆம் ஆண்டு அறிவித்து, இன்றைக்கு வரைக்கும் மதுரைக்கு மத்தியில் இருக்கக்கூடிய ஒன்றிய பா.ஜ.க அரசால் கொண்டு வரப்படாத ஒரு திட்டம் இருக்கிறதே, அது உங்கள் ஞாபகத்திற்கு வந்தால், அதுக்கு நான் பொறுப்பில்லை!

இந்த அரங்கத்தை கம்பீரமாகவும், அழகாகவும் அமைத்துக் கொடுத்த பொதுப் பணித்துறை அமைச்சர் எ.வ.வேலு அவர்களை பாராட்டுகிறேன்! வாழ்த்துகிறேன்! அவருடைய



முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (24.1.2024) மதுரை மாவட்டம், அலங்காநல்லூர், கீழக்கரை கிராமத்தில் 66.80 ஏக்கர் நிலப்பரப்பில், 77,683 சதுரஅடி பரப்பளவில் 62.78 கோடி ரூபாய் செலவில் உலகின் முதல் பிரம்மாண்டமான ஏறுதழுவுதல் அரங்கமான கலைஞர் நூற்றாண்டு ஏறுதழுவுதல் அரங்கத்தை திறந்து வைத்தார். இவ்விழாவில், அமைச்சர் பெருமக்கள், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

சாதனைப் பட்டியலில், இப்போது இந்த கலைஞர் நூற்றாண்டு ஏறுதழுவுதல் அரங்கமும் சேர்ந்துவிட்டது.

சென்னையில், கலைஞர் நினைவகமும் விரைவில் திறக்கப்பட இருக்கிறது. இந்த விழாவை மிகப் பிரமாண்டமாக ஏற்பாடு செய்துள்ளார் நம்முடைய அமைச்சர் மூர்த்தி அவர்கள்.

தை மாதம் பிறந்தாலே மூர்த்தி, ஜல்லிக்கட்டு மூர்த்தியாக மாறிவிடுவார். கோட்டைக்கு கூட வராமல் ஜல்லிக்கட்டு மைதானத்திலேயே இருந்துவிடுவார். அந்தளவுக்கு ஏறுதழுவுதலை தனது உயிராகக் கருதக் கூடிய மூர்த்தியை நான் பாராட்டுகிறேன்! வாழ்த்துகிறேன்!

**தமிழினத்தின் பண்பாட்டு மரபின் தொடர்ச்சி இந்த விழா!**

இங்கே அமைந்திருக்கும் இந்த பண்பாட்டுச் சின்னம், தமிழினத்தின் பண்பாட்டு மரபின் தொடர்ச்சி! சிந்து சமவெளி காலத்து முத்திரைகளிலேயே திமில் காளைகள் இருக்கிறது. அதில் காளைகளின் நேர்கொண்ட பார்வையை நாம் பார்க்கலாம்.

பல்லாயிரம் ஆண்டுக்கு முன்பிருந்த ஓவியங்களில், திரண்டு தொங்கும் தாடை, அகன்று வளைந்த கொம்பு கொண்ட காளைகள் இருக்கிறது! ஏன், கீழடியில் திமிலுள்ள காளை யின் முழு எலும்புக் கூடு கிடைத்திருக்கிறது! முல்லை நில மக்களுடைய வீர விளையாட்டாக இருந்திருக்கிறது! பழந்தமிழ் இலக்கி யங்களிலும் இதைப் பற்றி உயர்வாக பாடப்பட்டிருக்கிறது.

“எழுந்தது துகள் ஏற்றனர் மார்பு கவிழ்ந்தன மருப்பு கலங்கினர் பலர் என்று ஏறுதழுவுதல் காட்சியை நம்மு டைய கண்முன்னே கொண்டு வருவது கலித்தொகை. தை மாதம் தொடங்கி பொங்கலுக்காக முதல் மூன்று நாள், அரசு கருவூலத்தை தவிர மற்ற பொது அலுவலகங்களை மூடவேண்டும் என்று பிரிட்டிஷ் ஆட்சிக் காலத்தில் கவர்னர் அறிவித்திருக்கிறார்.

தமிழர்களின் பண்பாட்டை சரியாக அறிந்தவர்களாக, அந்தக் காலத்து கவர்னர்கள் இருந்திருக்கிறார்கள். ஆண்டுதோறும் தை மாதம் ஏறுதழுவுதல் நடக்கும்போது அலங்காநல்லூரும், அவனியாபுரமும், பாலமேடும் உற்சாகத்தோடு காணப்படும்!

**உயர்நீதிமன்றத் தடையை நிறுத்தி 1974-ல் அனுமதி பெற்ற கலைஞர்!**

இந்த பண்பாட்டுத் திருவிழா உலகம் முழுவதும் பேசப்படும் என்று தான், இந்த அரங்கத்தை அமைக்கின்ற முடிவை எடுத்தோம். தலைவர் கலைஞருக்கு ஏறுதழுவுதல் போட்டி மேல், தனி பாசம் உண்டு! அதனால்தான், தன்னுடைய மூத்த பிள்ளையான முரசொலியின் சின்னமாக, ஏறுதழுவுதல் காட்சியை வைத்தார்.

1974ஆம் ஆண்டு சனவரி மாதம் சென்னையில் ஏறுதழுவுதல் போட்டிகளை நடத்தியவர் கலைஞர். ஜல்லிக்கட்டு, ரேக்ளா ரேஸ் போன்றவற்றை 2006ஆம் ஆண்டு சென்னை உயர்நீதிமன்றத்தின் மதுரை கிளை தடை செய்தபோது, பாதுகாப்பான முறையில் நாங்கள் நடத்துவோம் என்று உறுதி அளித்து, அனுமதியை பெற்றவர் தலைவர் கலைஞர்.

2007ஆம் ஆண்டு உச்சநீதிமன்றம், ஜல்லிக்கட்டுக்கு தடை விதித்தபோதும், தடையை நீக்குவதற்காக வலுவான வாதங்களை வைத்து வாதாடியதும் போட்டிகள் நடத்தலாம் என்று அனுமதியைப் பெற்றதும் கழக ஆட்சியில்தான்.

ஆட்சி மாறியதும், 2014ஆம் ஆண்டு ஜல்லிக்கட்டு நடத்த முடியாத சூழல் வந்தது. நம்முடைய இளைஞர்கள் சேர்ந்து, ‘மெரினா தமிழர் புரட்சி’ என்று சொல்கின்ற அளவிற்கு 2017ல் மிகப்பெரிய மக்கள் போராட்டம் சென்னைக் கடற்கரையில் நடந்தது.

அமைதி வழியில் போராடியவர்கள் மேல் வன்முறையை ஏவி கூட்டத்தை கலைத்தது அன்றைக்கு இருந்த அ.தி.மு.க. ஆட்சி. அவர்களே ஆட்டோக்களுக்கு தீ வைத்து கொளுத்தி, அந்த கொடுமையான காட்சி யெல்லாம் அப்போது வெளியானது!

தொடர்ச்சி 4ஆம் பக்கம்

## எ.வ.வேலுவின் சாதனைகளை - மூர்த்தியின் விழா ஏற்பாட்டை பாராட்டுகிறேன்!





**இந்த அரங்கத்தை கம்பீரமாகவும், அழகாகவும் அமைத்துக் கொடுத்த பொதுப்பணித்துறை அமைச்சர் எ.வ.வேலு அவர்களை பாராட்டுகிறேன்! வாழ்த்துகிறேன்! அவருடைய சாதனைப் பட்டியலில், இப்போது இந்த கலைஞர் நூற்றாண்டு ஏறுதழுவுதல் அரங்கமும் சேர்ந்துவிட்டது.**

**சென்னையில், கலைஞர் நினைவகமும் விரைவில் திறக்கப்பட இருக்கிறது. இந்த விழாவை மிகப் பிரமாண்டமாக ஏற்பாடு செய்துள்ளார் நம்முடைய அமைச்சர் மூர்த்தி அவர்கள். தை மாதம் பிறந்தாலே மூர்த்தி, ஜல்லிக்கட்டு மூர்த்தியாக மாறிவிடுவார். கோட்டைக்கு கூட வராமல் ஜல்லிக்கட்டு மைதானத்திலேயே இருந்துவிடுவார். அந்தளவுக்கு ஏறுதழுவுதலை தனது உயிராகக் கருதக் கூடிய மூர்த்தியை நான் பாராட்டுகிறேன்! வாழ்த்துகிறேன்!**

**பல்லாயிரம் ஆண்டு பெருமை கொண்ட நம்முடைய தமிழினம் கொண்டாடும் ஏறுதழுவுதலுக்கான அரங்கத்தை கட்டி எழுப்பியவன் இந்த ஸ்டாலின் என்று வரலாற்றில் என்னுடைய பெயர் இடம்பெறுவது எனக்கு கிடைத்திருக்கக்கூடிய பெருமை!**

இன்றைய செய்தி நாளைய வரலாறு
முரசொலி
நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி
வியாழக்கிழமை 25-01-2024

# வழிபாடு அல்ல, பழிபோடு !

ஆளுநராக வந்ததில் இருந்து குழப்பம் செய்வதையே தொழிலாகச் செய்து வருகிறார் ஆர்.என்.ரவி. பதவிப் பிரமாணத்தோடு அவர் எடுத்துக் கொள்ளும் ரகசியக் காப்புப் பிரமாணம் என்பது தமிழ்நாட்டில் குழப்பம் ஏற்படுத்துவதாக மட்டுமே அமைந்துள்ளது.

அயோத்தியில் ராமர் கோவில் புதிதாகக் கட்டித் திறக்கப்படுகிறது. அந்த விழாவைப் புறக்கணித்து விட்டு (!) மேற்கு மாம்பலத்துக்கு ஆளுநர் வர வேண்டிய அவசியம் என்ன வந்தது? அயோத்திக்குப் போய் விட்டால், தமிழ்நாடு அமைதியாக இருந்துவிடும் அல்லவா? அதனால் தான், ஆளுநர் மேற்கு மாம்பலம் வருகிறார். வந்தவர் அமைதியாக கோதண்டராமரை வணங்கி விட்டுச் சென்றிருக்க வேண்டும். அவர் வந்த நோக்கம், வழிபாடு அல்ல. பழிபோடு என்பது ஆகும்.

**இவர் வந்தபோது அர்ச்சகர்கள் மிரண்டு போய் காணப்பட்டார்களாம். உடனடியாக செய்தி வெளியிடுகிறார் ஆளுநர். இவரைப் பார்த்து அர்ச்சகர்கள் எதற்காக பயப்பட வேண்டும்? எங்களுக்கு எந்தப் பயமும் இல்லை என்பதை அர்ச்சகர்களே பேட்டியாக ஊடகங்களில் கொடுத்து விட்டார்கள்.**

சென்னை மேற்கு மாம்பலத்தில் உள்ள அருள்மிகு கோதண்டராமர் திருக்கோவிலுக்கு தான் சென்றதாகவும் அப்பொழுது அங்குள்ள பூசாரிகள் மற்றும் கோயில் ஊழியர்களின் முகங்களில் கண்ணுக்குப் புலப்படாத பயம் மற்றும் மிகப்பெரிய அச்ச உணர்வு இருந்ததாகவும், நாடு பாலராமர் பிராண பிரதிஷ்டை கொண்டாடும் பொழுது கோயில் வளாகம் கடுமையான அடக்குமுறை உணர்வு வெளிப்படுத்துகிறது என்றும் ஆளுநர் ரவி சமூக வலைதளத்தில் பதிவிட்டு இருந்ததற்குப் பின்னணி என்பது, இதன் மூலமாக தமிழ்நாடு அரசின் மீது பழிபோடுவதுதான்.

ஆளுநர் சொன்ன சில நிமிடங்களிலேயே மேற்கு மாம்பலம் கோதண்டராமர் திருக்கோவில் தலைமை அர்ச்சகர் மோகன் பட்டாச்சாரியார் இதற்கு சரியான விளக்கத்தைச் சொல்லி விட்டார்.

**“இன்று காலை 8 மணியளவில் ஆளுநர் அவர்கள் கோவிலுக்கு வருகை புரிந்தார். அப்போது கோபுர வாசல் அருகே அவருக்கு பூரண கும்ப மரியாதை வழங்கப்பட்டு, சுவாமி தரிசனம் சிறப்பாக செய்து வைக்கப்பட்டது. கோவிலின் தலப்புராணமும், கோவிலில் எழுந்தருளியுள்ள எம்பெருமாள் குறித்தும் எடுத்துரைக்கப்பட்டது. ஆளுநர் பிரசாதங்கள் பெற்றுக்கொண்டு மகிழ்வுடன் சென்றார். சுமார் 20நிமிடம் சுவாமி தரிசனம் செய்தார்கள். இன்று விசேஷ தினம் என்பதால் நேற்று அர்ச்சகர்கள் யாரும் தூங்கவில்லை. சுவாமிக்கு சிறப்பு அலங்காரம், புஷ்ப அலங்காரம் செய்யவேண்டியிருந்தது. அதன் காரணமாக ஒரு நிமிடம் கூட நாங்கள் ஓய்வெடுத்து படுக்கவில்லை. பிரசாதங்கள் எல்லாம் செய்து சுவாமிக்கு பூஜைகள் முடித்து ஆளுநர் வருகைக்காக தயாராக இருந்தோம். சரியான தூக்கமில்லை என்பதால் அசதியாக இருந்தது. இப்போது கூட சோர்வை எங்கள் முகத்தில் பார்க்கலாம்” என்று சொல்லி இருக்கிறார் தலைமை அர்ச்சகர்.**

“அர்ச்சகர்கள் குறித்து X தளத்தில் ஆளுநர் பதிவிட்டது குறித்து கேள்விப்பட்டோம். ‘அர்ச்சகர்கள் வாடிய முகத்துடன் இருப்பதாக’ பதிவிட்டுள்ளதாக கேள்விப் பட்டோம். நாங்கள் பூஜையிலுள்ளோம். தூக்கமின்மையால் அவர் அப்படி தெரிவித்திருக்கலாம். மற்ற படி யாரும் எதுவும் சொல்ல வில்லை. யாரும் அச்சுறுத்தவில்லை. அவருடைய (ஆளுநரின்) பாதுகாவலர்கள் சொன்னபடி நடந்து கொண்டோம். அவ்வளவுதான்” என்று விளக்கம் அளித்துள்ளார்.

‘என்னை கிள்ளிட்டான் மிஸ்’ என்று பள்ளிச் சிறுவர்கள் சொல்வதைப் போல இருக்கிறது ஆளுநரின் குற்றச்சாட்டு. ராமருக்கு எதிராக தி.மு.க. அரசு இருப்பது போன்ற தோற்றத்தை உருவாக்கி குழப்பத்தை ஏற்படுத்துவதுதான் இவரது நோக்கம். ஆளுநர், அயோத்திக்குப் போகாமல் இருந்ததும், மேற்கு மாம்பலம் வந்ததும் இதற்குத் தானா?

இவர்கள் எல்லாம் உண்மையில் பதில் சொல்ல வேண்டியது பூரி சங்கராச்சாரியாருக்குத்தான். ஆன்மிகப் பெரியவர்கள் சிலர் கேட்கும் கேள்விகளுக்குப் பதில் சொல்லி விட்டு, தமிழ்நாடு அரசைப் பார்த்து கேள்வி எழுப்பட்டும். குறை சொல்லட்டும்.

**ஆதி சங்கராச்சாரியார் நிறுவிய மடங்களில் ஒன்றான பூரியில் உள்ள கோவர்த்தன பீடத்தின் சங்கராச்சாரியார் அவர்கள், “அயோத்தியில் நடக்கும் நிகழ்ச்சிக்கான அழைப்பை எங்கள் மடம் பெற்றுள்ளது, அதில் நான் அங்கு வர விரும்பினால், அதிகபட்சமாக ஒருவருடன் வரலாம் என்று கூறுகிறது. 100 பேருடன் அங்கு இருக்க அனுமதித்திருந்தாலும், அன்று நான் அங்கு சென்றிருக்க மாட்டேன்” என்று சொல்லி இருக்கிறார். ஆளுநர் வகையறா இதற்குப் பதில் சொல்லத் தயாரா?**

**“நான் கடந்த காலத்தில் அயோத்திக்குச் சென்று வந்திருக்கிறேன், மேலும் எதிர்காலத்தில் ராமரை தரிசனம் செய்வதற்காக அதே மத நகரத்திற்குச் செல்வேன், குறிப்பாக பல நூற்றாண்டுகளாக தடைப்பட்ட வேலை இறுதியாக நடந்து கொண்டிருக்கிறது. இருப்பினும், கோவிலில் ராம் லல்லா சிலையை நிறுவுவது சாஸ்திர விதிகளின்படி (நமது சாஸ்திரங்களின் கோட்பாடுகள்) செய்யப்பட வேண்டும். கோவர்தன் பீடம்/மட்டத்தின் அதிகார வரம்பு பிரயாகை வரை பரவியுள்ளது, ஆனால் ஜனவரி 22 மதப் பயிற்சி முழுமைக்கும் எங்களின் ஆலோசனையோ அல்லது வழிகாட்டுதலோ பெறப்படவில்லை. மோடி, சிலையைத் தொட்டு அங்கு நிறுவும் போது, நான் கைதட்டிக் கொண்டு இருக்க முடியாது ”என்று அவர் சொல்வதற்கு இவர்கள் பதில் சொல்லி இருக்க வேண்டும்.**

**ஜோதிர்பீடத்தின் தலைவரும் எதிர்ப்பை பதிவு செய்துள்ளார். ஜோதிர் மடத்தின் 46வது சங்கராச்சாரியார் அவிமுக்தேஷ்வரனந்த் சரஸ்வதி தனது வீடியோவில், “நாங்கள் சொல்வது மோடிக்கு எதிரானது அல்ல. அல்லது வெறுப்பின் காரணமாக அல்ல, மாறாக சாஸ்திர விதியை ( சாஸ்திரங்களின் சடங்குகள் ) பின்பற்றுவதும், அவை பின்பற்றப்படுவதை உறுதி செய்வதும் சங்கராச்சாரியார்களின் கடமையாகும். இங்கு சாஸ்திர விதி புறக்கணிக்கப்படுகிறது. கோவில் முழுமையடையாத நிலையில் பிரான் பிரதிஷ்டா (கும்பாபிஷேகம்) நடப்பது மிகப்பெரிய பிரச்சினை,” என்றார். “இதைச் சொன்னால், நாம் ‘மோடி எதிர்ப்பு’ என்று அழைக்கப்படுகிறோம்” என்றார். இதற்கு பதில் சொல்லத் தயாரா?**

இவர்கள் ஆன்மிகத்துக்கு எதிரானவர்களா? இவர்களை இந்து விரோதிகள் என்று சொல்லி விடுவீர்களா?

## மதுரை மாவட்டம், அலங்காநல்லூர், கீழக்கரையில் ரூ.62.78 கோடியில் கட்டப்பட்டுள்ள

# உலகின் முதல் பிரம்மாண்டமான “கலைஞர் நூற்றாண்டு ஏறுதழுவுதல் அரங்கம்”!

## முத்தமிழறிஞர் கலைஞர் சிலை – முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் திறந்து வைத்தார்!

**மதுரை, ஜன.25-**

**முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (24.1.2024) மதுரை மாவட்டம், அலங்காநல்லூர், கீழக்கரை கிராமத்தில் 66.80 ஏக்கர் நிலப்பரப்பில், 77,683 சதுரஅடி பரப்பளவில் 62.78 கோடி ரூபாய் செலவில் உலகத்தரத்துடன் கட்டப்பட்டுள்ள கலைஞர் நூற்றாண்டு ஏறுதழுவுதல் அரங்கத்தை திறந்து வைத்து, ஏறுதழுவுதல் போட்டிகளை தொடங்கி வைத்து பார்வையிட்டார்.**




முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (24.1.2024) மதுரை மாவட்டம், அலங்காநல்லூர், கீழக்கரை கிராமத்தில் 66.80 ஏக்கர் நிலப்பரப்பில், 77,683 சதுரஅடி பரப்பளவில் 62.78 கோடி ரூபாய் செலவில் உலகின் முதல் பிரம்மாண்டமான ஏறுதழுவுதல் அரங்கமான கலைஞர் நூற்றாண்டு ஏறுதழுவுதல் அரங்கத்தை திறந்து வைத்து, ஏறுதழுவுதல் போட்டியில் வெற்றி பெற்ற வீரர்களுக்கு தங்க மோதிரம் வழங்கி பாராட்டினார். இவ்விழாவில், அமைச்சர் பெருமக்கள், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

தமிழ்ச் சமுதாயத்தின் முக்கிய பண்பாட்டுத் திருவிழாவான பொங்கல் விழாவின்போது, தமிழ்நாடு முழுவதிலும் காளையை இளைஞர்கள் அடக்கும் வீரத்தைப் புலப்படுத்தும் ஜல்லிக்கட்டு விழா நடைபெற்று வருகிறது. தமிழர்தம் வீரத்தையும் பண்பாட்டையும் வெளிப்படுத்தும் விளையாட்டான ஜல்லிக்கட்டு போட்டிகளை நடத்திடும் வகையில் “அலங்காநல்லூரில் ஜல்லிக்கட்டுக்கென்றே தனியாக பிரம்மாண்டமான மைதானம் அமைக்கப்படும்” என்று முதலமைச்சர் அவர்கள் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில், விதி 110ன் கீழ் 21.4.2022 அன்று அறிவிப்பு வெளியிட்டார்.

அந்த அறிவிப்பிற்கிணங்க, அலங்காநல்லூர், கீழக்கரை கிராமத்தில் 66.80 ஏக்கர் நிலப்பரப்பில் ஏறுதழுவுதல் போட்டிகளுக்கென ஒரு பிரம்மாண்டமான அரங்கத்தினைக் கட்டுவதற்காக 3.2.2023 அன்று அரசாணை வெளியிடப்பட்டு, அதற்கென 62 கோடியே 78 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடும் செய்யப்பட்டது.

அதன்படி, குறிப்பிட்ட காலத்திற்குள்ளாக, நவீன வசதிகளுடன் உலகத்தரத்துடன் கட்டப்பட்டுள்ள கலைஞர் நூற்றாண்டு ஏறுதழுவுதல் அரங்கத்தில்:

### வாடிவாசல்

வாடிவாசல் வழியாக காளைகள் அடக்கி பிடிக்கும் பகுதிக்கு விடப்படுகின்றன. இங்கு காளைகள்மற்றும்விளையாட்டுஅமைப்பாளர்களின் பாதுகாப்பை உறுதி செய்யும் அனைத்து பாதுகாப்பு நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன. 6 மீட்டர் நீளமுள்ள வாடிவாசலின் சுவற்றில் ஜல்லிக்கட்டின் சிறப்பினை விளக்கிடும் வண்ண ஓவியங்கள் தீட்டப்பட்டுள்ளன,

### 5000 பார்வையாளர்கள் அமரும் மூன்றடுக்கு மாடம்

இந்த அரங்கில், அரை வட்ட வடிவிலான இருக்கை கொண்ட மூன்றடுக்கு பார்வையாளர் மாடங்கள், தரைமட்ட அளவிலான இருக்கையும் அமைக்கப்பட்டுள்ளன. மேலும், சுமார் 50 நபர்கள் அமரும் வகையில் குளிரூட்டப்பட்ட பார்வையாளர் மாடம் ஒன்றும் அமைக்கப்பட்டுள்ளது.

### காளைகள் காத்திருப்பு மற்றும் தயார்நிலை கூடம்

வாடிவாசல் நுழையும் முன் காளைகள் காத்திருப்பதற்காக இப்பகுதி பயன்படுத்தப்படுகிறது. இப்பகுதியில் ஒரே நேரத்தில் 300 காளைகள் காத்திருக்கும் வகையில் 10,850 சதுர அடி பரப்பளவில் தேவையான தடுப்பு மற்றும் பாதுகாப்பு ஏற்பாடுகளுடன் கட்டப்பட்டுள்ளது,

### காயமடைந்த காளைகளுக்கு சிகிச்சைக்கு கால்நடை மருந்தகம்!

காயமடைந்த காளைகளுக்குஅவசரமருத்துவசிகிச்சை அளித்திடும் வகையில் 1676 சதுர அடி பரப்பளவில் கால்நடை மருந்தகம் ஒன்றும் இங்கு அமைக்கப்பட்டுள்ளது.

### காயமடைந்த வீரர்களுக்கு சிகிச்சை அளித்திட துணை சுகாதார நிலையம்

காயமடைந்த வீரர்களுக்கு உடனடியாக அவசர மருத்துவ சிகிச்சை அளிக்கும் வகையில் 853 சதுர அடி பரப்பளவில் துணை சுகாதார நிலையம் அமைக்கப்பட்டுள்ளது. மேலும், ஏறுதழுவுதல் போட்டி நடைபெறும்போது அவசர மருத்துவ உதவிக்காக 10 அவசரகால ஊர்திகள் இம்மையத்தின் அருகிலேயே நிறுத்தி வைக்கப்படும்.

### அருங்காட்சியகம்1

சிந்து சமவெளி நாகரிகம் முதல் சமகாலம் வரை காளைகள் மற்றும் காளை விளையாட்டுகளின் முக்கியத்துவத்தை வெளிப்படுத்தும் வகையில் 3,390 சதுர அடி பரப்பளவிலான குளிருட்டப்பட்ட அருங்காட்சியகம் அமைக்கப்பட்டுள்ளது. இந்த அருங்காட்சியகத்தில், பண்டைய சங்க கால இலக்கியங்களில் நடந்த காளைகள் மற்றும் காளை விளையாட்டுகள் தொடர்பான சிற்பங்கள், சுவரோவியங்கள், ஓவியங்கள், புகைப்படங்கள், கல்வெட்டுகளின் பிரதிகள் மற்றும் கல்வெட்டுச் சான்றுகள் நிறைந்துள்ளன.

### அருங்காட்சியகம்2, நூலகம் மற்றும் ஒலி – ஒளி காட்சிக்கூடம்

காளைகள் மற்றும் காளை வளர்ப்பவர்களின் உணர்வுபூர்வமான பந்தத்தை பறைசாற்றும் வகையில் 3,821 சதுர அடி பரப்பளவில் ஒரு குளிரூட்டப்பட்ட அருங்காட்சியகம் அமைக்கப்பட்டுள்ளது. மேலும், கலைப் பின்னணியுடன் காளை ரைடருடன் (Bull Rider) குழந்தைகள் விளையாடுவதற்கு ஒரு தனிப் பகுதியும், காளை / மாடுபிடி விளையாட்டு களைப் பற்றிய புத்தகங்கள் மற்றும் பிற இலக்கிய ஆதாரங்களின் நகல்களின் விரிவான தொகுப்புகளுடன் ஒரு பிரத்யேக நூலகமும் அமைக்கப்பட்டுள்ளது. இதில் அரிய பனை ஓலைக் கல்வெட்டுப் பிரதிகளும் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன. காளை விளையாட்டுகள் பற்றிய காட்சிப்படத்தை காண 100 பேர் அமரக்கூடிய ஒலி, ஒளி காட்சிக் கூடமும் அமைக்கப்பட்டுள்ளன.

கலைஞர் நூற்றாண்டு ஏறுதழுவுதல் அரங்கத்தில், முக்கிய பிர முகர்கள் மாடம், ஓய்வறைகள், நிர்வாக அலுவலகம், ஊடகவியலாளர்கள் கூடம், தற்காலிக விற்பனை கூடம், கழிவறைகள், பொருட்கள் வைப்பறை, மாடு பிடி வீரர்கள் தங்கும் மற்றும் உடை மாற்றும் அறை, மின் தூக்கிகள், தீயணைப்பு வசதிகள் போன்ற வசதிகளுடன் கட்டப்பட்டுள்ளது.

மேலும், பிரதான முகப்பு நுழைவு வாயில், உட்புற தார் சாலை வசதிகள், மழைநீர் வடிகால் வசதி, புல் தரை, 50 ஆயிரம் லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை மற்றும் தரைதள நீர்த்தேக்க தொட்டிகள், இரண்டு

ஆழ்குழாய் கிணறுகள், காளைகள் உரிமையாளர்கள் ஓய்விடம், தற்காலிக விற்பனை கூடம், 85,000 சதுர அடிபரப்பளவில் இயற்கையை பிரதிபலிக்கும் வண்ணம் பலவகையான வண்ணங்களுடன் கூடிய செடிகள் கொண்ட தோட்டம் என பல்வேறு வசதிகளுடன் பொதுப் பணித்துறையின் மூலம் இந்த அரங்கம் கட்டப்பட்டுள்ளது.

உலகின் முதல் பிரம்மாண்டமான ஏறுதழுவுதல் அரங்கமான கலைஞர் நூற்றாண்டு ஏறுதழுவுதல் அரங்கத்தை முதலமைச்சர் அவர்கள் திறந்து வைத்து, அங்கு நிறுவப்பட்டுள்ள முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் திருவுருவச் சிலை மற்றும் ஏறுதழுவுதல் சிலையை திறந்து வைத்தார். அதனைத் தொடர்ந்து, தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஏறுதழுவுதல் போட்டியை கொடியசைத்து தொடங்கி வைத்து, பார்வையிட்டார். ஏறுதழுவுதல் போட்டியில் வெற்றி பெற்ற வீரர்களுக்கு தங்க மோதிரம் வழங்கி பாராட்டினார்.

இத்திறப்பு விழாவில், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் இ.பெரியசாமி, பொதுப்பணித் துறை அமைச்சர் எ.வ.வேலு, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர். ராமச்சந்திரன், நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் தங்கம் தென்னரசு, சட்டத் துறை அமைச்சர் எஸ். இரகுபதி, கூட்டுறவுத் துறை அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன், பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை மற்றும் உயர்கல்வித் துறை அமைச்சர் ஆர்.எஸ்.ராஜகண்ணப்பன், சுற்றுலாத் துறை அமைச்சர் கா.ராமச்சந்திரன், வணிகவரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் பி.மூர்த்தி, தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை அமைச்சர் முனைவர் பழனிவேல் தியாகராஜன், ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் திருமதி. என். கயல்விழி செல்வராஜ்,

நாடாளுமன்ற உறுப்பினர்கள் சு.வெங்கடேசன், திருமதி. தமிழச்சி தங்கப்பாண்டியன், சட்டமன்ற உறுப்பினர்கள் கோ. தளபதி, காதர்பாட்சா முத்துராமலிங்கம், ஆ.வெங்கடேசன், மு.பூமிநாதன், முருகேசன், திருமதி.தமிழரசி, அப்துல் வகாப், காந்திராஜன், தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் டாக்டர் க.மணிவாசன், நிதித்துறை முதன்மைச் செயலாளர்

த. உதயச்சந்திரன், பொதுப் பணித் துறை முதன்மைச் செயலாளர் டாக்டர் பி. சந்தர மோகன், மதுரை மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி எம்.எஸ். சங்கீதா, உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், மாடுபிடி வீரர்கள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



சென்னை, தேனாம்பேட்டை டி.எம்.எஸ் வளாகத்தில் உள்ள தொழிலாளர் நல வாரிய கருத்தரங்கு கூட்ட அரங்கில் தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டு துறை அமைச்சர் சி.வெ.கணேசன் தலைமையில் தமிழ்நாடு உடலுழைப்பு தொழிலாளர்கள் சமூக பாதுகாப்பு மற்றும் நல வாரியத்தின் 8 வது வாரிய கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டு துறை அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் குமார் ஜயந்த், முதன்மைச் செயலாளர்/ தொழிலாளர் ஆணையர் முனைவர். அதுல் ஆனந்த் தமிழ்நாடு உடலுழைப்பு தொழிலாளர்கள் சமூக பாதுகாப்பு மற்றும் நல வாரிய செயலாளர் பா.மாதவன் மற்றும் வேலையளிப்போர் தரப்பு பிரதிநிதிகள், தொழிலாளர் தரப்பு பிரதிநிதிகள் மற்றும் உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

பத்தாண்டுகளாக எதையும் செய்யாமல் – கட்டி முடிக்கப்படாத கோயிலை அவசர அவசரமாகத் திறந்து ஏதோ சாதித்ததாகக் காட்டும்

# பா.ஜ.க.வின் திசை திருப்பும் தந்திரத்திற்கு மக்கள் தக்க பதிலடி தருவார்கள்!

## கழகப் பொருளாளர் டி.ஆர். பாலு நூல்கள் வெளியீட்டு விழாவில் முதல்வர் மு.க.ஸ்டாலின் உறுதி!

**சென்னை, ஜன. 25–**

**"எல்லா வகையிலும் மக்களை நசுக்கிய ஆட்சி, பா.ஜ.க. ஆட்சி. அந்தக் கோபம் மக்கள் மனதில் இருக்கிறது. பா.ஜ.க.வின் திசைதிருப்பும் தந்திரங்களுக்கு மக்கள் சரியான பாடம் கொடுப்பார்கள். இது உறுதி! இது பாலுவின் வரலாற்றுப் புத்தகம் மட்டுமல்ல, மற்றவர்களுக்கு வழிகாட்டும் புத்தகம்" என கழகப் பொருளாளரும், நாடாளுமன்றக் குழுத் தலைவருமான டி.ஆர். பாலு அவர்களின் புத்தகங்களை வெளியிட்டு உரையாற்றிய கழகத் தலைவர் – முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டார்.**

கழகத் தலைவரும் – முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (23.01.2024) மாலை சென்னை அண்ணா அறிவாலயத்தில் நடைபெற்ற விழாவில் கழகப் பொருளாளரும் நாடாளுமன்றக் கழகக் குழுத் தலைவருமான டி.ஆர்.பாலு எம்.பி. அவர்களின் நூல்களை வெளியிட்டு விழாத் தலைமையுரை ஆற்றினார்.

விழாவில் முதல்வர் மு.க.ஸ்டாலின் ஆற்றிய உரை வருமாறு :–

இன்று, நமது கழக நாடாளுமன்றக் குழுத் தலைவரும் கழகப் பொருளாளருமான என்னுடைய அருமைச் சகோதரர் டி.ஆர்.பாலு அவர்கள் எழுதியுள்ள 'பாதை மாறாப் பயணம்' புத்தகத்தின் மூன்றாவது பாகத்தை வெளியிடுகிறேன்.

பாலு அவர்களை பற்றி ஒரு வார்த்தையில் சொல்ல வேண்டும் என்றால், சின்சியாரிட்டி! ஏதாவது சொன்னோம் என்றால், அதை முடித்து விட்டுத்தான் அடுத்த போனே செய்வார்.

### கலைஞர் மீது பாலு கொண்ட பற்று!

விருதுநகர் முப்பெரும் விழாவில் நம்முடைய பாலு அவர்களைப் பற்றி நான் பேசியதை, மீண்டும் ஒரு முறை நினைத்துப் பார்க்கிறேன்... 'கலைஞரின் தொண்டரா? தோழரா? செல்லப்பிள்ளையா? உடன்பிறப்பா? பற்றாளரா? வெறியரா? என்னவென்று பாலுவைச் சொல்வது? இது எல்லாம் கலந்த கலவைதான் பாலு' என்று அன்று நான் சொன்னேன்.



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (23.1.2024) சென்னை, அண்ணா அறிவாலயம், கலைஞர் அரங்கில் நடைபெற்ற நிகழ்ச்சியில், கழக நாடாளுமன்ற குழுத் தலைவர் டி.ஆர்.பாலு எழுதிய உரிமைக்குரல், THE MAN AND MESSAGE, MY VOICE FOR THE VOICELESS, பாதை மாறாப் பயணம் (பாகம்3) ஆகிய நூல்களை வெளியிட்டார். இந்நிகழ்ச்சியில், திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி, ஒன்றிய முன்னாள் அமைச்சர் ப.சிதம்பரம், இந்து குழுமத் தலைவர் என்.ராம், கவிப்பேரரசு வைரமுத்து, நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என். நேரு, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் உள்ளிட்ட அமைச்சர் பெருமக்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் டி.ஆர்.பாலு, கனிமொழி கருணாநிதி, சட்டமன்ற உறுப்பினர்கள், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஆர்.எஸ்.பாரதி. டி.கே.எஸ். இளங்கோவன், நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் மேலாண்மை இயக்குநர் க.சந்தானம், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

அன்றைக்கு நான் சுருக்கமாகச் சொன்னதற்கு விளக்கவுரையாக தன்னுடைய தன்வரலாற்றை எழுதி இருக்கிறார் நம்முடைய பாலு! 17 வயதில் தலைவர் கலைஞரின் பேச்சைக் கேட்டு அரசியலுக்கு வந்த பாலுவிற்கு, இப்போது 80 வயது! இன்றைக்கு வரைக்கும், 'ஒரே கொடி ஒரே இயக்கம் ஒரே தலைமை' என்று கொள்கைப் பிடிப்போடு இயங்கிக் கொண்டு இருக்கிறார்.

## எல்லா வகையிலும் மக்களை நசுக்கிய பா.ஜ.க. ஆட்சி மீது மக்கள் மனதில் கோபம் இருக்கிறது!

முதல் பாகத்தில், அரசியலில் அவர் வளர்ந்தது பற்றியும், கழகத்தின் வளர்ச்சிக்காகத் தொண்டாற்றியது பற்றியும் எழுதிய அவர், இரண்டாவது பாகத்தில், அவரால் இந்திய நாடும் நம்முடைய மாநிலமான தமிழ்நாடும் எப்படிப்பட்ட வளர்ச்சியை அடைந்தது என்றும் விரிவாக எழுதியிருக்கிறார்.

கிட்டத்தட்ட 27 ஆண்டுகள் நாடாளுமன்ற உறுப்பினராக, 12 ஆண்டுகள் ஒன்றியத்தில் அமைச்சராக இருந்திருக்கிறார். நாடாளுமன்றத்தின் இரண்டு அவைகளிலும் கழகத்தின் குரலை அவர் கம்பீரமாக ஒலித்திருக்கிறார்.

தமிழ்நாட்டில் ஓடும் தங்கநாற்கரச் சாலையாக இருந்தாலும், தேசிய நெடுஞ்சாலைகளில் இருக்கும் பாலங்களாக இருந்தாலும், இது அனைத்துமே நம்முடைய பாலு அவர்களின் திறமைக்கான மகுடங்கள்!

### ஒன்றிய அமைச்சராக முக்கிய மூன்று துறைகளில் முத்திரை பதித்தவர்!

12 ஆண்டுகள் ஒன்றிய அமைச்சராக இருந்த பாலு, மூன்று முக்கியமான துறைகளில் முத்திரை பதித்தார். ஒன்றிய பெட்ரோலியத் துறை அமைச்சராக இருந்தபோது, தமிழ்நாட்டிற்கு மட்டும் 22 ஆயிரத்து 758 கோடி ரூபாய் மதிப்பிலான 15 பெரிய பெட்ரோலியத் துறை சார்ந்த திட்டங்களை கொண்டு வந்தார்.

சுற்றுச்சூழல் வனத்துறை அமைச்சராக இருந்தபோது, தேசிய பல்வகை உயிரின வளங்கள் ஆணையத்தைத் தமிழ்நாட்டிற்குக் கொண்டு வந்தார். கப்பல் தரைவழிப் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைத் துறை அமைச்சராக இருந்தபோது, 56 ஆயிரத்து 644 கோடி ரூபாய் மதிப்பிலான திட்டங்கள் தமிழ்நாட்டுக்கு வந்தது. தமிழ்நாட்டில் உள்ள தேசிய நெடுஞ்சாலைகளில் மட்டும் 335 பாலங்களைக் கட்டியது பாலுவின் மாபெரும் சாதனை!

### அரசியல் சூழ்ச்சியால் சேது சமுத்திரத் திட்டம் முடக்கம்!

ஆனால், இதையெல்லாம் விடப் பெரிய சாதனையாக வந்திருக்க வேண்டிய ஒன்று இருக்கிறது! அதுதான், பேரறிஞர் அண்ணாவின் கனவுத் திட்டமான சேதுசமுத்திரத் திட்டம்! தலைவர் கலைஞரின் வற்புறுத்தலால் இந்தத் திட்டம் 2004ஆம் ஆண்டு தொடங்கப்பட்டாலும் அடுத்தடுத்து வந்த அரசியல் சூழ்ச்சிகளின் காரணமாக அந்தத் திட்டம் முடக்கப்பட்டது. அந்தத் திட்டம் நிறைவேறி இருந்தால், இந்தியாவின் வளர்ச்சிக்கும் தமிழ்நாட்டின் வளர்ச்சிக்கும் மிக முக்கியமானதாக இன்றைக்கு அமைந்திருக்கும்.

இத்தகைய சாதனைக் களஞ்சியமாக இருக்கிறது டி.ஆர்.பாலு எழுதி இருக்கும் இந்த வாழ்க்கை வரலாறு! அதேபோல ஈழத்தமிழர் விடியலுக்காகத் திராவிட முன்னேற்றக் கழகம் ஆற்றிய பணிகளையும், அதனால் ஆட்சியையே இழந்த தியாகத்தையும் யாராலும் மறக்க முடியாது. இனப்படுகொலை மற்றும் மனித உரிமைக் குற்றச்சாட்டுகளுக்கு ஆளான இலங்கை அரசு மீது விசாரணை நடத்த வேண்டும் என்று வலியுறுத்தி, ஐக்கிய நாடுகள் அவையிடம் கோரிக்கை மனு அளிப்பதற்காக என்னையும், டி.ஆர். பாலுவையும்தான் தலைவர் கலைஞர் அவர்கள் அனுப்பி வைத்தார். ஐ.நா. துணைப் பொதுச்செயலாளர் யான் லியாசன் அவர்களையும், மனித உரிமை ஆணையர் நவநீதம் பிள்ளை அவர்களையும் சென்று சந்தித்து, ஈழத் தமிழர்களுக்காக வாதிட்டோம். இது தொடர்பான முழுமையான செய்திகளை பாலு இந்த நூலில் விளக்கமாக எழுதியிருக்கிறார்.

### கழக வரலாற்றில் என்னையும் – பாலுவையும் பிரித்து எழுத முடியாது!

தலைவர் கலைஞர் அவர்கள் மறைவுற்ற பிறகு நடந்த நிகழ்வுகளைச் சொல்கிறபோது, அது கழக வரலாறாகவும், என்னுடைய வரலாறாகவும் அமைந்துவிட்டது. கழகத்தையும் என்னையும் பாலுவையும் பிரித்து வரலாற்றை எழுத முடியாது! நெருக்கடிக் காலத்திற்கு முன்பு, கோபாலபுரம் பகுதியில் நான் இளைஞர் தி.மு.க. தொடங்கிய நேரத்தில் எனக்குத் துணையாக இருந்தவர். பின்னாளில் நெருங்கிய நண்பர்கள் ஆனோம். இந்த வளர்ச்சிக்குப் பின்னால் இருக்கும் வழித்தடத்தை விளக்கத்தான் இந்தப் 'பாதை மாறாப் பயணம்'! இது பாலுவின் வரலாற்றுப் புத்தகம் மட்டுமல்ல, மற்றவர்களுக்கு வழிகாட்டும் புத்தகம்!

### இந்தியா கூட்டணி பா.ஜ.க.வை வீழ்த்த வலுவானதாக அமைய வேண்டும்!

பா.ஜ.க.வை வீழ்த்தப் போகும் இந்தியா கூட்டணியின் உருவாக்கத்தில் நம்முடைய பாலுவிற்கு மிக முக்கியப் பங்கு இருக்கிறது. இந்தியாவின் எதிர்காலத்தை மனதில் வைத்து, எல்லோரும் கடமையாற்ற வேண்டும்! ஏன் என்றால், நடைபெற இருக்கும் நாடாளுமன்றத் தேர்தல் என்பது, யார் ஆட்சியில் அமரக் கூடாது என்பதற்காக நடைபெறும் தேர்தல்!

> **மக்களைத் திசை திருப்பப் பார்க்கிறது பா.ஜ.க. தலைமை. தேர்தலைச் சந்திக்க இருக்கும் பா.ஜ.க.விற்கு மக்களிடம் சொல்வதற்குச் சாதனை என்று எதுவும் இல்லை. அதனால்தான் முழுவதுமாக கட்டி முடிக்கப்படாத கோயிலை, அவசர அவசரமாகத் திறந்து, எதையோ சாதித்துவிட்டதாகக் காட்ட நினைக்கிறார்கள். இது மாதிரியான திசைதிருப்பும் தந்திரங்களுக்கு மக்கள் சரியான பாடம் கொடுப்பார்கள். இது உறுதி!**

கடந்த பத்தாண்டுகாலமாக, மக்களுக்குக் கொடுத்த எந்த வாக்குறுதியையும் நிறைவேற்றாமல், தமிழ்நாட்டுக்கும், தமிழ்நாட்டு மக்களுக்கும் எதையும் செய்யாமல், பேரிடர் பாதிப்புக்குக் கூட நிதி ஒதுக்காமல் இறுதிக் காலத்தில் ஒரு கோயிலைக் காட்டி, மக்களைத் திசைதிருப்பப் பார்க்கிறது பா.ஜ.க. தலைமை. தேர்தலைச் சந்திக்க இருக்கும் பா.ஜ.க.விற்கு மக்களிடம் சொல்வதற்குச் சாதனை என்று எதுவும் இல்லை. அதனால்தான் முழுவதுமாக கட்டி முடிக்கப்படாத கோயிலை, அவசர அவசரமாகத் திறந்து, எதையோ சாதித்துவிட்டதாகக் காட்ட நினைக்கிறார்கள். இதுமாதிரியான திசைதிருப்பும் தந்திரங்களுக்கு மக்கள் சரியான பாடம் கொடுப்பார்கள். இது உறுதி!

எல்லா வகையிலும் மக்களை நசுக்கிய ஆட்சி, பா.ஜ.க. ஆட்சி. அந்தக் கோபம் மக்கள் மனதில் இருக்கிறது. தமிழ்நாட்டில் நாம் வலுவான கூட்டணியை அமைத்திருப்பது போன்று, இந்தியா முழுமைக்கும் வலுவான கூட்டணியை உறுதி செய்தாக வேண்டும்.

### நாட்டு மக்களைக் காக்கும் அரசாக ஒன்றிய அரசை அமைப்போம்!

இந்தியா கூட்டணிக் கட்சிகள், தங்களுக்குள் தொகுதிப் பங்கீடு பேச்சு வார்த்தையை அந்தந்த மாநிலங்களில் நடத்தி வருவதாக செய்திகள் வருகிறது. விரைவில் எல்லாம் நல்லபடியாக முடிந்து நாட்டு மக்களைக் காப்பாற்ற, தமிழ்நாட்டின் முன்னேற்றத்திற்கு உதவும் ஒரு ஒன்றிய அரசை உருவாக்க நாமெல்லாம் தேர்தல் களத்தில் நுழைகிறோம். அதற்கும், டி.ஆர். பாலு அவர்கள் தயாராக வேண்டும் என்று இந்த நேரத்தில் கேட்டுக் கொள்கிறேன்.

இந்தப் பணிகளை எல்லாம் வெற்றிகரமாக முடித்த பிறகு, இந்த பாதை மாறாப் பயணத்தின் அடுத்தடுத்த பாகங்களை எழுதுவதற்கான வேலைகள் நம்முடைய டி.ஆர்.பாலு அவர்களுக்குக் காத்திருக்கிறது. தமிழ்நாட்டு முன்னேற்ற த்தின் வரலாற்றைச் சொல்ல, திராவிட முன்னேற்றக் கழக வரலாற்றை, தலைவர் முத்தமிழறிஞர் கலைஞரின் வரலாற்றை, இந்தத் திராவிட மாடல் அரசின் வரலாற்றைத் தொடர்ந்து கழகத்தினர் எழுதிக் கொண்டே இருக்க வேண்டும் என்ற வேண்டுகோளை விடுத்து எனது உரையை நிறைவு செய்கிறேன்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உரையாற்றினார்.

---

# ஏற்றுமதி வழிமுறைகளும், சட்ட திட்டங்களும் குறித்த பயிற்சி!

## தமிழ்நாடு அரசு அறிவிப்பு!

*சென்னை, ஜன.25-*

தமிழ்நாடு அரசின் தொழில் முனைவோர் மேம்பாடு மற்றும் புத்தாக்க நிறுவன வளாகத்தில், ஏற்றுமதி இறக்குமதி வழிமுறைகளையும், சட்ட திட்டங்களையும் குறித்த பயிற்சி, வரும் 31.01.2024 முதல் 02.02.2024 தேதி வரை காலை 10.00 மணி முதல் மாலை 5.00 மணி வரை நடைபெற உள்ளது என அரசின் செய்திக் குறிப்பில் கூறப்பட்டுள்ளது.

இப்பயிற்சியில் ஏற்றுமதி சந்தையின் தேவை, கொள்முதலுக்கான வாய்ப்புகள், ஏற்றுமதி இறக்குமதி சம்பந்தப்பட்ட சட்ட திட்டங்கள், வங்கி நடைமுறைகள், அந்நியச் செலாவணியின் மாற்று விகிதங்கள், காப்பீடு குறித்த தகவல்கள், ஏற்றுமதிஇறக்குமதி விதிமுறைகள் மற்றும் ஆவணங்கள், போன்றவை பயிற்றுவிக்கப்படும்.

மேலும், இப்பயிற்சியில் ஏற்றுமதியாளர்களுக்கான ஊக்க உதவிகள் பற்றியும் அவைகளை பெறும் முறைகளைப் பற்றியும் ஆலோசனைகளும், அரசு வழங்கும் உதவிகள் மற்றும் மானியங்கள் ஆகியவையும் விவாதிக்கப்படும்.

ஏற்றுமதி சார்ந்த தொழில் துவங்க விரும்பும் அல்லது தற்போது உற்பத்தி செய்யும் பொருட்களை ஏற்றுமதி செய்ய விரும்பும் 18 வயது நிரம்பிய 10ஆம் வகுப்பு தேர்ச்சி பெற்ற அனைவரும் சேரலாம்.

இப்பயிற்சி பற்றிய கூடுதல் விவரங்களை பெற விரும்புவோர் www.editn.in என்ற வலைதளத்தில் தெரிந்து கொள்ளலாம். மேலும் விவரங்களுக்கு அலுவலக வேலை நாட்களில் (திங்கள் முதல் வெள்ளி வரை) காலை 10 மணி முதல் மாலை 5.45 மணி வரை தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி மற்றும் தொலைபேசி / கைபேசி எண்கள்:

தமிழ்நாடு தொழில் முனைவோர் மேம்பாடு மற்றும் புத்தாக்க நிறுவனம், சிட்கோ தொழிற்பேட்டை, பார்த்தசாரதி கோயில் தெரு, இ.டி.ஐ.ஐ. அலுவலக சாலை ஈக்காட்டுத்தாங்கல், சென்னை-600 032. 44 22252081 / 22252082, 8668102600 / 86681 00181.

அரசு சான்றிதழ் வழங்கப்படும். முன்பதிவு அவசியம்.


இவ்வாறு அரசின் செய்திக் குறிப்பில் கூறப்பட்டுள்ளது.

---

மொழிப்போர்த் தியாகிகளான தாளமுத்து, நடராசன், தருமாம்பாள் நினைவிடத்தில்

# கழக இளைஞர் அணிச் செயலாளர், அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அஞ்சலி!

## கழகத் தோழர்களுக்கு சென்னை வடக்கு மாவட்டச் செயலாளர் தா.இளையஅருணா வேண்டுகோள்!



மொழிப்போர்த் தியாகிகள் வீரவணக்க நாளை முன்னிட்டு, தீந்தமிழ் காக்க தம் தேக்கு தேகங்களை வெந்தழலுக்கு விருந்தாக்கி மறைந்தும், தமிழர் நெஞ்சில் மறவாமல் வாழ்கின்ற வீரமறவர்களாம், தமிழ் காத்த தியாக தீபங்கள் தாளமுத்து, நடராசன் மற்றும் டாக்டர் தருமாம்பாள் ஆகியோருக்கு இன்று (25.1.2024 - வியாழக்கிழமை) காலை 8.30 மணி அளவில் சென்னை மூலக்கொத்தளம் மயானத்தில் உள்ள நினைவிடத்தில், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சரும் கழக இளைஞர் அணிச் செயலாளருமான உதயநிதி ஸ்டாலின், கழக மாணவர் அணிச் செயலாளர் சி.வி.எம்.பி.எழிலரசன், எம்.எல்.ஏ., மாணவர் அணி இணைச் செயலாளர் எஸ்.மோகன் மற்றும் கழக முன்னணியினர் மலர்வளையம் வைத்து வீரவணக்கம் செலுத்துகின்றனர்.

அதுபோது கழக மாநில அமைச்சர் பெருமக்கள், முன்னாள் இந்நாள் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், தலைமைக் கழகச் செயலாளர்கள், தலைமைச் செயற்குழு பொதுக்குழு உறுப்பினர்கள், மாவட்டக் கழக, பகுதிக் கழக, வட்டக் கழக நிர்வாகிகள், மாநகராட்சி மன்ற உறுப்பினர்கள் மற்றும் இளைஞர் அணி, மகளிர் அணி, மாணவர் அணி, இலக்கிய அணி, தொழிலாளர் அணி, வழக்கறிஞர் அணி, தொண்டர் அணி, விவசாய அணி, விவசாயத் தொழிலாளர் அணி, மீனவர் அணி, ஆதிதிராவிடர் நலக்குழு, மகளிர் தொண்டர் அணி, கலை, இலக்கிய பகுத்தறிவுப் பேரவை, மருத்துவர் அணி, பொறியாளர் அணி, சிறுபான்மையினர் நலஉரிமைப் பிரிவு, வர்த்தகர் அணி, தகவல் தொழில்நுட்ப அணி, சுற்றுச்சூழல் அணி, அயலக அணி, அமைப்புசாரா ஓட்டுநர் அணி, விளையாட்டு மேம்பாட்டு அணி ஆகிய அனைத்து அணி நிர்வாகிகள் மற்றும் கழகத் தோழர்கள் அனைவரும் தவறாமல் வருகை தந்து மொழிப்போர்த் தியாக தீபங்களுக்கு அஞ்சலி செலுத்த வேண்டுமென கேட்டுக் கொள்கிறேன்.

**தா.இளையஅருணா**
செயலாளர், சென்னை வடக்கு மாவட்ட தி.மு.க.

---

பத்திரிகையாளர்களுக்கு தமிழ்நாடு அரசு வழங்கும்

# சலுகைகள், இந்தியாவிற்கே வழிகாட்டத் தக்கவை!

## இந்திய பத்திரிகையாளர் கவுன்சில் பாராட்டு!

*சென்னை, ஜன.25-*

புதுடெல்லியில் இருந்து தமிழ்நாட்டிற்கு வருகைதந்திருந்த இந்திய பத்திரிகை கவுன்சில் (Press Council of India) குழுவினர், சென்னை கலைவாணர் அரங்கத்தில் திங்கள் கிழமை (22.1.2024) அன்று தமிழ்நாட்டில் உள்ள அனைத்துப் பத்திரிகை நிறுவனங்களைச் சார்ந்த ஆசிரியர்கள், நிருபர்கள், புகைப்படக்காரர்கள், ஒளிப்பதிவாளர்கள் உள்ளிட்ட அனைவரிடமும் கலந்துரையாடினர். அப்போது தமிழ்நாட்டில் உள்ள பத்திரிகையாளர்கள் நலன்கள் குறித்து, கேட்டு அறிந்தனர்.

நேற்று முன்தினம் (23.01.2024) சென்னை தலைமைச் செயலகத்தில் செய்தி மக்கள் தொடர்புத் துறை இயக்குநர் த.மோகன். இந்திய பத்திரிகை கவுன்சிலின் (Press Council of India) அங்கீகாரத்திற்கான துணைக் குழுவின் ஒருங்கிணைப்பாளர் வினோத் கோஹ்லி மற்றும் உறுப்பினர்கள் ஜெய் சங்கர் குப்தா, கிங்ஷுக் பிராமணிக், பிரசன்ன குமார் மொஹந்தி, எல்.சி.பார்தியா ஆகியோருடன் ஆலோசனை மேற்கொண்டார்.

இக்கூட்டத்தில் செய்தி மக்கள் தொடர்புத் துறை கூடுதல் இயக்குநர் எஸ். செல்வராஜ் உள்ளிட்ட உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

இக்கூட்டத்தில் நடைபெற்ற விரிவான கலந்துரையாடல்களுக்குப் பிறகு தமிழ்நாடு அரசு மூலம் பத்திரிகையாளருக்கு வழங்கப்படும் பல்வேறு சலுகைகள் மற்றும் நலத் திட்டங்கள் குறித்து அறிந்து இந்திய பத்திரிகையாளர் கவுன்சில் அமைப்பினர் மிகவும் மகிழ்ந்தனர். அதாவது,

தமிழ்நாடு அரசு பத்திரிகையாளருக்கு வழங்கும் ஓய்வூதியத் திட்டம்,

பத்திரிகையாளருக்கான குடும்ப ஓய்வூதியத் திட்டம்,

பணிக்காலத்தில் உயிரிழக்கும் பத்திரிகையாளர்களின் குடும்ப உதவிநிதித் திட்டம்,

பத்திரிகையாளர் நலவாரியம் மூலம் வழங்கப்படும் நலத்திட்ட உதவிகள்,

பத்திரிகையாளர் நலநிதியம் மூலம் அளிக்கப்படும் மருத்துவ உதவிகள்,

சிறந்த இதழியலாளருக்கு ஆண்டுதோறும் வழங்கப்படும் ரூ.5 இலட்சம் பரிசுத் தொகையுடன் கூடிய கலைஞர் எழுதுகோல் விருதுத் திட்டம்,

சிறந்த செய்தி வாசிப்பாளருக்கு வழங்கப்படும் தமிழ் உச்சரிப்பு விருதுத் திட்டம் முதலான பல்வேறு திட்டங்கள் மூலம் பத்திரிகையாளர் நலன்களைக் காப்பதில் தமிழ்நாடு அரசு ஆற்றி வரும் பணிகள் இந்திய அளவில் வியந்து பாராட்டத்தக்கவையாகும்.

இத்தகைய திட்டங்களின் மூலம், தமிழ்நாட்டில் பத்திரிகையாளர்களின் நலன்களைக் காப்பதில் தமிழ்நாடு அரசு இந்தியாவில் உள்ள மற்ற மாநிலங்களுக்கு வழிகாட்டியாகவும் முன்னோடியாகவும் திகழ்கிறது என்பதை நாங்கள் அனைவரும் அறிந்து மகிழ்கிறோம்; மனதாரப் பாராட்டுகிறோம் என்று இந்திய பத்திரிகையாளர் கவுன்சில் அமைப்பினர் பாராட்டியுள்ளனர்.

இந்த ஆலோசனையின்போது, தமிழ்நாடு அரசின் செய்தி மக்கள் தொடர்புத்துறையின் மூலம் பத்திரிகையாளர்களுக்கு வழங்கப்பட்டுவரும் அங்கீகார அட்டை தொடர்பாகவும், மேலும், அரசின் மூலம் / பத்திரிகையாளர்களுக்குச் செயல்படுத்தப்பட்டுவரும் நலத்திட்டங்கள் குறித்தும் ஒளிவிளக்கப்படம் (ppt) மூலம் இந்திய பத்திரிகை கவுன்சில் (Press Council of India) அமைப்பினருக்கு விளக்கப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.




முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (24.1.2024) மதுரை மாவட்டம், அலங்காநல்லூர், கீழக்கரை கிராமத்தில் 66.80 ஏக்கர் நிலப்பரப்பில், 77,683 சதுரஅடி பரப்பளவில் 62.78 கோடி ரூபாய் செலவில் உலகின் முதல் பிரம்மாண்டமான ஏறுதழுவுதல் அரங்கமான கலைஞர் நூற்றாண்டு ஏறுதழுவுதல் அரங்கத்தை திறந்து வைத்து, ஏறுதழுவுதல் போட்டியை கொடியசைத்து தொடங்கி வைத்து பார்வையிட்டார். இவ்விழாவில், அமைச்சர் பெருமக்கள், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# மூன்றாண்டு கழக ஆட்சியில் மதுரையில் மூன்று கம்பீரச் சின்னங்கள்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் உரை!... முதல் பக்கத் தொடர்ச்சி!

தமிழ்நாடு முழுவதும் நடந்த போராட்டங்களுக்கு, அ.தி.மு.க. ஆட்சி அடிபணிந்தது. அதன் பிறகு தான் மீண்டும் ஏறுதழுவுதல் போட்டிகளை நடத்துகிற நிலை உருவானது. ஆனாலும், நிரந்தர தீர்வு எட்டப்படவில்லை. ஒவ்வொரு ஆண்டும் அனுமதி தருகிறோம் என்ற பெயரில் ஒன்றிய பா.ஜ.க. அரசு நாடகம் ஆடியது. ஆனாலும், உச்சநீதிமன்றத்தில் வழக்கு நடந்து கொண்டுதான் இருந்தது. அந்த வழக்கில், ஒன்றிய அரசு உச்சநீதிமன்றத்தில் என்ன சொன்னது தெரியுமா?

“ஜல்லிக்கட்டு, மாட்டு வண்டி பந்தயம் உள்ளிட்ட போட்டிகளை நாங்கள் அங்கீகரிக்கவில்லை. மாட்டுவண்டி பந்தயம், ஜல்லிக்கட்டு போட்டியை ஊக்குவிக்கும் திட்டமும் இல்லை. கிராமப்புற வீரர்களை ஊக்குவிக்கும், கேலோ இந்தியா உள்ளிட்ட எந்தத் திட்டத்தின் கீழும் ஜல்லிக்கட்டு இல்லை” என்று தெரிவித்தார்கள் ஒன்றிய அரசு தரப்பில்.

**திராவிட மாடல் அரசு உறுதியாக வாதாடி தீர்ப்பைப் பெற்றது!**

நமது திராவிட மாடல் அரசு நீதிமன்றத்தில் என்ன சொன்னது?

”ஜல்லிக்கட்டு வெறும் பொழுதுபோக்கு போட்டி இல்லை. அது உழவர்களின் வாழ்வோடும், பண்பாட்டோடும் கலந்தது. போட்டிகளை பாதுகாப்பாக நடத்துகிறோம். காளைகளை நமது குடும்பங்கள் கவனத்தோடு வளர்க்கிறோம்” என்று அழுத்தம் திருத்தமாக வாதங்களை வைத்தோம். திராவிட மாடல் அரசின் தீவிர முயற்சியால், ஜல்லிக்கட்டு போட்டிகளை நடத்தலாம் என்ற வரலாற்றுச் சிறப்புமிக்க தீர்ப்பை கடந்த ஆண்டு மே மாதம் உச்சநீதிமன்றத்தில் பெற்றோம்.

> **இந்த பண்பாட்டுத் திருவிழா உலகம் முழுவதும் பேசப்படும் என்று தான், இந்த அரங்கத்தை அமைக்கின்ற முடிவை எடுத்தோம். தலைவர் கலைஞருக்கு ஏறுதழுவதல் போட்டி மேல், தனி பாசம் உண்டு! அதனால்தான், தன்னுடைய மூத்த பிள்ளையான முரசொலியின் சின்னமாக, ஏறுதழுவுதல் காட்சியை வைத்தார்.**

இவ்வளவு தடைகளையும் தி.மு.க. அரசு உடைத்து எறிந்ததால்தான் இன்றைக்கு ஏறுதழுவுதல் போட்டி கம்பீரமாக நடக்கிறது. இந்த சாதனை வரலாற்றின் தொடர்ச்சியாக இந்த கலைஞர் நூற்றாண்டு ஏறுதழுவுதல் அரங்கத்தில், காளைகள், ஏறுதழுவுதல் பற்றிய அருங்காட்சியகமும், நூலகமும் அமைக்கப்பட்டிருக்கிறது.

பல நூற்றாண்டிற்கு முந்தைய நூல்களும், ஓவியங்களும், புகைப்படங்களும் இங்கே இருக்கிறது. இதனை உருவாக்கித் தந்த தமிழ் இணையக் கல்விக் கழகத்துக்கு நன்றி!

**தமிழ்நாடு என பெயர் சூட்டினார் அண்ணா!**

**‘செம்மொழி’ தகுதி பெற்றுத் தந்தார் கலைஞர்!**

அன்னை தமிழ் நிலத்துக்கு பேரறிஞர் அண்ணா “தமிழ்நாடு’ என பெயர் சூட்டினார். தமிழுக்கு ‘செம்மொழி’ தகுதி பெற்று தந்தார் தலைவர் கலைஞர். இன்றைக்கு தமிழர் பண்பாட்டு அடையாளமான ஏறுதழுவுதலுக்கு, நம்முடைய திராவிட மாடல் ஆட்சி அரங்கம் அமைத்திருக்கிறோம்! இந்த தருணத்தில் நான் உங்களிடம் கேட்டுக்கொள்ள விரும்புவது, ”சாதிப் பிளவுகளும், மத வேறுபாடுகளும், தமிழர் ஒற்றுமையை சிதைக்க பிற்காலத்தில் உருவாக்கப்பட்டவை என்பதை உணர்ந்து, தமிழர் என்ற நமது அடையாளத்தோடு இதுபோன்ற பண்பாட்டுத் திருவிழாக்களை ஒற்றுமையாக நடத்துவோம்!”

இந்த அரங்கில், காளைகள் வீரமாக களம் இறங்கட்டும்! காளையர்கள் தீரமாக காளைகளை தழுவட்டும்! தமிழர்கள் அனைவரும் ஒற்றுமை உணர்வோடு கண்டுகளிப்போம்!

தமிழ் வாழ்க! தமிழ்நாடு வாழ்க! வீரவிளையாட்டான ஏறுதழுவுதல் வெல்க!

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உரையாற்றினார்.

**அண்ணா கண்ட தமிழ்நாடு! கலைஞர் பெற்ற செம்மொழி தகுதி!**

**திராவிட மாடல் அரசு தந்த ஏறுதழுவுதல் பிரமாண்ட அரங்கம்!**

---

### குத்தாலம் க. அன்பழகன் – கு.மொழிமாறன் சிறப்புரை!

# பெரம்பலூர் மாவட்ட மாணவரணி சார்பில் வீரவணக்க நாள் பொதுக்கூட்டம்!

## மாவட்டச் செயலாளர் குன்னம் சி.இராஜேந்திரன் அறிக்கை!

*பெரம்பலூர், ஜன. 25-*

பெரம்பலூர் மாவட்ட மாணவரணி சார்பில் மொழிப்போர்த் தியாகிகள் வீரவணக்க நாள் பொதுக்கூட்டம், தேரடி திடலில், இன்று (25.01.2024 - வியாழக்கிழமை), மாலை 6.00 மணியளவில் நடைபெறுகிறது. மாவட்ட மாணவரணி அமைப்பாளர் தங்க.கமல் தலைமையில், மாவட்ட மாணவரணி துணை அமைப்பாளர் பா.ரினோபாஸ்டின் வரவேற்புரையில், மாவட்ட மாணவரணி துணை அமைப்பா ளர்கள் இராகவி ரவிக்குமார், ம. தமிழ்வேந்தன், அ.இளையராஜா ஆகியோர் முன்னிலையில் நடைபெறும் இந்த கூட்டத்தில், கழக கொள்கை பரப்பு துணை செயலாளர் குத்தாலம் க.அன்பழகன் தலைமைக் கழக பேச்சாளர் கு.மொழிமாறன், பெரம்பலூர் சட்டமன்ற உறுப்பினர் எம். பிரபாகரன் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்புரையாற்றுகின்றனர். மொழிப்போர் தியாகி மூங்கில்பாடி ரெங்கராஜிக்கு மரியாதை செலுத்தப்படுகிறது. மாவட்ட மாணவரணி துணை அமைப்பாளர் கிருஷ்ணா. இள.நன்றியுரையாற்றுகிறார்.

இதில் மாநில நிர்வாகிகள், மாவட்ட கழக நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள், பொதுக்குழு உறுப்பினர்கள், ஒன்றிய,நகர, பேரூர் கழகச் செயலாளர்கள், மாவட்ட அனைத்து அணிகளின் அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள், வார்டு, கிளைக் கழக செயலாளர்கள் உள்ளிட்ட அனைவரும் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். குன்னம் சி.இராஜேந்திரன் இவ்வாறு தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

---

# நாடாளுமன்றத் தேர்தல் 2024

# தலைமைக் கழக அறிவிப்பு

தமிழ்நாடு முதலமைச்சர் கழகத் தலைவர் அவர்களின் அறிவுறுத்தலின்படி, நாடாளுமன்றத் தேர்தல் ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம், நேற்று முன்தினம் (22-01-2024) மாலை 5 மணியளவில் சென்னை, அண்ணா அறிவாலயம், முரசொலி மாறன் வளாகத்தில் உள்ள கூட்ட அரங்கில் நடைபெற்றது. இதில் கழக முதன்மைச் செயலாளர் கே.என்.நேரு, அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி, அமைச்சர்கள் எ.வ.வேலு, தங்கம் தென்னரசு, கழக இளைஞர் அணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் ஆகியோர் கலந்து கொண்டனர்.

ஜனவரி 21 அன்று சேலத்தில் நடைபெற்ற தி.மு.க. இளைஞர் அணி 2வது மாநில மாநாட்டில் எழுச்சியுரையாற்றும்போது தமிழ்நாடு முதலமைச்சர் - கழகத் தலைவர் அவர்கள் வழங்கிய அறிவுரையின்படி, நாடாளுமன்றத் தொகுதிக்குட்பட்ட நிர்வாகிகளான பொறுப்பு அமைச்சர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள், மாவட்ட/ மாநகர/ பகுதி/ ஒன்றிய/ நகர/ பேரூர் கழகச் செயலாளர்கள், தொகுதிப் பார்வையாளர்கள், மாநகராட்சி மேயர், துணை மேயர் மற்றும் மண்டலக்குழுத் தலைவர்கள், மாவட்ட ஊராட்சிக் குழு உறுப்பினர்கள், நகர்மன்றத் தலைவர்கள், ஒன்றியக்குழுத் தலைவர்கள், பேரூராட்சித் தலைவர்கள் உள்ளிட்ட “நிர்வாகிகள் சந்திப்பு” கீழ்க்கண்ட அட்டவணைப்படி. சென்னை, அண்ணா சாலை, “அண்ணா அறிவாலயத்தில்” நடைபெறும்.

| தேதி | நேரம் | நாடாளுமன்றத் தொகுதி |
|---|---|---|
| 27.01.2024 | காலை 9.00 மணி | சேலம், கோவை |
| | மாலை 3.00 மணி | நீலகிரி, திருப்பூர் |
| 28.01.2024 | காலை 9.00 மணி | நாமக்கல், ஈரோடு |
| | மாலை 3.00 மணி | பொள்ளாச்சி, தருமபுரி |
| 29.01.2024 | காலை 9.00 மணி | சிவகங்கை, விருதுநகர் |
| | மாலை 3.00 மணி | தென்காசி, திருநெல்வேலி |
| 30.01.2024 | காலை 9.00 மணி | தூத்துக்குடி, கன்னியாகுமரி |
| | மாலை 3.00 மணி | மதுரை, தேனி |
| 31.01.2024 | காலை 9.00 மணி | இராமநாதபுரம், கடலூர் |
| 01.02.2024 | காலை 9.00 மணி | சிதம்பரம், மயிலாடுதுறை |
| | மாலை 3.00 மணி | நாகப்பட்டினம், தஞ்சாவூர் |
| 02.02.2024 | காலை 9.00 மணி | வேலூர், அரக்கோணம் |
| | மாலை 3.00 மணி | விழுப்புரம், கள்ளக்குறிச்சி |
| 03.02.2024 | காலை 10.00 மணி | வடசென்னை, தென் சென்னை |
| | மாலை 3.00 மணி | மத்திய சென்னை, திருபெரும்புதூர் |
| 04.02.2024 | காலை 9.00 மணி | திருவண்ணாமலை, ஆரணி |
| | மாலை 3.00 மணி | பெரம்பலூர், திருச்சி |
| 05.02.2024 | காலை 9.00 மணி | கரூர், திண்டுக்கல் |
| | மாலை 3.00 மணி | காஞ்சிபுரம், புதுச்சேரி |

குறிப்பு: அந்தந்த நாடாளுமன்றத் தொகுதிக்குட்பட்ட நிர்வாகிகள் குறிப்பிடப்பட்டுள்ள நேரத்திற்கு முன்பாகவே அரங்கத்திற்குள் வந்து அமர்ந்திட வேண்டுமென கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை - 18
நாள்- 22.1.2024

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

---

# திருச்சி தெற்கு மாவட்டத்தில் முத்தமிழறிஞர் கலைஞர் சிலை திறப்பு விழா!

## கழக தலைவர் - முதல்வர் இன்று காணொளி காட்சி மூலமாக திறந்து வைக்கின்றார்!

*திருச்சி, ஜன. 25 -*

திருச்சி தெற்கு மாவட்டச் செயலாளர், அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி விடுத்துள்ள அறிக்கை வருமாறு :-

கழகத் தலைவரின் அறிவுறுத்தலின்படி, முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு விழா மிக சிறப்பாக திருச்சி தெற்கு மாவட்டத்தில் வருடம் முழுவதும் கொண்டாடப்பட்டு வருகின்றது. இதன் அடிப்படையில் இதுவரை 75 நிகழ்ச்சிகள் முடிக்கப்பட்டு தற்போது 76வது நிகழ்ச்சியானது, கலைஞர் நூற்றாண்டு விழாவில் மற்றொரு நிகழ்வாக சட்டமன்ற தொகுதிக்கு ஒரு சிலை என்ற அடிப்படையில் திருச்சி தெற்கு மாவட்டத்தில் திருச்சி கிழக்கு தொகுதியில் இன்று (25.01.2024 வியாழக்கிழமை) காலை 8 மணிக்கு திருச்சி கலைஞர் டோல் கேட்டில் அமைந்துள்ள முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் திருவுருவ சிலையை கழக தலைவர், தமிழக முதல்வர் அவர்கள் காணொளி காட்சி வாயிலாக திறந்து வைக்க உள்ளார்கள். விழாவுக்கு கழக முதன்மை செயலாளரும் நகராட்சி நிர்வாக துறை அமைச்சர் கே. என். நேரு முன்னிலையிலும் எனது தலைமையிலும் நடைபெற உள்ளது.



இந்த நிகழ்வில் மாநில, மாவட்ட, மாநகர நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், மாநகர, பகுதி, ஒன்றிய, நகர, பேரூர், வட்ட, வார்டு, கிளைக் கழகச் செயலாளர்கள் மற்றும் நிர்வாகிகள், அணிகளின் அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்கள், மாநகராட்சி, ஒன்றிய நகர, பேரூர் கழக சேர்மன்கள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், கழகத் தொண்டர்களும் பொதுமக்களும் திரளாக கலந்து கொள்ள வேண்டும் என கேட்டுக் கொள்கின்றேன்.

இவ்வாறு அவர் அறிக்கையில் கேட்டுக் கொண்டுள்ளார்.

---

# அறந்தாங்கியில் மாணவரணி - நகர தி.மு.க. சார்பில் பொதுக்கூட்டம்!

## அமைச்சர்கள் எஸ்.ரகுபதி -சிவ.வீ.மெய்யநாதன் மற்றும் ஆரூர் மணிவண்ணன் - வண்ணை புகாரி சிறப்புரை!

*புதுக்கோட்டை, ஜன. 25-*

புதுக்கோட்டை தெற்கு மாவட்ட மாணவரணி மற்றும் அறந்தாங்கி நகர திமுக சார்பில் மொழிப்போர்த் தியாகிகளுக்கு வீரவணக்க நாள் மாபெரும் பொதுக் கூட்டம் இன்று (25.01.2024 - வியாழக்கிழமை) மாலை 05.00 மணியளவில் கலைஞர் பேருந்து நிலையம் அருகில் அறந்தாங்கியில் புதுக்கோட்டை தெற்கு மாவட்ட மாணவரணி அமைப்பாளர் ஆ.கலைச்செல்வன் தலைமையிலும், அறந்தாங்கி நகர கழக செயலாளர் க.இராஜேந்திரன் வரவேற்புரையிலும், நடைபெறுகிறது.

ஆ.பழனிச்சாமி, கே. ராமலிங்கம், கே.வி.ராமசாமி, ஆர்.அனுராதா ராஜேந்திரன், த.அனந்தராமன், டி.ராவுத்தர் கனி, கே.ஏ.கார்த்திகேயன், எஸ்.அருளாந்து, சோ.ஆறுமுகம், சி.காசி நாதன், ம. அன்பழகன், வி.கருணா, வி. ரமேஷ், எஸ். அய்யப்பன், க. மதி, எம்.பழனிராஜன், எம். விவேக்ராஜா, இரா.அடைக்கலராஜா, ஆர்.கல்யாணம், எஸ்.பாஸ்கர், ஆர்.செந்தில்குமார், வி.சுந்தர், செ.மணிவண்ணன், என்.சுபாஸ், என்.ஆர்.டி. ரஜினி ஆகியோர் முன்னிலை வசிக்கின்றனர்.

சட்டம், நீதிமன்றம் ஊழல் தடுப்பு சிறைத்துறை அமைச்சர், புதுக்கோட்டை தெற்கு மாவட்டச் செயலாளர் எஸ்.ரகுபதி, சுற்றுச்சூழல் காலநிலை மாற்றத்துறை அமைச்சர் சிவ.வீ. மெய்யநாதன், தலைமைக் கழக பேச்சாளர்கள் ஆரூர்.மணிவண்ணன், வண்ணை புகாரி ஆகியோர் சிறப்புரை யாற்றுகின்றனர்.

அறந்தாங்கி இராஜன், பரணி இ.ஏ.கார்த்திகேயன், டாக்டர் ரகு அண்ணாமலை, சி.ராமநாதன், உதயம் சண்முகம், அ.சுப்பிரமணியன், ஞான இளங்கோவன், ஸ்ரீதேவி அண்ணாத்துரை, க.அடைக்கலம், ஜெ. அபுதாஹீர், இரா.ஆனந்த், பொன் கணேசன், வே. பொன்துரை,

சக்தி ராமசாமி, எஸ்.எம். சீனியார், ஆர்.ஆர்.கே.கலைமணி, எல்.குமார், த.மணிராஜன், மகேஸ்வரி சண்முகநாதன், கா.உமாதேவி, தி.முத்து, பழ.மாரியப்பன், என்.வீரையா, சு.சத்தியசீலன், தொ.நடராஜன், கோ.சக்திவேல், சு.சுந்தரபாண்டியன், இ.ஏ.பெரிய கருப்பன், ஹரி.விமலாதி, ரம்யா பாலு, பாத்திமா பீவி, எஸ்.அப்துல் ஹமீது, பாக்கியலட்சுமி கார்த்திகேயன், உகே.கே.சி.ராமநாதன், ஒய். ஜே.நஜீமுதீன், சு.சத்தியசீலன், கே.கே.எஸ்.சாகுல் ஹமீது, சரிதா மேகராஜன், எஸ்.. கலைமுகன், பசுமை இல்லம் கண்ணன், ஆ.செல்லத்துரை, வி.சி.செல்வம், வின்சென்ட் ராஜேந்திரன், கைராசி புருஷோத்தமன், பா.காந்திநாதன், பிர.சுப்பையா, எஸ்.பதுர் ஜமான் மற்றும் மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர், வட்ட, கிளைக் கழக நிர்வாகிகள் ஏராளமானோர் கலந்து கொள்கின்றனர். முடிவில் மாவட்ட மாணவரணி துணை அமைப்பாளர் கை. உதய சூரியா, நகர மாணவரணி அமைப்பாளர் எம்.எல். ஆர்.அசோக்ராஜ் ஆகியோர் நன்றி கூறுகின்றனர்.

உயர் கல்வியை மேம்படுத்தும் நோக்கில்

# கல்லூரிகளுக்கு ரூ.96.75 கோடியில் கட்டிடங்கள்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் திறந்து வைத்தார்!

சென்னை, ஜன. 25 -

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின்அவர்கள்22.01.2024 அன்று தலைமைச் செயலகத்தில், உயர்கல்வித் துறை சார்பில், அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள், பொறியியல் கல்லூரிகள், அரசு பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகள் மற்றும் பல்கலைக்கழகங்கள் ஆகியவற்றில் 96 கோடியே 75 இலட்சத்து 49 ஆயிரம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள வகுப்பறைக் கட்டடங்கள், ஆய்வகங்கள், கலையரங்கம், விருந்தினர் மாளிகை, உடற்பயிற்சிக்கூடம், அணுகு சாலை, விடுதிகள், பணிமனைகள், கழிவறை தொகுதிகள், அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிக்கான கட்டடம் போன்ற பல்வேறு கட்டடங்களை காணொலிக் காட்சி வாயிலாக திறந்து வைத்தார்.

தமிழ்நாட்டில் உயர்கல்வியை மேம்படுத்தும் நோக்கில், அதிக எண்ணிக்கையிலான உயர்கல்வி நிறுவ னங்களை தொடங்குதல், அதன் வாயிலாக ஆராய்ச்சி, புதுமைப் படைப்புகள், தொழில்நுட்ப வளர்ச்சி ஆகியவற்றில் மாணவர்களின் திறன்களை வளர்த்து, வேலைவாய்ப்பினை உறுதி செய்தல், தகுதிவாய்ந்த திறன்மிகு இளைஞர்களை உருவாக்குதல், அரசுப் பள்ளிகளில் ஆறாம் வகுப்பு முதல் பன்னிரெண்டாம் வகுப்பு வரை படித்த மாணவிகள் உயர்கல்வி பயில புதுமைப் பெண் திட்டத்தின் கீழ் மாதம் ரூ.1000/ உதவித் தொகை வழங்குதல், முதல் தலைமுறை பட்டதாரிகளுக்கு சலுகைகள், கல்லூரிகள் மற்றும் பல்கலைக்கழகங்களின் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துதல் போன்ற பல்வேறு திட்டங்களை தமிழ்நாடு அரசு செயல்படுத்தி வருவதால் அகில இந்திய அளவில் உயர்கல்வி சேர்க்கையில் தமிழ்நாடு முதலிடம் வகித்து வருகிறது.

இவ்வரசு பொறுப்பேற்ற திலிருந்து இதுநாள்வரை உயர்கல்வித் துறை சார்பில் மொத்தம் 545 கோடி ரூபாய் மதிப்பீட்டிலான வகுப்பறைகள், ஆய்வகங்கள், விடுதிகள் உள்ளிட்ட பல்வேறு கல்விசார் கட்டடங்கள் கட்டப்பட்டு, மாணவர்களின் பயன்பாட்டிற்காக திறந்து வைக்கப்பட்டுள்ளது.

**திருவள்ளூர் மாவட்டம்!**

அந்த வகையில், திருவள்ளூர் மாவட்டம், செவ்வாப்பேட்டை கிராமத்தில் அரசு பல வகை தொழில்நுட்பக் கல்லூரியில் 4 கோடியே 4 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள கலையரங்கம், விருந்தினர் மாளிகை, உடற்பயிற்சிக் கூடம் மற்றும் அணுகு சாலை;

ஈரோடு மாவட்டம், சத்திய மங்கலம் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் 2 கோடியே 94 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள ஆறு ஆய்வகக் கட்டடங்கள் மற்றும் பெருந்துறை, அரசு பலவகை தொழில்நுட்பக் கல்லூரியில் 2 கோடியே 16 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள நான்கு வகுப்பறைகள் மற்றும் இரண்டு ஆய்வகக் கட்டடங்கள்;

சேலம் அரசு பொறியியல் கல்லூரியில் 8 கோடியே 65 இலட்சத்து 98 ஆயிரம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள பெண்கள் விடுதிக் கட்டடம் மற்றும் சேலம் பெரியார் பல்கலைக்கழக வளாகத்தில் 2 கோடி ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள கலைஞர் ஆய்வு மையக் கட்டடம்;

கோயம்புத்தூர் - அரசு தொழில்நுட்பக் கல்லூரியில் 8 கோடியே 65 இலட்சத்து 28 ஆயிரம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள ஆண்கள் விடுதிக் கட்டடம், விழுப்புரம் மாவட்டம், திண்டிவனம் ஆ.கோவிந்தசாமி அரசு கலைக் கல்லூரியில் 2 கோடியே 64 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள 6 ஆய்வகக் கட்டடங்கள், கிருஷ்ணகிரி - அரசு ஆடவர் கலைக் கல்லூரியில் 2 கோடியே 95 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள 6 ஆய்வகக் கட்டடங்கள் மற்றும் 5 கழிவறை தொகுதி கட்டடங்கள்;

கள்ளக்குறிச்சி அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிக்கு 12 கோடியே 43 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள கல்வி சார் கட்டடம், கிருஷ்ணகிரி மாவட்டம், பர்கூர் அரசு பொறியியல் கல்லூரியில் 4 கோடியே 84 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள முதுகலை மாணவர்களுக்கான வகுப்பறைகள் மற்றும் ஆய்வகக் கட்டடங்கள்;

**திருவண்ணாமலை மாவட்டம்**

திருவண்ணாமலை மாவட்டம், நாகப்பாடி அரசு பலவகை தொழில்நுட்பக் கல்லூரியில் 2 கோடியே 93 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள 2 வகுப்பறைகள் மற்றும் 3 ஆய்வகக் கட்டடங்கள், பணிமனை மற்றும் உடல் ஊனமுற்றோருக்கான கழிப்பறை கட்டடம் மற்றும் செய்யாறு அறிஞர் அண்ணா அரசு கலைக் கல்லூரியில் 5 கோடியே 28 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள 12 ஆய்வகக் கட்டடங்கள்;

தென்காசி மாவட்டம், சங்கரன்கோவில் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிக்கு 11 கோடியே 33 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள கட்டடம், திருநெல்வேலி அண்ணா பல்கலைக்கழக மண்டல வளாகத்தில் 8 கோடியே 2 இலட்சத்து 23 ஆயிரம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள பணிமனை கட்டடம்;

**மதுரை மீனாட்சி கல்லூரி!**

கன்னியாகுமரி மாவட்டம், நாகர்கோவில் அரசு பலவகை தொழில்நுட்பக் கல்லூரி வளாகத்தில் 2 கோடியே 86 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள 6 கூடுதல் வகுப்பறைகள் மற்றும் 2 ஆய்வகங்கள், தூத்துக்குடி மாவட்டம், எட்டயபுரத்தில் பாரதியார் நூற்றாண்டு நினைவு அரசு மகளிர் பலவகை தொழில்நுட்பக் கல்லூரி வளாகத்தில் 2 கோடியே 18 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள 5 வகுப்பறைகள் மற்றும் 2 ஆய்வகங்கள்;

திருச்சிராப்பள்ளி, சேதுராபட்டி அரசு பல வகை தொழில்நுட்பக் கல்லூரியில் 2 கோடியே 18 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள 3 வகுப்பறைகள், 1 ஆய்வகம் மற்றும் கூடுதல் பணிமனைக் கட்டடம் மற்றும் திருச்சிராப்பள்ளி அரசு கலைக் கல்லூரி மற்றும் பெரியார் ஈ.வெ.ரா. கல்லூரியில் தலா 2 கோடியே 66 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள 14 கூடுதல் வகுப்பறை கட்டடங்கள்;

மதுரை ஸ்ரீ மீனாட்சி அரசு மகளிர் கலைக் கல்லூரியில் 2 கோடியே 99 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள 16 கூடுதல் வகுப்பறை கட்டடங்கள், விருதுநகர் மாவட்டம், சிவகாசி அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் 2 கோடியே 35 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள 12 வகுப்பறைகள் மற்றும் பெண்கள் கழிப்பறை தொகுதி கட்டடங்கள்;

என மொத்தம் 96 கோடியே 75 இலட்சத்து 49 ஆயிரம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள உயர் கல்வித்துறை கட்டடங்களை முதலமைச்சர் அவர்கள் திறந்து வைத்தார்.

இந்த நிகழ்ச்சியில், பொதுப்பணித் துறை அமைச்சர்எ.வ. வேலு, பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை மற்றும் உயர்கல்வித் துறை அமைச்சர் ஆர்.எஸ்.ராஜ கண்ணப்பன், தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, உயர்கல்வித் துறை முதன்மைச் செயலாளர் ஆ.கார்த்திக், தொழில் நுட்பக்கல்வி ஆணையர் கே. வீர ராகவ ராவ், கல்லூரி கல்வி இயக்குநர் (மு.கூ.பொ) முனைவர் கீதா மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

காணொலிக் காட்சி வாயிலாக திருநெல்வேலி மாவட்டத்திலிருந்து சட்டமன்ற உறுப்பினர் மு. அப்துல் வஹாப், திருநெல்வேலி மாநகராட்சி மேயர் பி.எம். சரவணன், மாவட்ட வருவாய் அலுவலர் திருமதி எம். சுகன்யா, துணை மேயர் கே.ஆர். ராஜு, திருநெல்வேலி அண்ணா பல்கலைக்கழக மண்டல புல முதல்வர் முனைவர் செண்பக விநாயக மூர்த்தி மற்றும் அரசு உயர் அலுவலர்களும்; தென்காசி மாவட்டத்திலிருந்து நாடாளுமன்ற உறுப்பினர் தனுஷ் எம். குமார், சட்டமன்ற உறுப்பினர் ஈ.ராஜா, மாவட்ட ஆட்சித் தலைவர் துரை. ரவிசந்திரன், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

---

மொழிப்போர்த் தியாகிகள் வீரவணக்க நாள் - மாபெரும் பொதுக்கூட்டம்

# கண்டோன்மெண்ட் பல்லாவரத்தில் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் இன்று எழுச்சியுரை!

## மாவட்டம் முழுவதிலும் இருந்து கழகத்தினர் அலைகடலெனத் திரண்டு வாரீர்!

## மாவட்டச் செயலாளர் - அமைச்சர் தா.மோ.அன்பரசன் வேண்டுகோள்!



காஞ்சிபுரம், ஜன.25-

காஞ்சிபுரம் வடக்கு மாவட்டம், கண்டோன்மெண்ட் பல்லாவரத்தில் இன்று (25ஆம் தேதி) மாலை நடைபெறும் மொழிப்போர்த் தியாகிகளுக்கு வீர வணக்க நாள் மாபெரும் பொதுக்கூட்டத்தில் கழக இளைஞரணி செயலாளர், அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பங்கேற்று எழுச்சியுரையாற்றுகிறார். வரலாற்றுச் சிறப்புமிக்க இப்பொதுக் கூட்டத்திற்கு காஞ்சிபுரம் வடக்கு மாவட்டம் முழுவதிலும் இருந்து கழகத் தோழர்கள் அனைவரும் பல்லாயிரக்கணக்கில் அலைகடலென திரண்டு வந்து பங்கேற்று இதுவரை இவ்வளவு பெரிய கூட்டம் கூடியதில்லை என்ற சரித்திர சாதனையை படைக்கும் வகையில் பல்லாயிரக்கணக்கில் கழகத்தினர் அலைகடலென திரண்டு வர வேண்டும் என்று காஞ்சிபுரம் வடக்கு மாவட்டச் செயலாளர், குறு சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ. அன்பரசன் அழைப்பு விடுத்துள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கை வருமாறு:-

காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் மொழிப்போர்த் தியாகிகளுக்கு வீர வணக்க நாள் மாபெரும் பொதுக் கூட்டம் இன்று (25-ஆம் தேதி-வியாழக்கிழமை) மாலை 6.00 மணியளவில், கண்டோன்மெண்ட் பல்லாவரம், இராஜேந்திரபிரசாத் சாலை, தெரசா பள்ளி அருகில் எனது (தா.மோ.அன்பரசன்) தலைமையிலும், மாவட்டக் கழக அவைத் தலைவர் த.துரைசாமி, மாவட்ட துணைச் செயலாளர்கள் இ.கருணாநிதி எம்.எல்.ஏ., வரலட்சுமி மதுசூதனன் எம்.எல்.ஏ., து. மூர்த்தி மற்றும் மாவட்ட பொருளாளர் வெ. விசுவநாதன் ஆகியோர் முன்னிலையிலும், கண்டோன்மெண்ட் நகர செயலாளர் டி.பாபு வரவேற்புரையிலும் நடைபெற உள்ளது.

இம்மாபெரும் பொதுக் கூட்டத்தில், இளைஞர்களின் இதயம் கவர்ந்த இனிய தலைவர், எங்கள் இளம் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பங்கேற்று எழுச்சியுரையாற்றுகிறார்.

கழகப் பொருளாளர் டி.ஆர்.பாலு எம்.பி., கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி, காஞ்சிபுரம் தொகுதி நாடாளுமன்ற உறுப்பினர் க.செல்வம், எம்.பி, தலைமை தீர்மானக் குழு செயலாளர் மீ.அ.வைதியலிங்கம், தாம்பரம் மாநகர செயலாளர் எஸ்.ஆர்.ராஜா எம்.எல்.ஏ, தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் வீ.தமிழ்மணி, ஜி.சி.அன்புச் செழியன், க.அன்புச்செல்வன், ஆதிமாறன்,

காஞ்சிபுரம் மாவட்ட ஊராட்சி தலைவர் படப்பை ஆர்.மனோகரன், செங்கல்பட்டு மாவட்ட ஊராட்சி தலைவர் செம்பருத்தி துர்கேஷ், தாம்பரம் மாநகராட்சி மேயர் க.வசந்தகுமாரி, தாம்பரம் மாநகராட்சி துணை மேயர் கோ.காமராஜ், மற்றும் பகுதி - ஒன்றிய - நகர - பேரூர் செயலாளர்கள், கழக பொதுக்குழு உறுப்பினர்கள், கழக அணிகளின் மாநில - மாவட்ட நிர்வாகிகள், நகராட்சி - பேரூராட்சித் தலைவர், துணைத் தலைவர் உள்ளிட்ட உள்ளாட்சி மன்றப் பிரதிநிதிகள் ஆகியோர் இக்கூட்டத்தில் பங்கேற்று சிறப்பிக்கின்றனர்.

நிறைவாக மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் கோல்டு டி.பிரகாஷ் மாவட்ட மாணவரணி அமைப்பாளர் எல்.பிரபு, தாம்பரம் மாநகர இளைஞரணி அமைப்பாளர் எஸ்.சத்தியபிரபு ஆகியோர் நன்றி உரை ஆற்றுகின்றனர்.

கடலில்லா சேலத்தில் கழக இளைஞர் அணியினரின் தலைகளே கடலாக காட்சி அளித்த சேலத்தில் நடைபெற்ற இளைஞர் பட்டாளத்தின் எழுச்சி மாநாட்டை வெற்றிகரமாக நடத்தி காட்டி, சரித்திர சாதனை படைத்த நம்முடைய நெஞ்சம் நிறைந்த இளைய தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் வெற்றி வீரராக, நம்முடைய காஞ்சிபுரம் வடக்கு மாவட்டம், கண்டொன்மெண்ட் பல்லாவரத்தில் பங்கேற்று உரையாற்றுகிறார் என்ற செய்தியை அறிந்தவுடன் மாவட்டத்தில் உள்ள ஒவ்வொரு கழக தொண்டர்களும் மட்டற்ற மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

இளைஞர்களின் இதயம் கவர்ந்த இனிய தலைவர் உதயநிதி அவர்கள் நாளை கண்டோன்மெண்ட் பல்லாவரத்தில் பங்கேற்கும் மாபெரும் பொதுக்கூட்டத்தை திறந்த வெளி மாநாடு போல மிகவும் எழுச்சியுடன் பிரம்மாண்டமான மேடை அமைத்து நடத்திட ஏற்பாடுகள் செய்துள்ளோம்.

கோலாகலமாக நடைபெறும் இப்பொதுக்கூட்டத்தில் காஞ்சிபுரம் வடக்கு மாவட்டம் முழுவதிலும் இருந்து மாநகர பகுதி - ஒன்றிய - நகர - பேரூர் - சிற்றூர்களில் இருந்தும் கழகத் தோழர்கள் அனைவரும் பல்லாயிரக்கணக்கில் அணி திரண்டு வந்து பங்கேற்று, காஞ்சிபுரம் வடக்கு மாவட்டக் கழக வரலாற்றில் இவ்வளவு பெரிய கூட்டம் கூடியதில்லை என்று வரலாற்று சாதனையை படைக்கும் வகையில், மாவட்டத்தில் உள்ள ஒட்டு மொத்த கழகத் தோழர்களும் அலைகடலென திரண்டு வந்து பங்கேற்று புதியதோர் வரலாற்றை படைத்திட வேண்டும் என்று அனைவரையும் அன்புடன் அழைக்கிறேன்.

இந்திய திருநாடே போற்றி பாராட்டும் வகையில், 5 லட்சம் இளைஞர்கள் அலை கடலென திரண்டு பங்கேற்ற, இளைஞர் பட்டாளத்தின் எழுச்சி மாநாட்டை சேலத்தில் வெற்றிகரமாக நடத்தி காட்டி, கின்னஸ் வரலாற்றில் இடம்பிடித்த தன்னிகரில்லா இளம் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பங்கேற்கும் இம்மாபெரும் பொதுக் கூட்டத்தில் கலந்து கொள்வது, “நமது உரிமை” “நமது கடமை” என்ற அந்த உணர்வோடு, காஞ்சிபுரம் வடக்கு மாவட்டம் முழுவதிலும் இருந்து கழகத் தோழர்கள் அனைவரும் இன்று (25-ஆம் தேதி மாலை 5.00 மணிக்கெல்லாம் கண்டோன்மெண்ட் பல்லாவரத்திற்கு அலைகடலென திரண்டு வந்திட வேண்டும் என்று அன்பு வேண்டுகோள்விடுக்கிறேன்.

கண்டோன்மெண்ட் பல்லாவரத்தில், கண்ணுக்கு எட்டிய தூரம் வரை மக்கள் கடல் வெள்ளம் புகுந்தது போல காட்சியளிக்கின்ற வகையில் மாவட்டத்தில் உள்ள ஒட்டு மொத்த கழகத்தினரும் திரண்டு வந்து பங்கேற்று, பேரறிஞர் அண்ணா பிறந்த மாவட்டத்திற்கு பெருமை சேர்ப்போம் என இருகரம் கூப்பி அழைக்கின்றேன்.

“இப்படை தோற்கின் எப்படை வெல்லும்” என்ற பேரறிஞர் அண்ணாவின் வைர வரிகளுக்கு ஒப்பாக கண்டோன்மெண்ட் பல்லாவரத்தில் கழக தீரர்கள் பெரும் படை கூடியது என்ற வரலாற்று சாதனையை படைத்திடும் வகையில், கண்டோன்மெண்ட் பல்லாவரமே குலுங்கிடும் வகையில், காஞ்சிபுரம் வடக்கு மாவட்டத்தில் உள்ள ஒட்டு மொத்த கழகத்தினரும் பொது மக்களும் எழுச்சியுடன் திரண்டு புதிய சரித்திரம் படைப்போம் வாரீர்! வாரீர்!! என்று அனைவரையும் மனம் மகிழ்ந்து அன்புடன் அழைக்கின்றேன்.

இவ்வாறு அமைச்சர் தா.மோ.அன்பரசன் அறிக்கையில் கூறியுள்ளார்.

---

# நாடாளுமன்றத் தேர்தல் - 2024

## ‘நாடாளுமன்றத் தேர்தல் அறிக்கை தயாரிக்கும் குழு’வினரின் சுற்றுப்பயணம்

# தலைமைக் கழக அறிவிப்பு

தமிழ்நாடு முதலமைச்சர் **கழகத் தலைவர்** அவர்களின் அறிவுறுத்தலின்படி, நேற்று முன்தினம் (23-01-2024) பகல் 12.00 மணியளவில், சென்னை, அண்ணா அறிவாலயம், முரசொலி மாறன் வளாகத்தில் உள்ள கூட்ட அரங்கில், நாடாளுமன்றத் தேர்தல்; தேர்தல் அறிக்கை தயாரிக்கும் குழுக் கூட்டம் துணைப் பொதுச்செயலாளர் திருமிகு கனிமொழி கருணாநிதி, எம்.பி., அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் தலைமைக் கழக செய்தி தொடர்பு தலைவர் டி.கே.எஸ்.இளங்கோவன், விவசாய அணிச் செயலாளர் ஏ.கே.எஸ்.விஜயன், சொத்து பாதுகாப்புக்குழுச் செயலாளர் பி.டி.ஆர்.பழனிவேல் தியாகராஜன், தகவல் தொழில்நுட்ப அணிச் செயலாளர் டி.ஆர்.பி.இராஜா, வர்த்தகர் அணி துணைத் தலைவர் கோவி.செழியன், மாநிலங்களவை கழக உறுப்பினர் கே.ஆர்.என்.ராஜேஸ்குமார், மாணவர் அணிச் செயலாளர் சி.வி.எம்.பி.எழிலரசன், எம்.எல்.ஏ., அயலக அணிச் செயலாளர் எம்.எம்.அப்துல்லா, எம்.பி., மருத்துவர் அணிச் செயலாளர் மருத்துவர் எழிலன் நாகநாதன், எம்.எல்.ஏ., சென்னை மாநகர மேயர் திருமதி பிரியா ஆகியோர் கலந்து கொண்டனர்.

தமிழ்நாடு முதலமைச்சர் கழகத் தலைவர் அவர்கள் வழங்கிய அறிவுரையின்படி, நாடாளுமன்றத் தேர்தல் அறிக்கை தயாரிக்கும் குழு கீழ்க்கண்ட அட்டவணைப்படி பயணம் மேற்கொண்டு, தொழிற்துறையினர், கல்வியாளர்கள், மீனவர்கள், சிறுகுறு தொழில் முனைவோர்கள், புலம்பெயர்ந்த தொழிலாளர்கள், மாணவர் சங்கங்கள், சூழலியலாளர்கள், மருத்துவர்கள், தொண்டு நிறுவனங்கள், அரசு மற்றும் தனியார் துறை ஊழியர்கள், பொதுமக்கள் மற்றும் கழக நிர்வாகிகள் உள்ளிட்ட அனைத்து தரப்பினரையும் நேரடியாக சந்தித்து, அவர்களின் கோரிக்கைகளை பெறுவார்கள்.

## தேர்தல் அறிக்கை தயாரிப்புக்குழு சுற்றுப்பயண விவரம்

| தேதி | நகரம் |
|---|---|
| 2024 பிப்ரவரி-5 | தூத்துக்குடி |
| “ பிப்ரவரி-6 | கன்னியாகுமரி |
| “ பிப்ரவரி-7 | மதுரை |
| “ பிப்ரவரி-8 | தஞ்சாவூர் |
| “ பிப்ரவரி-9 | சேலம் |
| “ பிப்ரவரி-10 | கோயம்புத்தூர் |
| “ பிப்ரவரி-11 | திருப்பூர் |
| “ பிப்ரவரி-16 | ஓசூர் |
| “ பிப்ரவரி-17 | வேலூர் |
| “ பிப்ரவரி-18 | ஆரணி |
| “ பிப்ரவரி-20 | விழுப்புரம் |
| “ பிப்ரவரி-21, 22, 23 | சென்னை |

குறிப்பு: மேற்குறிப்பிட்டுள்ள நகரங்களில் கழக தேர்தல் அறிக்கை தயாரிப்புக்குழு வருவதற்கு முன்பாக, இக்குழு வருவதை உள்ளூர் பத்திரிகைகளில் விளம்பரப்படுத்துவதோடு, கோரிக்கை மனு பெறுவதற்கான இடவசதி உள்ளிட்ட அனைத்து வசதிகளை ஏற்படுத்த வேண்டுமென அந்தந்த மாவட்டக் கழகச் செயலாளர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை - 18
நாள்- 23.1.2024

**தலைமைக் கழகம்**
தி.மு.க.

---

மதுரை மாநகர் மாவட்ட தி.மு.க. சார்பில்

# அன்பு (எ) துரை கோபால்சாமி தலைமையில் வீரவணக்க நாள் பொதுக்கூட்டம்!

## கம்பம் செல்வேந்திரன் – தளபதி எம்.எல்.ஏ. சிறப்புரை!

மதுரை, ஜன. 25-

மதுரை மாநகர் மாவட்ட தி.மு.க. மாணவர் அணி சார்பாக மொழிப்போர் தியாகிகள் தினத்தை முன்னிட்டு மாபெரும் வீரவணக்க நாள் இன்று பொதுக் கூட்டம்(25.01.2024- வியாழக் கிழமை) மாலை 6 மணி அளவில் மதுரை கோ. புதூரில் நடைபெற உள்ளது. இந்த பொதுக்கூட்டத்திற்கு மாநகர் மாவட்ட மாணவர் அணி அமைப்பாளர் த.அன்பு என்ற துரை கோபால்சாமி தலைமை வகிக்கின்றார். முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் கம்பம் செல்வேந்திரன், மதுரை மாநகர் மாவட்டச் செயலாளர் கோ.தளபதி எம்.எல்.ஏ., தலைமைக் கழக பேச்சாளர் சேலம் ஜான் பாட்ஷா, மாநில மாணவர் அணி துணை அமைப்பாளர் அதலை பி.செந்தில்குமார் ஆகியோர் சிறப்புரையாற்றுகின்றார்கள்.

வட்டச் செயலாளர் ஏ.வேலு, ஏ.கே.ஆறுமுகம், மாமன்ற உறுப்பினர் அந்தோணியம்மாள் ஆகியோர் முன்னிலை வகிக்க உள்ளனர். மாணவர் அணி துணை அமைப்பாளர்கள் திருப்பதி, ஹரிசங்கர், நித்தியா, மதன்மோகன் ஆகியோர் வரவேற்புரை நிகழ்த்த உள்ளனர்.

கழக தணிக்கை குழு உறுப்பினர் வ.வேலுசாமி, கழக உயர்நிலை செயல் திட்டக் குழு உறுப்பினர் பெ.குழந்தைவேலு, தலைமை செயற்குழு உறுப்பினர்கள் மா.ஜெயராம், கே.தனசெல்வம், மாநகராட்சி மேயர் இந்திராணி பொன்வசந்த், மாநகர் மாவட்ட கழக நிர்வாகிகள் மா. ஒச்சுபாலு, சி.சின்னம்மாள், ஆர்.முருகவேல், மாநில நிர்வாகிகள் அக்ரி கே.பி.டி. கணேசன், சம்மட்டிபுரம் ஆர்.கணேசன், பி.பாக்கியநாதன், சி. வீரகணேசன், இளைஞரணி ஏ.ஆர்.சௌந்தர்ராஜன் ஆகியோர் வாழ்த்துரை வழங்க உள்ளனர். மேலும் மாநில பொதுக்குழு, பகுதி கழக, வட்டக் கழக நிர்வாகிகள் அனைத்து அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், மாமன்ற உறுப்பினர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள், கழக முன்னோடிகள், கழகத்தினர் என பெரும் திரளானோர் பங்கேற்க உள்ளனர்.

இந்நிகழ்ச்சியில் துணை அமைப்பாளர் சந்துரு நன்றியுரை ஆற்ற உள்ளார்.




மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் நேற்று முன்தினம் (23.01.2024) கோடம்பாக்கம் மண்டலம், வார்டு–142, மேற்கு மாம்பலம், கே.பி. திருமண மண்டபத்தில் நடைபெற்ற மக்களுடன் முதல்வர் சிறப்பு முகாமினைத் தொடங்கி வைத்து மக்களின் மனுக்களின் மீது உடனடி தீர்வு காணப்பட்ட 31 பயனாளிகளுக்கு உரிய சான்றிதழ் மற்றும் ஆணைகளை வழங்கினார். இந்நிகழ்வின்போது, மத்திய வட்டார துணை ஆணையாளர் கே.ஜெ.பிரவீன் குமார், மண்டலக்குழுத் தலைவர் எம்.கிருஷ்ணமூர்த்தி, மாமன்ற உறுப்பினர்கள் எம்.ஸ்ரீதரன், ப.சுப்பிரமணி, மண்டல அலுவலர் மற்றும் அலுவலர்கள் உடனிருந்தனர்.



உணவு மற்றும் உணவுப் பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர.சக்கரபாணி திண்டுக்கல் மாவட்டம், பழனி தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயிலில் நவீன வசதிகளுடன் கூடிய மூன்றாவது மின் இழுவை ரயில் சேவையினை பொதுமக்கள் பயன்பாட்டிற்காக நேற்று(24.01.2024)துவக்கிவைத்தார். அருகில்திண்டுக்கல்நாடாளுமன்றஉறுப்பினர்ப.வேலுச்சாமி,பழனிசட்டமன்றஉறுப்பினர் இ.பெ.செந்தில்குமார், அறங்காவலர் குழு தலைவர் க.சந்திரமோகன், அறங்காவலர்கள் கே.எம்.சுப்பிரமணியன், ச.மணிமாறன், ரா.ராஜசேகரன், திருமதி கே.சத்யா, பழனி தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில் இணை ஆணையர் மாரிமுத்து உட்பட பலர் உள்ளனர்.




தூத்துக்குடி மற்றும் திருநெல்வேலி மாவட்டங்களில் ஏற்பட்ட பெருவெள்ளத்தில் மீட்பு மற்றும் நிவாரணப் பணிகளில் ஈடுபட்ட திருநெல்வேலி,தூத்துக்குடி, கன்னியாகுமரி, இராமநாதபுரம் ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த மீனவர்களுக்கு,தமிழ்நாடு அரசின் மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை சார்பில் பாராட்டு விழா சனிக்கிழமை,தூத்துக்குடியில் உள்ள மாணிக்கம் மஹாலில் நடைபெற்றது. இதில், தி.மு.க. துணைப் பொதுச் செயலாளரும், தி.மு.க. நாடாளுமன்றக் குழு துணைத் தலைவருமான கனிமொழி கருணாநிதி கலந்துகொண்டு பேருரையாற்றி, மீட்பு பணிகளில் ஈடுபட்ட மீனவர்களுக்கு பாராட்டுச் சான்றிதழ்களை வழங்கினார். உடன், அமைச்சர் பெருமக்கள் பெ.கீதா ஜீவன், அனிதா ஆர். ராதாகிருஷ்ணன், சட்டமன்ற உறுப்பினர்கள் எம்.சி.சண்முகையா, ஜி.வி.மார்க்கண்டேயன், மாவட்ட ஆட்சியர் லெட்சுமிபதி, மீன்வளம் – மீனவர் நலன் ஆணையர் பழனிசாமி, மாநகராட்சி மேயர் ஜெகன் பெரியசாமி, மாவட்ட பஞ்சாயத்து தலைவர் அ.பிரம்மசக்தி மற்றும் பலர் கலந்துகொண்டனர்.

### பழனி தண்டாயுதபாணி திருக்கோயிலில்

# நவீன வசதிகளுடன் மூன்றாவது மின் இழுவை ரயில் சேவை!

## அமைச்சர் அர.சக்கரபாணி துவக்கி வைத்தார்!

திண்டுக்கல், ஜன.25-

திண்டுக்கல் மாவட்டம், பழனி அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயிலில் நவீன வசதிகளுடன் கூடிய மூன்றாவது மின் இழுவை ரயில் சேவையினை, கிழக்கு மாவட்ட செயலாளர் பழனி சட்டமன்ற உறுப்பினர் இ.பெ. செந்தில்குமார் பாராளுமன்ற உறுப்பினர் வேலுச்சாமி ஆகியோர் முன்னிலையில் பொதுமக்கள் பயன்பாட்டிற்கு துவக்கி வைத்தார்.

இந்த விழாவில், அமைச்சர் அர.சக்கரபாணி தெரிவித்ததாவது தமிழ்நாடு முதலமைச்சர் பொறுப்பேற்றது முதல் எல்லோருக்கும் எல்லாம் கிடைக்கும் வகையில் சிறப்பான ஆட்சி செய்து கொண்டிருக்கிறார். தமிழக மக்களின் நலனுக்காக பல்வேறு திட்டங்களை அறிவித்து தொடர்ந்து செயல்படுத்தி வருகிறார்கள். தமிழகம் முழுவதும் கோயில்களில் திருப்பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அந்த வகையில் பழனி தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயிலில் பக்தர்களின் வசதிக்காக பல்வேறு திட்டப்பணி கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

பழனி தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயிலில் மூன்று மின் இழுவை இரயில்கள் பக்தர்கள் பயன்பாட்டில் உள்ளன. முதலாவது மின் இழுவை இரயில் 1966ஆம் ஆண்டு நிறுவப்பட்டது. இதில் ஒரு முறை 40 பக்தர்கள் வீதம் நாள் ஒன்றுக்கு சுமார் 3,200 பக்தர்கள் பயணம் செய்யலாம். இரண்டாவது மின் இழுவை இரயில் 1982ஆம் ஆண்டு நிறுவப்பட்டது. அதில் ஒரு முறை 32 பக்தர்கள் வீதம் நாள் ஒன்றுக்கு சுமார் 2,560 பக்தர்கள் பயணம் செய்யலாம். மூன்றாவது மின் இழுவை இரயில் 1988ஆம் ஆண்டு நிறுவப்பட்டது. இதில் ஒரு முறை 36 பக்தர்கள் வீதம் நாள் ஒன்றுக்கு சுமார் 2,880 பக்தர்கள் பயணம் செய்யலாம்.

மூன்றாவது மின் இழுவை இயிலில் அதிக பக்தர்கள் பயணம் செய்யும் வகையில் மின் இழுவை இரயில் பெட்டிகள் ரூ.95.00 இலட்சம் மதிப்பீட்டில் தொலைக்காட்சி, மின் விசிறி மற்றும் குளிர்சாதன வசதியுடன் தயாரிக்கப்பட்டு ஒவ்வொரு பெட்டி ஒரே நேரத்தில் 72 பக்தர்கள் பயணம் செய்யும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது.

இதற்கான பணிகள் 27.04.2023 முதல் மேற்கொள்ளப்பட்டு சென்னை. உள்ளிட்ட தொழில்நுட்ப வல்லுநர்களால் பரிசோதிக்கப்பட்டு, தகுதிச் சான்று பெறப்பட்டு பக்தர்கள் பயன்பாட்டிற்கு நேற்று (24.01.2024) தொடங்கி வைக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் நாள் ஒன்றுக்கு சுமார் 5,000 பக்தர்கள் வரை பயணம் செய்ய இயலும்.

பழனி தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயிலில், பக்தர்கள் தங்கும் விடுதிகள் நவீனமயத்துடன் கட்டப்படவுள்ளன. திருப்பதிக்கு இணையாக பழனி தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயிலில் பக்தர்களுக்குத் தேவையான அனைத்து வசதிகளும் மேற்கொள்ளப்படும், என உணவு மற்றும் உணவுப் பொருள் வழங்கல் துறை அமைச்சர் தெரிவித்தார்.

இந்த விழாவில், அறங்காவலர் குழு தலைவர் .க.சந்திரமோகன், அறங்காவலர்கள் கே.எம்.சுப்பிர மணியன், ச. மணிமாறன், ரா. ராஜசேகரன், கே.சத்யா, பழனி தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில் இணை ஆணையர். மாரிமுத்து, பழனி நகர்மன்ற தலைவர் உமாமகேஸ்வரி, பழனி நகர் மன்ற துணைத் தலைவர் கந்தசாமி மற்றும் மக்கள் பிரதிநிதிகள், அரசு அலுவலர்கள் திருக்கோயில் பணியாளர்கள் பலர் கலந்து கொண்டனர்.

### புதுச்சேரியில் தி.மு.க. மாணவர் அணி சார்பில்

# மொழிப்போர்த் தியாகிகள் வீரவணக்க நாள் பொதுக்கூட்டம்!

## அமைச்சர் ஆர்.எஸ். ராஜகண்ணப்பன் பங்கேற்பு!

புதுச்சேரி, ஜன.25 -

புதுச்சேரி மாநில தி.மு.க. மாணவர் அணி மற்றும் நெல்லித்தோப்பு, காமராஜர் நகர் தொகுதிகள் சார்பில் மொழிப்போர்த் தியாகிகளுக்கான விரவணக்க நாள் பொதுக்கூட்டம் இன்று (25-ஆம் தேதி) மாலை 6.00 மணிக்கு சாரம் அவ்வைத் திடலில் நடக்கிறது.

மாநில மாணவர் அணி அமைப்பாளர் வழக்கறிஞர் எஸ்.பி. மணிமாறன் தலைமை வகிக்கிறார். முன்னாள் அவைத்தலைவர் வழக்கறிஞர் பலராமன், தி.மு.க. பொதுக் குழு உறுப்பினர் வே.கார்த்திகேயன், தொகுதி செயலாளர்கள் செ.நடராஜன், ர.சிவக்குமார், பொதுக் குழு உறுப்பினர்கள் பெ.வெலவன், ஆர். கோகுல், முன்னாள் இளைஞர் அணி துணை அமைப்பாளர் இரா.ஜெயப்பிரகாஷ் என்கிற ஜே.பி. ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

மாநில மாணவர் அணி துணை அமைப்பாளர்கள் ஸ்டீபன்ராஜ், ஸ்ரீஹரி, அமுதன், கீர்த்தி எழினி, தமிழ் மகள் ஜான்சிராணி, முத்தரசன் ஆகியோர் வரவேற்று பேசுகிறார்கள்.

தமிழ்நாடு உயர்கல்வித் துறை அமைச்சர் ஆர்.எஸ். ராஜகண்ணப்பன், புதுச்சேரி மாநில தி.மு.க. அமைப்பாளர், சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் இரா. சிவா, தலைமைக் கழகப் பேச்சாளர் இலயோலா த.ராஜசேகர் ஆகியோர் சிறப்புரை ஆற்றி, மொழிப்போர்த் தியாகிகளுக்கு பொற்கிழி வழங்கி கவுரவிக்கிறார்கள்.

தொடர்ந்து மாநில அவைத்தலைவர் எஸ்.பி. சிவக்குமார், முன்னாள் எம்.பி. சி.பி. திருநாவுக்கரசு, சட்டமன்ற உறுப்பினர்கள் வி. அனிபால் கென்னடி, இரா. செந்தில்குமார், எல்.சம்பத் ஆகியோர் வாழ்த்துரை வழங்குகிறார்கள்.

இந்த கூட்டத்தில், மாநில துணை அமைப்பாளர்கள் ஏ.கே. குமார், தைரியநாதன், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் சண்.குமரவேல், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் பூ. மூர்த்தி, கே.எம்.பி. லோகையன், ஜே.வி.எஸ். ஆறுமுகம் என்கிற சரவணன், ப. காந்தி, டி.அருட்செல்வி, பொதுக்குழு உறுப்பினர்கள் வெ. ராமசாமி, ப. செல்வநாதன், அ.சோமசுந்தரம், பா. செ.சக்திவேல், ந.தங்கவேலு, சி.கோபால், வே. கார்த்திகேயன், பெ.வேலவன், வீ.சண்முகம், எஸ். தர்மராஜன், ஆர். கோகுல், ஆர்.ரவீந்திரன், டி.செந்தில் வேலன், டாக்டர் கா. மாயக் கிருஷ்ணன், ப. இளம்பரிதி, பெ. பழநி, மு. பிரபாகரன், எஸ்.எஸ்.செந்தில்குமார், வே.மாறன், நா.கோபாலகிருஷ்ணன், எஸ்.அமுதாகுமார், எஸ்.நர்கீஸ், தொகுதி செயலாளர்கள் எம்.ஆர்.திராவிடமணி, இரா. சக்திவேல், வ.சீத்தாராமன், பாண்டு அரிகிருஷ்ணன், செ.நடராஜன், ஜி.பி.சவுரிராஜன், எல். மணிகண்டன், து. சக்திவேல்,

கோ.தியாகராஜன், ர.சிவக்குமார், ரா.ஆறுமுகம், ப.வடிவேல், ஜெ.மோகன், பி.ஆர். ரவிச்சந்திரன், வெ.சக்திவேல், க.ராஜாராமன், செல்வ. பார்த்திபன், பி.சா. இளஞ்செழியபாண்டியன், கலிய. கார்த்திகேயன், சே. ராதாகிருஷ்ணன், ம.கலைவாணன், ச. அசோக் மற்றும் அணிகளின் அமைப்பாளர்கள், தலைவர்கள், துணைத் தலைவர்கள், துணை அமைப்பாளர்கள், தொகுதி கழக நிர்வாகிகள், மொழிப்போர்த் தியாகிகள் மற்றும் தொண்டர்கள் திரளாக பங்கேற்று சிறப்பிக்கிறார்கள்.

### ஒய்.பிரகாஷ் எம்.எல்.ஏ. தலைமை!

# ஓசூரில் வீரவணக்க நாள் பொதுக்கூட்டங்கள்!

## குடியாத்தம் பெரிய கோடீஸ்வரர் - மதுரை குத்தூசி குருசாமி சிறப்புரை!

ஓசூர், ஜன. 25-

திராவிட முன்னேற்ற கழக தலைவரும், தமிழ்நாடு முதலமைச்சருமான தளபதியார் அவர்கள் ஆணைப்படி மொழிப் போர்த் தியாகிகள் வீர வணக்கநாள் பொதுக்கூட்டம் இன்று (25 ஆம் தேதி வியாழக்கிழமை) மாலை 06.00 மணிக்கு ஓசூர் ராம் நகரில் நடைபெறுகிறது.

ஓசூர் ராம்நகர் அண்ணா சிலை எதிரில் நடைபெற உள்ள வீரவணக்க நாள் பொதுக்கூட்டத்தில் மாவட்டச் செயலாளர் ஒய். பிரகாஷ், எம்.எல்.ஏ.,

தலைமைக் கழகப் பேச்சாளர்கள் குடியாத்தம் பெரிய கோடீஸ்வரர், மதுரை குத்தூசி குருசாமி ஆகியோர் சிறப்புரையாற்ற உள்ளனர்.

இதேபோல ராயக் கோட்டை பேருந்து நிலையம் அருகே மாலை 6.00 மணிக்கு நடைபெற உள்ள மொழிப்போர்த் தியாகிகள் வீரவணக்க நாள் பொதுக் கூட்டத்தில் தலைமைக் கழகப் பேச்சாளர்கள் பூங்கா நகர் ஜெ.கண்ணன், தீக்கனல் செல்வம் ஆகியோர் சிறப்புரையாற்ற உள்ளனர்.

இந்த இரண்டு கூட்டங்களிலும் அந்தந்த பகுதியிகளில் உள்ள கழக மூத்த முன்னோடிகள் மாநகர, ஒன்றிய, பேரூர், பகுதி கழக செயலாளர் உரிய ஏற்பாடு களை செய்து கூட்டங்களை சிறப்பாக நடத்த வேண்டும் என கேட்டுக்கொள்கிறேன்.

இந்த கூட்டங்களில் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள், கழக மூத்த முன்னோடிகள் மாநகர, ஒன்றிய, பேரூர், பகுதிக் கழக நிர்வாகிகள், அனைத்து அணிகளின் தலைவர், துணைத் தலைவர், அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், நிர்வாகிகள், வார்டு, வட்டக் கழக செயலாளர்கள், வாக்குச்சாவடி முகவர்கள், பாக முகவர்கள், கழகத் தோழர்கள், பொது மக்கள் பெரும் திரளாக கலந்து கொள்ள வேண்டுமென கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு மாவட்டச் செயலாளர் ஒய்.பிரகாஷ் எம்.எல்.ஏ. கேட்டுக் கொண்டுள்ளார்.

### பெரியார், அண்ணா, கலைஞரின் வழிவந்த முதல்வர் மு.க.ஸ்டாலினின் வார்ப்பு

# உதயநிதி ஸ்டாலின் திராவிட இயக்கத்தைக் காக்கும் பொறுப்பும், தகுதியும் பெற்றுவிட்டார்!

## தமிழ்நாடு விவசாயிகள் - தொழிலாளர்கள் கட்சித் தலைவர் பொன்குமார் பாராட்டு!

சென்னை, ஜன.25-

திராவிட இயக்கத்தை தூக்கி பிடிக்கும் பொறுப்பும் தகுதியும் பெற்றுவிட்ட பெரியார், அண்ணா, கலைஞரின் வழி வந்த மு.க.ஸ்டாலின் வார்ப்பு அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் என்று தமிழ்நாட்டு விவசாயிகள் - தொழிலாளர்கள் கட்சித் தலைவர் பொன்குமார் பாராட்டு தெரிவித்துள்ளார்.

அவரது பாராட்டு வருமாறு:

தேர்ந்தெடுக்கப்பட்ட மாநில அரசுக்கு இணையான ஒரு அரசு ஆளுநர்கள் மூலம் நடத்த முயல்வது, அரசு அமைப்புகளான சிபிஐ, வருமான வரித் துறை, அமலாக்கத்துறை போன்றவற்றை பயன்படுத்தி பாரதிய ஜனதா கட்சி ஆட்சி இல்லாத மாநில அரசுகளை முடக்குவது, ஜனநாயக குரல்வளை நெரிப்பது போன்ற பெரும் இருள் சூழ்ந்த இந்த காலகட்டத்தில் ‘மாநில உரிமைகள் மீட்பு’ என்ற உயர்ந்த நோக்கத்திற்காக சேலத்தில் இளைஞரணி மாநாட்டை மிகப் பிரம்மாண்டமாக நடத்தி உலக சாதனை படைத்துள்ள திராவிட முன்னேற்ற கழக இளைஞரணி செயலாளர், விளையாட்டு மற்றும் இளைஞர் நலன் மேம்பாட்டுத் துறை அமைச்சரான உதயநிதி ஸ்டாலின் அவர்களை விவசாயிகள் தொழிலாளர்கள் கட்சி உளமார வாழ்த்தி பாராட்டுகிறது.

மண்ணுக்கு ஏற்ப விதை என்பது போல மாநிலத்திற்கு ஏற்ப திட்டங்களைத் தீட்டி நடைமுறைப்படுத்தினால் தான் அந்த மாநிலம் வளர்ச்சி பெற முடியும். அதற்கு மாநிலத்திற்கு முழுமையான அதிகாரம் இருத்தல் அவசியம். மாநிலங்கள் வளர்ந்தால் தான் நாடு வளர்ச்சி பெற முடியும். இந்த நாடு வளர்ச்சி பெற வேண்டும் என்ற எண்ணம் ஒன்றியத்தில் ஆட்சி இருப்பவர்களுக்கு உண்மையாக இருக்குமேயானால் அவர்கள் மாநிலத்திற்கான உரிமைகளை வழங்கி, மாநில அரசுக்கு முழுமையான ஒத்துழைப்பை நல்கிட வேண்டும்.

ஆனால், ஒன்றியத்தில் பாரதிய ஜனதா கட்சி ஆட்சிப் பொறுப்பை ஏற்றபின், மோடி பிரதமர் ஆக பதவியில் அமர்ந்த பின் மாநில அரசுகளை முடக்குவதில் மிகுந்த குறிக்கோளோடு செயல்பட்டு வருகிறது. மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசின் செயல்பாடுகளை முடக்குவதற்கு ஆளுநர்களைப் பயன்படுத்தி ஒரு போட்டி அரசை ஒன்றிய அரசு நடத்தி வருகிறது. மாநில அரசுகள் மக்கள் சார்ந்த சட்டங்களை இயற்றினால் அதற்கு ஆளுநர்கள் ஒப்புதல் அளிக்க மறுக்கிறார்கள். பாரதிய ஜனதா கட்சி ஆட்சி இல்லாத பிற மாநில அரசுகளை மிரட்டி, பணிய வைத்து, ஒடுக்குவதற்கு அந்த மாநிலங்களில் பாரதிய ஜனதா கட்சியை முன் நிறுத்துவதற்கு ஒன்றிய அரசின் பொது



நிறுவனங்களான சி.பி.ஐ., வருமான வரித்துறை, அமலாக்கத்துறை போன்ற வற்றை அப்பட்டமாக பயன்படுத்திடும் மோசமான முன்னுதாரணத்தை ஒன்றிய அரசு ஏற்படுத்தி வருகிறது.

விவசாயிகளின் வருமானத்தை இரட்டிப்பாக்குவேன் என்ற வாக்குறுதி அளித்து பிரதமர் ஆன மோடி, அந்த விவசாயத்தை கார்ப்பரேட் நிறுவனங்களின் காலடியில் கொண்டு சேர்க்க கடுமையான வேளாண் சட்டங்களை இயற்றியது. வீரம் செறிந்த விவசாயிகளின் போராட்டத்தால் அந்தச் சட்டங்கள் திரும்பப் பெறப்பட்டன.

இந்தியாவின் உயர்கல்வியின் சராசரி 26.7 விழுக்காடு என்ற நிலையில் தமிழ்நாட்டின் சராசரி 56.1 என்ற உச்சத்தை எட்டியுள்ளதற்குக் காரணம் மாநில அரசின் செயல்பாடுகளேயாகும். இன்றைக்கு இந்தியாவில் இருந்து மட்டுமல்ல உலகத்தின் பல்வேறு நாடுகளில் இருந்து சிறந்த மருத்துவத்திற்கு நாடிவரும் மாநிலமாக தமிழ்நாடு அதன் தலைநகர் சென்னை யுமாக உள்ளது.

அதற்குக் காரணம் சுகாதாரத் துறையில் தமிழ்நாடு காட்டிய முனைப்பேயாகும். ஆனால் இன்றைக்கு நீட் தேர்வு என்ற முறையை கொண்டு வந்து அடித்தட்டு மக்களின் பிள்ளைகளின் மருத்துவக் கனவை சிதைத்து வருகிறது ஒன்றிய அரசு.

கல்வி, சுகாதாரம் போன்றவை மாநில அரசின் கையில் இருந்தால் தான் அது இன்னும் சிறப்பாக செயல்படுவதற்கு வாய்ப்பாக அமையும். ஜிஎஸ்டி என்ற பெயரில் மாநிலத்தின் ஒட்டுமொத்த வருமானத்தையும் வரி என்கிற பெயரில் ஒன்றிய அரசு சுரண்டி வருகிறது.

முதலமைச்சர் கூறியதைப் போன்று ஒன்றிய அரசு மாநிலங்களை ஏ.டி.எம் ஆக பயன்படுத்தி வருகிறது. தமிழ்நாடு அரசு ஒரு ரூபாயை வரியாக ஒன்றியத்திற்கு செலுத்தினால் அவர்கள் தமிழ்நாட்டிற்கு திருப்பித் தருவது 21 பைசா மட்டுமே. இப்படி மாநில அரசுகளின் அதிகாரங்கள் கொஞ்சம் கொஞ்சமாகப் பறிக்கப்பட்டு சுயமாக செயல்படாமல் முடக்கக் கூடிய நிலையைப் நோக்கி ஒன்றிய பாரதிய ஜனதா கட்சி அரசு போய் கொண்டு இருக்கிறது. இது நாட்டிற்கு சூழ்ந்துள்ள மிகப்பெரிய கேடு ஆகும். இது விபரீதமான முடிவுகளுக்கு கொண்டு சேர்த்து விடும் என்பதை ஒன்றியத்தின் ஆட்சி உள்ளவர்கள் நினைத்துப் பார்க்க மறுக்கிறார்கள்.

இப்படிப்பட்ட இருள் சூழ்ந்த நிலையில் மாநில அரசுகளின் உரிமைகளை மீட்பது மிக மிக தேவையான ஒன்றாகும். அந்த உயர்ந்த நோக்கத்திற்காக திராவிட முன்னேற்ற கழக இளைஞரணி செயலாளர், விளையாட்டு மற்றும் இளைஞர் நலன் மேம்பாட்டு துறை அமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள் மாநாட்டை நடத்தி வரலாற்றில் இடம் பிடித்துள்ளார்.

மூடநம்பிக்கை ஒழிப்பு, பகுத்தறிவு சிந்தனை, பெண் விடுதலை, மாநில சுய ஆட்சி, மொழியின் உரிமை போன்ற பல்வேறு முக்கிய பிரச்சனைகளுக்கு இந்தியாவிற்கு வழிகாட்டியது தமிழ்நாடு ஆகும். அதற்கு வித்திட்டது திராவிட இயக்கமாகும். அதை தொடங்கி வைத்தவர் தந்தை பெரியார் ஆவார். அந்த சித்தாந்தம் தான் இன்று இந்தியா முழுவதும் மட்டுமல்ல, உலகம் முழுவதும் எதிரொலித்துக் கொண்டிருக்கிறது.

தமிழ்நாட்டில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நடைமுறைப்படுத்தி வரும் பல்வேறு முற்போக்குத் திட்டங்கள் இன்றைக்கு இந்தியாவில் உள்ள பிற மாநிலங்கள் பின்பற்றக்கூடிய அளவிற்கு அமைந்திருப்பதற்கு காரணம் இந்த திராவிடச் சித்தாந்தமாகும். இது ஆதிக்க சக்திகளுக்கு எரிச்சலை ஊட்டி வருகிறது.

எனவே திராவிடச் சித்தாந்தத்தை, அதைத் தாங்கிப் பிடிக்கக்கூடிய திராவிட இயக்கங்களை குறிப்பாக திராவிட முன்னேற்றக் கழகத்தை அகற்றுவதில், அழிப்பதில் தமிழ்நாட்டில் மட்டுமல்ல இந்தியா முழுவதுமான ஆதிக்க சக்திகள் வரிந்து கட்டிக்கொண்டு வேலை பார்க்கின்றன. தந்தை பெரியார் அவர்கள் மறைந்த பொழுது அந்த சக்திகள் மகிழ்ச்சி அடைந்தன. ஆனால் தந்தை பெரியாரின் கொள்கையை தாங்கிப் பிடித்தவராக பேரறிஞர் அண்ணா விளங்கினார்கள்.

அண்ணா மறைந்த பொழுது மீண்டும் அந்த சக்திகள் கூத்தாடியது. ஆனால் தலைவர் கலைஞர் அந்த கொள்கையை தாங்கிப் பிடித்து குதிரைப் பாய்ச்சலில் கொண்டு சேர்த்தார். கலைஞருக்குப் பிறகு திராவிட இயக்கங்களுக்கு எதிர்காலம் இல்லை என்று எண்ணியிருந்த அந்த சக்திகளுக்கு தளபதி மு.க. ஸ்டாலின் அவர்கள் சாட்டையடி கொடுத்து, தாய் எட்டு அடி என்றால் குட்டி பதினாறு அடி என்ற பாய்ச்சலில் இந்த இயக்கத்தை தாங்கிப் பிடித்துள்ளார்.

இந்த நிலையில் இந்த திராவிட இயக்க கொள்கைளை, கோட்பாடுகளை இந்த இயக்கத்தை அடுத்த 100 ஆண்டுகளுக்கு வழிநடத்தக்கூடிய ஆற்றல்மிகு சக்தியாக உதயநிதி ஸ்டாலின் அவர்கள் உருவெடுத்துள்ளார் என்பதை சேலம் மாநாடு நிரூபித்துள்ளது.

கிரேக்கத்துத் தத்துவ ஞானி சாக்ரடீஸ்க்கு ஒரு பிளாட்டோவுக்கு, பிளாட்டோவிற்கு ஒரு அரிஸ்டாட்டில், அந்த அரிஸ்டாட்டலின் வார்ப்பு தான் அலெக்சாண்டர் தன் 33 வயதிற்குள் உலகை தன் காலடியில் கொண்டு வந்த மாவீரன் அலெக்சாண்டர் ஆவார். அதைப்போல தந்தை பெரியாரின் கண்டுபிடிப்பு பேரறிஞர் அண்ணா. அண்ணாவின் தம்பி தலைவர் கலைஞர். கலைஞரின் உருவாக்கம் தளபதி மு.க.ஸ்டாலின். தளபதி மு.க.ஸ்டாலின் அவர்களின் வளர்ப்பு உதயநிதி ஸ்டாலின் ஆவார்.

ஆகவே திராவிட பண்பாட்டுக் கொள்கையை அழிந்து விடாமல் காத்திடும் பொறுப்பும் தகுதியும் உங்களுக்கு உண்டு தங்களை விவசாயிகள் தொழிலாளர்கள் கட்சி வாழ்த்துகிறது பாராட்டுகிறது. தங்கள் பணிக்கு என்றும் உறுதுணையாக விவசாயிகள் தொழிலாளர்கள் கட்சி நிற்கும்.

இவ்வாறு பொன்குமார் தெரிவித்துள்ளார்.

# நீலகிரியில் கடும் உறைபனி!

உதகை, ஜன.25-

தமிழகத்தின் நீலகிரி மாவட்டத்தின் ஓரிரு இடங்களில் இரவு மற்றும் அதிகாலை வேளையில் உறைபனி ஏற்பட வாய்ப்புள்ளது. சென்னையில் அடுத்த 48 மணி நேரத்திற்கு வானம் ஓரளவு மேகமூட்டத்துடன் காணப்படும். நகரின் சில பகுதிகளில் அதிகாலை வேளையில் லேசான பனி மூட்டத்திற்கு வாய்ப்புள்ளது. அதிகபட்ச வெப்பநிலை 31-32 டிகிரி செல்சியஸை ஒட்டியும் மற்றும் குறைந்தபட்ச வெப்பநிலை 22-23 டிகிரி செல்சியஸை ஒட்டியும் இருக்கக்கூடும்.

மீனவர்களுக்கான எச்சரிக்கை ஏதுமில்லை.

தமிழ்நாடு, புதுச்சேரி, காரைக்காலில் 7 நாட்களுக்கு வறண்ட வானிலை நிலவக்கூடும் என்று சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

தென்னிந்திய பகுதிகளின் மேல் ஒரு வளிமண்டல கீழடுக்கு சுழற்சி நிலவுகிறது. தமிழகம், புதுச்சேரி மற்றும் காரைக்கால் பகுதிகளில் இன்று மற்றும் நாளை வறண்ட வானிலை நிலவக்கூடும். தமிழகத்தில் ஓரிரு இடங்களில் அதிகாலை வேளையில் லேசான பனிமூட்டத்திற்கு வாய்ப்புள்ளது. மேலும், ஜனவரி 26ம் தேதி முதல் ஜனவரி 30ம் தேதி வரை தமிழ்நாடு, புதுச்சேரி மற்றும் காரைக்கால் பகுதிகளில் வறண்ட வானிலை நிலவக்கூடும்.

## வருகின்ற நாடாளுமன்றத் தேர்தலில் -

# கழகத்தில் இளைஞர்களுக்கு அதிகமாக வாய்ப்பு கொடுங்கள்!

## கழகப் பொருளாளர் டி.ஆர்.பாலு நூல்கள் வெளியீட்டு விழாவில் - அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் கோரிக்கை!

**சென்னை, ஜன. 25–**

**“நாடாளுமன்றத் தேர்தலில் – கழகத்தில் இளைஞர்களுக்கு அதிகமாக வாய்ப்பு கொடுங்கள்!” என கழகப் பொருளாளர் டி.ஆர்.பாலு அவர்கள் நூல்கள் வெளியீட்டு விழாவில், உறையாற்றிய கழக இளைஞர் அணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் கோரிக்கை விடுத்தார்.**

சென்னை, அண்ணா அறிவாலயம், கலைஞர் அரங்கத்தில் நேற்று முன்தினம் (23-01-2024 - செவ்வாய்க்கிழமை) மாலை கழகப் பொருளாளர் - கழக நாடாளுமன்றக் குழுத் தலைவர் டி.ஆர்.பாலு அவர்களின், `உரிமைக் குரல்', `T.R.BALU, THE MAN & MESSAGE', `MY VOICE FOR THE VOICELESS', `பாதை மாறாப் பயணம் பாகம்- 3' ஆகிய நூல்களின் வெளியீட்டு விழா நடைபெற்றது.

விழாவுக்குத் தலைமையேற்று கழக தலைவர் – முதலமைச்சர் அவர்கள் நூல்களை வெளியிட்டுச் சிறப்புரையாற்றினார்.

இதில் கலந்துகொண்டு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் டி.ஆர்.பாலு அவர்களை வாழ்த்திப் பேசினார்.

அப்போது அவர் பேசியதாவது:-

**மாநாட்டிற்குப் பிறகு நடைபெறும் முதல் நிகழ்ச்சி இது!**

டி.ஆர்.பாலு மாமா அவர்களின் இந்த நான்கு புத்தகங்களை வெளியிடுகின்ற நிகழ்ச்சியில் பங்கேற்பதில் மிகுந்த மகிழ்ச்சி அடைகின்றேன்.

சேலம் மாநாட்டை மிகச் சிறப்பான ஒரு வெற்றிமாநாடாக மாற்றிக் காட்டிய உங்கள் அத்தனை பேருக்கும், இளைஞர் அணித் தம்பிமார்களுக்கும் இந்த நேரத்தில் என்னுடைய நன்றியை மீண்டும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**‘கலைஞர் அரங்கம்’ புதுப்பிக்கப்பட்டு நடைபெறும் முதல் நிகழ்ச்சி!**

சேலத்தில் லட்சோப லட்சம் இளைஞர்கள் கூடிய நம்முடைய கழக இளைஞர் அணி மாநாட்டிற்குப் பிறகு, நாம் அனைவரும் ஒன்றாகப் பங்கேற்கின்ற முதல் நிகழ்ச்சி இது. அதுவும் இந்த அரங்கம், புதுப்பிக்கப்பட்டு நடக்கின்ற முதல் நிகழ்ச்சி. எனவே, அதற்கும் இந்த நேரத்தில் நம்முடைய பொருளாளர் அவர்களுக்கு வாழ்த்துகளையும், பாராட்டுகளையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

இந்த நேரத்தில் அவருக்கு நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளேன். ஏனென்றால், இளைஞர் அணி மாநாட்டினை ஒரு மிகப்பெரிய வெற்றி மாநாடாக நடத்திக் காட்டியிருக்கின்றோம். அதற்கான செலவு முழுவதையும் பொருளாளராக அவர்தான் எங்களுக்குக் கொடுத்திருக்கின்றார்.

**எல்லாம் கலந்த கலவையாக இருக்கிறார் பாலு!**

“பாதை மாறாப் பயணம்” புத்தகத்திற்கு நம்முடைய முதலமைச்சர் அவர்கள் எழுதியுள்ள அணிந்துரையில் “பாலு அவர்கள் கலைஞருடைய தொண்டரா, தோழரா, உடன்பிறப்பா, செல்லப் பிள்ளையா, பற்றாளரா என எண்ணுகின்ற அளவுக்கு எல்லாம் கலந்த கலவையாக இருக்கிறார் பாலு” என்று எழுதியுள்ளார்கள். ஏனென்றால், அந்த அளவுக்கு கலைஞர் மீது பற்றுக் கொண்டவர் நம்முடைய பொருளாளர் அவர்கள்.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் தன்னுடைய வரலாற்றை `நெஞ்சுக்கு நீதி' என்று ஆறு பாகமாக எழுதினார்கள். கலைஞர் வழியில் தன்னுடைய அரசியல் பயணத்தை `பாதை மாறாப் பயணம்' என ஒவ்வொரு பாகமாக பாலு மாமா வெளியிட்டு வருகின்றார்.

அதுமட்டுமல்ல, நம்முடைய முதலமைச்சர் அவர்கள் சில ஆண்டுகளுக்கு முன்பு ‘உங்களில் ஒருவன்’ என்ற நூலை வெளியிட்டார்கள். அந்தப் புத்தகம் ஆங்கிலத்தில் ‘One Among You’ என்று வெளியானது.

கலைஞர் வழியில் மட்டுமல்ல; நம்முடைய பாலு மாமா அவர்கள், நம்முடைய தலைவர் அவர்களின் வழியைப் பின்பற்றி, தன்னுடைய `பாதை மாறாப் பயணம்' புத்தகத்தினுடைய முதல் இரண்டு பாகங்களையும் ஆங்கிலத்தில் வெளிக்கொண்டு வந்துள்ளார்.

**என்னைத் தூக்கி வளர்த்தவர்!**

சென்ற வருடம் இதே ஜனவரி மாதத்தில், இதே அரங்கத்தில்தான் தன்னுடைய அரசியல் பயணம் பற்றி `பாதை மாறாப் பயணம் பாகம்-1 மற்றும் பாகம்-2' என இரண்டு நூல்களை அவர் வெளியிட்டார். இந்த ஆண்டு ஜனவரி மாதம் `உரிமைக்குரல்', ‘பாதை மாறாப் பயணம் பாகம்-3', `T.R.BALU, THE MAN & MESSAGE', `MY VOICE FOR THE VOICELESS' என்ற நான்கு புத்தகங்களை இந்த முறை நமக்குக் கொடுத்துள்ளார்.

டி.ஆர்.பாலு மாமா அவர்களை நான் பிறந்ததுதொட்டு, குழந்தைப் பருவத்திலிருந்து எனக்குத் தெரியும். என்னைத் தூக்கி வளர்த்தவர். நான் பிறந்து வளர்ந்ததெல்லாம் கோபாலபுரத்தில். பாலு மாமா அவர்கள் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் அன்புக்குரிய தம்பி, நம்முடைய முதலமைச்சர் அவர்களுக்கு உற்றத் தோழர், தலைமை என்ன சொல்கின்றதோ, அதை அப்படியே ஏற்றுச் செயல்படுகின்ற ஒரு செயல் வீரர்,

உதாரணத்திற்கு ஒரே ஒரு விஷயத்தைச் சொல்ல விரும்புகின்றேன்; நேற்று முன்தினம் இளைஞர் அணி மாநாடு, நீங்கள் எல்லாம் வந்திருப்பீர்கள். தொலைக்காட்சியில் பார்த்திருப்பீர்கள். தலைவர் அவர்களிடம், “நீங்கள் 5.30 மணிக்கு வாருங்கள், ஆறு மணிக்கு எல்லாம், உங்களுக்கு மைக் கொடுத்து விடுகிறோம். 6:30 மணிக்கு நீங்கள் பேசிவிட்டு, கிளம்பி விடலாம்” என்று வாக்குறுதி கொடுத்திருந்தேன்.

காலை 9 மணிக்கு, அத்தை கனிமொழி அவர்கள் தான் நம்முடைய கொடியை ஏற்றினார்கள். மாணவர் அணிச் செயலாளர் மாநாட்டைத் திறந்து வைத்தார். பல்வேறு தலைப்புகளில் 22 பேச்சாளர்கள் ஆளுக்கு பத்து பத்து நிமிடம் என்று பேசினார்கள்.



தலைவர் அவர்கள் தங்கியிருந்த இடத்தில் இருந்து மாநாட்டுக்குக் கிளம்பி விட்டார். அப்போதும் பேச்சாளர்கள் எல்லாம் பேசிக் கொண்டிருந்தார்கள். மேடைக்கு வந்து விட்டார்கள். அரை மணி நேரத்தில் 7 பேர் பேசி முடிக்க வேண்டும். அப்பொழுதுதான் தலைவர் அவர்களுக்கு ஐந்தே முக்கால் மணி அளவில் மைக் கொடுக்க முடியும்.

அண்ணன் தயாநிதி மாறன் அவர்கள் பேசிக் கொண்டிருக்கும்போது அவரிடம் சீட்டில் எழுதிக் கொடுத்தவுடன், ‘என்னை நிறுத்தச் சொல்கிறீர்களா?’ என்று அவர் கோபித்துக்கொண்டார். அண்ணன் ஆ.ராசா அவர்கள் 15 நிமிடங்கள் பேசினார். ஆனால், அந்த அளவிற்கு ஒரு எழுச்சி உரை அது.

அதன்பிறகு கழகத் துணைப் பொதுச்செயலாளர் அத்தை கனிமொழி அவர்கள், ‘எத்தனை நிமிடம் பேச வேண்டும்’ என்று கேட்டார்கள். ‘நீங்கள் பேசுங்கள்’ என்று சொன்னேன். ஆனால், சரியாக 10 நிமிடத்தில் முடித்து விட்டார். அதன் பிறகு நான் 25 நிமிடங்கள் பேசினேன். அதன் பிறகு, பாலு மாமா பேசப் போகிறாரா, இல்லையா என்று நினைத்துக் கொண்டே இருந்தோம். மைக்கைப் பிடித்தார். ‘வந்திருந்த அனைவருக்கும் என்னுடைய நன்றி, வணக்கம்’ என்று சொல்லிவிட்டு வந்துவிட்டார்.

**தலைவரின் எண்ணங்களைச் செய்து முடிப்பவர்!**

அந்த அளவிற்கு தலைவர் அவர்களை சொன்ன நேரத்திற்கு அவரை அனுப்ப வேண்டும். தலைவர் என்ன சொல்கிறாரோ அதைச் செய்ய வேண்டும் என்பதில் நம்முடைய பாலு மாமா அவர்கள் கண்ணும் கருத்துமாக இருப்பார். எப்பொழுதுமே தலைவர் என்ன நினைக்கிறாரோ அதைச் செய்து முடிப்பவர்.

கடந்த ஆண்டு நடைபெற்ற `பாதை மாறாப் பயணம் பாகம்-1 மற்றும் பாகம்-2' வெளியீட்டு விழா எப்படி நடந்தது என்று உங்களுக்கெல்லாம் ஞாபகம் இருக்கும். நம்முடைய தலைவர் முதலமைச்சர் அவர்கள் புத்தகங்களை வெளியிட்டுப் பேசும்பொழுது, தன்னுடைய பிரசிடென்சி கல்லூரிப் பருவத்திற்கே திரும்பச் சென்று அவ்வளவு இளமையாக நகைச்சுவையாகப் பேசினார்கள்.

1970-களில் பாலு மாமா அவர்களும் தலைவர் அவர்களும் எப்படி எல்லாம் இணைந்து தி.மு.கழகத்தை வளர்த்தார்கள் என்று அப்பொழுது கூறினார்கள். குறிப்பாக, தலைவர் அவர்களிடம் அவர் ஒரு காரைப் பெற்றுக் கொண்டு அதற்கான தொகையைக் கொடுக்கவில்லை என்று அந்த நிகழ்ச்சியிலே தலைவர் அவர்கள் ஞாபகப்படுத்தினார்கள். இப்பொழுது வரை அதைக் கொடுக்கவில்லை. (சிரிப்பு) இப்பொழுது அவர் கழகத்தின் பொருளாளர் வேறு. இப்பவும் கொடுக்கவில்லை. அடுத்த வருடமும் ஞாபகப்படுத்துவேன். நீங்கள் கொடுக்கின்ற வரைக்கும் ஞாபகப்படுத்திக் கொண்டே இருப்பேன் என்று தலைவர் சொன்னார்.

**கழகத் தலைவருக்கு ‘இளந்தென்றல்’ எனப் பெயர்சூட்டி மகிழ்ந்தவர்!**

நம்முடைய தலைவர் அவர்களை எல்லோரும் செல்லமாக `தளபதி' என்று கூப்பிடுவார்கள். ஆனால், அதற்கெல்லாம் முன்பாகவே தலைவருக்கு `இளந்தென்றல்' என்ற பட்டப் பெயரை வைத்து அழைத்தவர்தான் நம்முடைய பொருளாளர் அவர்கள். அது மட்டுமல்ல, கழகத்தின் மூலம் ஏராளமான கலைநிகழ்ச்சிகளை நடத்தியவர். கோபாலபுரத்தில் கலைஞர் அவர்களோடு அவருக்கு இருந்து நெருக்கத்தை வார்த்தைகளால் சொல்ல முடியாது.

கலைஞரின் உண்மையான உடன்பிறவாத் தம்பியாக இருந்தவர் நம்முடைய பொருளாளர் அவர்கள். ஒரு தி.மு.கழக உடன்பிறப்பு எத்தனை வேகத்தோடு செயல்படவேண்டும் என்பதற்கு பாலு மாமாதான் மிகச் சிறந்த ஒரு எடுத்துக்காட்டு. இதற்கு முன்பு வந்த புத்தகங்களில் தன்னுடைய அரசியல் பயணம் குறித்து அவர் எழுதியிருந்தார். இன்றைக்கு வெளியிட்டுள்ள நூல்களில், ஒன்றிய அமைச்சராக, தான் மேற்கொண்ட பணிகளை விளக்கி எழுதியுள்ளார்.

**எழுத்துக்கும், வாசிப்புக்கும் முன்னுரிமை அளிக்கும் இயக்கம்!**

**ஒன்றிய அரசின் அமைச்சராக இருந்தபொழுது தமிழ்நாட்டின் வளர்ச்சிக்கு அவர் ஆற்றிய பணிகளை ஒரு சுயபெருமையாக இல்லாமல், அப்போது நடைபெற்ற அரசியல் சூழல்களோடு விளக்கமாகக் கூறியுள்ளார். 1980 க்குப் பின் இந்திய ஒன்றிய அரசியலில் கழகத்தினுடைய பங்களிப்பைப் பற்றி நாம் அறிய வேண்டும் என்றால், பாலு மாமா அவர்களின் அத்தனை புத்தகங்களையும் நாம் படித்துத்தான் ஆக வேண்டும். இப்படி அவர் ஏராளமான புத்தகங்களை வெளியிடுவதை, உண்மையிலேயே அனைவரும் வரவேற்க வேண்டும்.**

ஏனென்றால், நம்முடைய திராவிட இயக்கமே, படித்தும், வாசித்தும், பேசியும், எழுதியும் வளர்த்த இயக்கம்.

நம்முடைய நீதிக்கட்சித் தலைவர்கள் தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர் என நம்முடைய தலைவர்கள் அனைவருமே பத்திரிக்கை நடத்தியவர்கள். நூற்றுக்கும் அதிகமான பத்திரிகைகளை நடத்திய இயக்கம் எதுவென்றால், அது நம்முடைய திராவிட இயக்கம்தான். அந்த வழியில்தான் இன்றைக்கு நம்முடைய திராவிட முன்னேற்றக் கழகம் எழுத்திற்கும், வாசிப்பிற்கும் முக்கியத்துவம் கொடுத்து வருகின்றது.

**நாள்தோறும் ‘முரசொலி’யை அலங்கரிக்கும் “பாசறைப் பக்கம்”**

அண்ணா நூற்றாண்டை முன்னிட்டு கோட்டூர்புரத்தில், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் அண்ணா நூற்றாண்டு நூலகத்தைத் திறந்தார். அதேபோல் கலைஞர் நூற்றாண்டில் நம்முடைய தலைவர் அவர்கள் மதுரையில், கலைஞர் நூற்றாண்டுத் நூலகத்தை திறந்து வைத்துள்ளார்.

கலைஞர் நூற்றாண்டை முன்னிட்டு, தொகுதிக்கு ஒரு கலைஞர் நூலகத்தைத் திறக்க வேண்டும் என்று இளைஞர் அணிக்கு தலைவர் அவர்கள் உத்தரவிட்டார்கள். இதுவரை 15 நூலகங்களை தமிழ்நாடு முழுக்க திறந்து இருக்கின்றோம். அதேபோல கலைஞரின் மூத்த பிள்ளை முரசொலியில் இளைஞர் அணி சார்பாக முரசொலி பாசறைப் பக்கத்தைத் தொடங்கினோம். அது ஒரு வருடம் ஆகிவிட்டது.

**அறிவு இயக்கம்**

முத்தமிழறிஞர் பதிப்பகத்தை இளைஞர் அணியின் சார்பாகத் தொடங்கி, ‘முரசொலி பாசறை’யில் வெளியான கட்டுரைகளைத் தொகுத்து ஒன்பது நூல்களாகக் கொண்டு வந்துள்ளோம். இந்த நிகழ்ச்சியில் ஒரு பதிப்பாளராகவும் நான் கலந்து கொள்கின்றேன். அந்தப் புத்தகத்தையும் நம்முடைய முதலமைச்சர் அவர்கள் தான் வெளியிட்டார்கள்.

அதேபோல் எங்களுடைய சேப்பாக்கம் திருவல்லிக்கேணி தொகுதியில் கலைஞர் நூற்றாண்டை முன்னிட்டு ஒரு நடமாடும் நூலகத்தைத் திறந்து வைத்துள்ளோம். 1,500 புத்தகங்கள் கொண்ட நடமாடும் நூலகம் அது.

நம் கழகத்தில் நம்முடைய தலைவர் எழுதுகிறார், பொருளாளர் எழுதிக் கொண்டிருக்கிறார், அமைச்சர்கள் தொடர்ந்து எழுதிக் கொண்டிருக்கிறார்கள், புத்தகங்கள் வெளியிட்டுக் கொண்டிருக்கிறார்கள். இளைஞர் அணி உள்ளிட்ட அனைத்து அணிகளும் நூல்களை வெளியிடுகின்றனர், இப்படி கழகத்தைப் போன்ற வேறொரு அறிவு இயக்கம் இந்திய ஒன்றியத்திலேயே கிடையாது. இதற்கு ஒரு உதாரணமாகத்தான் இந்த நிகழ்ச்சியில் பங்குபெறுவதில் நான் மிகுந்த மகிழ்ச்சி அடைகின்றேன்.

இந்த நேரத்தில் இன்னொரு முக்கியமான விஷயத்தை நான் குறிப்பிட்டாக வேண்டும். சேலத்தில் இரண்டாவது மாநில மாநாட்டிற்கு அனைத்து மாவட்டக் கழகச் செயலாளர்களும், அனைத்து அணிகளும் நிதி கொடுத்தார்கள். போட்டி போட்டுக் கொண்டு நிதி கொடுத்தார்கள். இதுவரை அனைத்து மாவட்டக் கழகச் செயலாளர்களும் அனைத்து அணிகளும் கொடுத்த நிதி 59 கோடி ரூபாய்.

**தேர்தலில் இளைஞர்களுக்கு அதிக வாய்ப்பு!**

ஐ.டி. விங்கின் செயலாளர் சகோதரர் தொழில்துறை அமைச்சர் டி.ஆர்.பி ராஜா அவர்கள் ஐ.டி. விங்கின் சார்பாக எங்களுடைய மாநாட்டிற்கு 25 லட்சம் ரூபாய் அளித்தார். டி.ஆர்.பாலு மாமா கழகத்தின் பொருளாளர் எங்களுக்குக் கொடுத்தது ஒரு லட்சம். பரவாயில்லை, நிதிதான் கொடுக்கவில்லை, ஒரு பொருளாளராக உங்களிடம் ஒரு வேண்டுகோள் வைக்கிறேன்.

மாநாட்டிலும் இதே வேண்டுகோளை தலைவரிடம் வைத்தேன். இப்பொழுது உங்களுடைய புத்தக விழாவில் தாங்கள், கழகத்தின் பொருளாளர் எனும் வகையில் உங்களிடம் வேண்டுகோள் வைக்கின்றேன். வருகின்ற நாடாளுமன்றத் தேர்தலில் இளைஞர்களுக்கு அதிகமாக வாய்ப்புக் கொடுங்கள். அனுபவம் முக்கியம்தான், இருந்தாலும் இளைஞர்களுக்கு அதிக வாய்ப்புக் கொடுங்கள். தகுதியான இளைஞர்களுக்கு வாய்ப்புக் கொடுங்கள், தலைவர் யோசித்தாலும் நீங்கள் தலைவரிடம் சொல்லுங்கள்.

எனவே இந்தப் புத்தக விழாவில் கலந்துகொண்டு உங்களையெல்லாம் சந்திப்பதில் மிகுந்த மகிழ்ச்சியடைகிறேன் இவ்வாய்ப்புக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் உரையாற்றினார்.

---

## நெல்லை மாநகரில் இளைஞர் அணி 2வது மாநில மாநாட்டுத்

# தீர்மானங்களை விளக்கி 2 நாள் பொதுக்கூட்டங்கள்!

### மாநகரச் செயலாளர் சு.சுப்பிரமணியன் அறிக்கை!

*நெல்லை. ஜன. 25 -*

கழகத் தலைவர் முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க கழக இளைஞர் அணி செயலாளர் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலின் படி நிதி மற்றும் மனிதவள மேம்பாட்டு துறை அமைச்சர் தங்கம் தென்னரசு அறிவுறுத்தலின்படி நெல்லை மாநகர தி.மு.க.சார்பில் கழக இளைஞர் அணியின் 2வது மாநில உரிமை மீட்பு மாநாடு தீர்மானத்தின் விளக்க தெருமுனை பொதுக்கூட்டம் 26.01.2024 மற்றும் 27.01.2024 ஆகிய 2 நாட்கள் மேலப்பாளையம் பகுதி, தச்சநல்லூர் பகுதி, பாளையங்கோட்டை பகுதி, நெல்லை பேட்டை பகுதி ஆகிய 4 பகுதிகளில் நடைபெறுகிறது என நெல்லை மாநகரச் செயலாளர் சு.சுப்பிரமணியன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் அறிவிப்பில் தெரிவித்திருப்பதாவது.

கழக இளைஞர் அணியின் 2வது மாநில உரிமை மீட்பு மாநாடு தீர்மானத்தின் விளக்க தெருமுனை பொதுக்கூட்டம் மாநகர துணை செயலாளர் அப்துல் கையூம், பகுதி செயலாளர்கள் பூ.சுப்பிரமணியன் (தச்சை) அண்டன் செல்லத்துரை (பாளை) நமச்சிவாயம் என்ற கோபி (நெல்லை) சாகுல் ஹமீது (மேலப்பாளையம்) ஆகியோர் தலைமையில் 49 வது வட்டச் செயலாளர் அலிசேக்மன்சூர்,30வது வட்டச் செயலாளர் தென்கரை முத்து, 35 வது வட்டச் செயலாளர் பேபி கோபால், 24 வது வட்டச் செயலாளர் சுந்தர்ராஜ் என்ற அருள், மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் வில்சன் மணித்துரை, துணை அமைப்பாளர் மாயா, மாநகர இளைஞரணி அமைப்பாளர் கருப்பசாமி கோட்டையப்பன், துணை அமைப்பா ளர்கள் அலிப்ஃமீரான், அன்பழகன் என்ற ரவி, செல்வம், இனியன்,குருஜெசி, ஆகியோர் முன்னிலையில் நடைபெறுகிறது.

கீழ்க்கண்ட அட்டவணைப்படி தெருமுனை பொதுக்கூட்டம் நாளை (26 ம் தேதி - வெள்ளிக்கிழமை) மாலை 5.30 மணி அளவில் மேலப்பாளையம் பகுதியில் நேசம் டீக்கடை அருகில், சந்தை முக்கு (மேலப்பாளையம்) தலைமைக் கழக பேச்சாளர்கள் மைக் மணி, நெல்லை முத்தையா ஆகியோரும். இரவு 7 மணி அளவில் தச்சநல்லூர் பகுதி கூட்டுறவு அங்காடி அருகில் (நெல்லை சந்திப்பு) தலைமைக் கழக பேச்சாளர்கள் கவிஞர் மூர்த்தி, திராவிட மணி ஆகியோரும் 27 ஆம் தேதி சனிக்கிழமை மாலை 5.30 மணி அளவில் பாளையங்கோட்டை பகுதி சித்த மருத்துவ கல்லூரி எதிரில் தலைமைக் கழக பேச்சாளர்கள் தூத்துக்குடியில் சரத்பாலா, மைக் மணி ஆகியோரும், இரவு 7 மணி அளவில் நெல்லை பேட்டை பகுதி சந்தி பிள்ளையார் முக்கு பேருந்து நிறுத்தம் அருகில் தலைமைக் கழக பேச்சாளர்கள் தூத்துக்குடி சரத் பாலா, நெல்லை முத்தையா ஆகியோரும் உரையாற்றுகின்றனர்.

தொடர்ந்து தலைமைக் கழக பேச்சாளர்கள் மில் ஜே.குமார், மார்க்கெட் நயினார் ஆகியோரும் உரையாற்றுகின்றனர்.

ஆகவே மாவட்ட, மாநகர, மாநில, கழக நிர்வாகிகள், பகுதி கழக செயலாளர்கள், நிர்வாகிகள், வட்டக் கழக செயலாளர்கள் நிர்வாகிகள்,மாநகரப் பிரதிநிதிகள், மாநகராட்சி கழக மாமன்ற உறுப்பினர்கள், மாநகர சார்பு அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், பாக முகவர்கள் மற்றும் கழக சொந்தங்கள் அனைவரும் தவறாமல் நிகழ்வில் கலந்து கொண்டு சிறப்பிக்க கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

---

## ராஜஸ்தானில்

# நீட் தேர்வுக்கு மேலும் ஒரு மாணவர் தற்கொலை!

ஜெய்ப்பூர், ஜன. 25–

ராஜஸ்தான் மாநிலம் கோட்டா நகரில் ஜே.இ.இ நுழைவு தேர்வு, நீட் நுழைவு தேர்வு போன்ற போட்டித் தேர்வுகளுக்கு பயிற்சி அளிக்கப்படுகிறது. இந்தியாவின் பல மாநிலங்களில் இருந்து மாணவர்கள் இங்கு வந்து தனியார் பயிற்சி மையங்களில் சேர்ந்து தேர்வுகளுக்கு தயாராகி வருகின்றனர்.

இந்த சூழலில் சமீப காலமாக கோட்டா நகரில் பயிற்சி பெற்று வரும் மாணவர்கள் தற்கொலை செய்து கொள்ளும் சம்பவங்கள் அதிகரித்து வருகின்றன. கடந்த ஒரே ஆண்டில் மட்டும் கோட்டா நகரில் பயின்று வந்த 26 மாணவர்கள் தற்கொலை செய்து கொண்டுள்ளனர். மாணவர்களின் மன அழுத்தத்தை குறைக்க கோட்டாவில் உள்ள பயிற்சி மையங்களுக்கு ராஜஸ்தான் அரசு பல்வேறு வழிகாட்டுதல்களை வழங்கியுள்ளது.

இந்நிலையில் முகமது சையது தனது விடுதி அறையில் தூக்கிட்டு தற்கொலை செய்து கொண்டார். இது தொடர்பாக காவல்துறைக்கு தகவல் தெரிவிக்கப்பட்ட நிலையில், போலீசார் சம்பவ இடத்திற்குச் சென்று மாணவரின் உடலை கைப்பற்றி பிரேத பரிசோதனைக்கு அனுப்பி வைத்தனர். மாணவரின் தற்கொலைக்கான காரணம் குறித்து விசாரணை நடத்தி வருவதாக போலீசார் தெரிவித்துள்ளனர்.

---

## வீரவணக்க நாளை முன்னிட்டு

# மொழிப்போர்த் தியாகி அரங்கநாதன் நினைவிடத்தில் அஞ்சலி!

### கழகத் தோழர்களுக்கு சென்னை தெற்கு மாவட்டச் செயலாளர், அமைச்சர் மா. சுப்பிரமணியன் வேண்டுகோள்!



மொழிப்போர்த் தியாகிகள் வீரவணக்க நாளை முன்னிட்டு, தீந்தமிழ் காக்க தம் தேக்கு மர தேகங்களை வெந்தழலுக்கு விருந்தாக்கி மறைந்தும், தமிழர் நெஞ்சில் மறவாமல் வாழ்கின்ற வீரமறவர்களாம், தமிழ் காத்த தியாக தீபமான மொழிப்போர் தியாகி அரங்கநாதன் அவர்களுக்கு இன்று (25.1.2024 - வியாழக்கிழமை) காலை 8.30 மணியளவில் சென்னை, விருகம்பாக்கத்தில் உள்ள நினைவிடத்தில் கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ். பாரதி, எம்.பி., சென்னை தெற்கு மாவட்டச் செயலாளர் மா.சுப்பிரமணியன் மற்றும் கழக முன்னணியினர் மலர்வளையம் வைத்து வீரவணக்கம் செலுத்துகின்றனர்.

கழக மாநில அமைச்சர் பெருமக்கள், முன்னாள் இந்நாள் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், தலைமைக் கழகச் செயலாளர்கள், தலைமைச் செயற்குழு , பொதுக்குழு உறுப்பினர்கள், மாவட்டக் கழக, பகுதிக் கழக, வட்டக் கழக நிர்வாகிகள், மாநகராட்சி மன்ற உறுப்பினர்கள் மற்றும் இளைஞர் அணி, மகளிர் அணி, மாணவர் அணி, இலக்கிய அணி, தொழிலாளர் அணி, வழக்கறிஞர் அணி, தொண்டர் அணி, விவசாய அணி, விவசாயத் தொழிலாளர் அணி, மீனவர் அணி, ஆதிதிராவிடர் நலக்குழு, மகளிர் தொண்டர் அணி, கலை, இலக்கிய பகுத்தறிவுப் பேரவை, மருத்துவர் அணி, பொறியாளர் அணி, சிறுபான்மையினர் நலஉரிமைப் பிரிவு, வர்த்தகர் அணி, தகவல்தொழில்நுட்ப அணி, சுற்றுச்சூழல் அணி, அயலக அணி, அமைப்புசாரா ஓட்டுநர் அணி, விளையாட்டு மேம்பாட்டு அணி ஆகிய அனைத்து அணி நிர்வாகிகள் மற்றும் கழகத் தோழர்கள் அனைவரும் தவறாமல் வருகை தந்து மொழிப்போர்த் தியாகிக்கு அஞ்சலி செலுத்த வேண்டுமென கேட்டுக் கொள்கிறேன்.

**அமைச்சர் மா.சுப்பிரமணியன்,**
செயலாளர்,
சென்னை தெற்கு மாவட்ட தி.மு.க.



இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள், நேற்று (23.1.2024) நேரு விளையாட்டரங்கில் நடைபெறும் 'கேலோ இந்தியா' இளைஞர் விளையாட்டு போட்டிகளில் 110 மீ தடை தாண்டி ஓட்டத்தில் (hurdles) வெற்றிபெற்ற வீரர் பி.விஷ்ணுவுக்கு வாழ்த்துத் தெரிவித்தார். தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் உறுப்பினர் செயலாளர் ஜெ.மேகநாத ரெட்டி, தமிழ்நாடு தடகள சங்கத்தின் வாழ்நாள் தலைவர் வால்டர் தேவாரம் (ஓய்வு) ஆகியோர் உடனிருந்தனர்.

# திருப்பூர் வடக்கு மாவட்டத்தில் வீர வணக்க நாள் பொதுக்கூட்டங்கள்!

## திரளாக கலந்து கொள்ள மாவட்டக் கழக செயலாளர் க.செல்வராஜ் எம்.எல்.ஏ. அறிக்கை!

திருப்பூர், ஜன. 25 -

திருப்பூர் வடக்கு மாவட்டச் செயலாளர் க.செல்வராஜ் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

இந்தித் திணிப்புக்கு எதிராக, தாய்மொழியாம் தமிழை காத்திடும் போரில் தம் இன்னுயிர் ஈந்து தாய் மொழி காத்த தியாகிகளின் ஈகத்தை, தியாகத்தை நினைவு கூர்ந்து போற்றும் வகையில் ஒவ்வொரு ஆண்டும் ஜனவரி 25ம் தேதி மொழிப்போர்த் தியாகிகள் தினம் கடைப்பிடிக்கப் படுகிறது.

நாம் விரும்பாத ஒரு மொழியை எதிர்த்துப் போரிட்டு, ஐயகோ நம்மிடம் இல்லாது மறைந்து போன நடராசனின் வீர வாழ்வை, நாங்களும் பின் பற்றுவோம் என்று உறுதி கொள்வீர்களா? என்ற பேரறிஞர் அண்ணாவின் கூற்றின் படி, தமிழ்நாடு முதலமைச்சர், கழகத் தலைவர் அவர்களின் ஆணைக்கிணங்க, கழகத்தின் மாணவர் அணி சார்பில் தமிழ்நாடு முழுவதும் ஆண்டு தோறும் நடைபெறும் வீர வணக்க நாள் பொதுக்கூட்டங்கள் நம் திருப்பூர் வடக்கு மாவட்டத்தில், இன்று (ஜனவரி 25ம் நாள்) திருப்பூர் மற்றும் பல்லடம் ஆகிய இடங்களில் மாவட்டக் கழக செயலாளர் க.செல்வராஜ் எம்.எல்.ஏ. ஆகிய எனது தலைமையில் நடைபெற உள்ளது..

இதில் திருப்பூரில் இடுவம்பாளையம், காமாட்சியம்மன் கோவில் திடலில் நடைபெறுகிற வீரவணக்க நாள் பொதுக்கூட்டத்தில் கழக சட்டதிட்ட திருத்தக் குழு செயலாளர், மாநிலங்களவை உறுப்பினர் இரா. கிரிராஜன் எம்.பி, திருப்பூர் வடக்கு தொகுதி தேர்தல் பொறுப்பாளர் திராவிடமணி, பல்லடம் நகரத்தில் நடைபெறுகிற வீரவணக்க நாள் பொதுக் கூட்டத்தில் தலைமைக் கழக பேச்சாளர்கள் ஜோன்ஸ் ரூசோ, போர் முரசு கதிரவன் ஆகியோர் கலந்துகொண்டு சிறப்புரை யாற்ற உள்ளனர்.

அதுசமயம் மாநில, மாவட்ட, மாநகர நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், ஒன்றிய, நகர, பகுதி, பேரூர், வட்ட, கிளைக் கழக செயலாளர்கள் மற்றும் நிர்வாகிகள், இந்நாள், முன்னாள் உள்ளாட்சி பிரதிநிதிகள், சார்பு அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், மற்றும் கழக மூத்த முன்னோடிகள், அனைவரும் எழுச்சியோடு பெரும் திரளாக பங்கேற்று சிறப்பான முறையில் நடத்திட வேண்டுமென கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு அவர் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.



தமிழ்நாடு செய்தி மக்கள் தொடர்புத் துறையின் சார்பில், நாமக்கல் கவிஞர் இராமலிங்கம் பிள்ளை அவர்களின் நினைவு இல்லத்தில் மார்பளவு வெண்கல சிலையை தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமைச் செயலகத்தில், காணொலிக்காட்சி வாயிலாக திறந்து வைத்தார். நாமக்கல் நகராட்சி, நாமக்கல் கவிஞர் இராமலிங்கம் பிள்ளை அவர்களின் நினைவு இல்லத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில், நாமக்கல் கிழக்கு மாவட்டக் கழகச் செயலாளரும், மாநிலங்களவை உறுப்பினருமான கே.ஆர்.என்.இராஜேஸ்குமார், நாமக்கல் மாவட்ட ஆட்சித்தலைவர் மருத்துவர் ச.உமா, நாமக்கல் சட்டமன்ற உறுப்பினர் பெ.ராமலிங்கம் ஆகியோர் கலந்து கொண்டனர்.










கலைஞர் 100 1924 - 2024
மொழிப்போர்த் தியாகிகள் தினம்
வீர வணக்கம்! வீர வணக்கம்!!
ஊருக்காக வாழ்ந்தவர் சிலையானார் நம் மனதில்
நாள்: 25.1.2024,வியாழக்கிழமை
நேரம்: காலை 9 மணி அளவில்
SRI ARTS
திருச்சியில் அமைத்துள்ள
முத்தமிழறிஞர் கலைஞர்
திருஉருவ சிலையை காணொளி காட்சி வாயிலாக திறந்து வைக்கிறார்
கழகத்தலைவர்-மாண்புமிகு
முதலமைச்சர்
அவர்கள்
கழக முதன்மைச் செயலாளர்,
மாண்புமிகு நகர்ப்புற வளர்ச்சித்துறை அமைச்சர்
திரு. கே.என்.நேரு அவர்கள்
அன்பில் மகேஸ் பொய்யாமொழி
மாவட்டக் கழகச் செயலாளர்-பள்ளிக் கல்வித்துறை அமைச்சர்
திருச்சி தெற்கு மாவட்ட தி.மு.க.



நாமக்கல் கவிஞர் இராமலிங்கம் அரசினர் மகளிர் கலைக் கல்லூரியில், புதுமைப் பெண் திட்டத்தின் கீழ் பயன்பெற்ற 1,883 கல்லூரி மாணவியர்களுக்கு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் வாழ்த்து மடல்கள் மற்றும் 10 பெண்களுக்கு சிறந்த தொழில் முனைவோருக்கான விருதுகளை நாமக்கல் கிழக்கு மாவட்டக் கழகச் செயலாளரும், மாநிலங்களவை உறுப்பினருமான கே.ஆர்.என். இராஜேஸ்குமார் வழங்கினார். இந்நிகழ்வில் மாவட்ட ஆட்சியர் ச.உமா, பெ.இராமலிங்கம் எம்.எல்.ஏ, நாமக்கல் மேற்கு மாவட்டக் கழகச் செயலாளர் எஸ்.எம்.மதுரா செந்தில் மற்றும் உள்ளாட்சி பிரதிநிதிகள், அரசு அலுவலர்கள் மாணவியர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

# பெண்கள் கல்வி, பொருளாதாரத்தில் வளர்ச்சியடையும் போது சமுதாயம் வளர்கிறது!

## ‘புதுமைப் பெண் திட்டம்’ - கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் எம்.பி. பேச்சு!

நாமக்கல், ஜன. 25 -

நாமக்கல் மாவட்டம், நாமக்கல் கவிஞர் இராமலிங்கம் அரசினர் மகளிர் கலைக் கல்லூரியில், புதுமை பெண் திட்டத்தின் கீழ் பயன்பெற்ற 1,883 கல்லூரி மாணவியர்களுக்கு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் வாழ்த்து மடல்கள் மற்றும் 10 பெண்களுக்கு சிறந்த தொழில் முனைவோருக்கான விருதுகள் வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது. மாவட்ட ஆட்சித்தலைவர் மருத்துவர் ச.உமா தலைமை தாங்கினார். நாமக்கல் சட்டமன்ற உறுப்பினர் பெ. இராமலிங்கம், நாமக்கல் மேற்கு மாவட்டக் கழகச் செயலாளரும், நகரமைப்பு மண்டல திட்டக்குழு உறுப்பினருமான எஸ்.எம். மதுரா செந்தில் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

இந்நிகழ்வில் நாமக்கல் கிழக்கு மாவட்டக் கழகச் செயலாளரும், மாநிலங்களவை உறுப்பினருமான கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் கலந்து கொண்டு 1,883 மாணவியர்களுக்கு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் வாழ்த்து மடல்கள் மற்றும் விருதுகளை வழங்கி, பேசும் போது, தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அரசு பள்ளிகளில் பயிலும் மாணவியர்களின் பாதுகாவலராக திகழும் வகையில் அரசு பள்ளிகளில் பயின்ற மாணவியர்களுக்கு உயர் கல்வி பயில மாதம் ரூ.1,000 வழங்கும் மூவலூர் ராமமிர்தம் அம்மையார் நினைவு புதுமைப் பெண் திட்டத்தை தொடங்கி, பெண்களின் முன்னேற்றத்தில் தமிழ்நாடு முன்னணி மாநிலமாக திகழும் வகையில் பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருகின்றார். கல்லூரி பயிலும் மாணவியர்களின் கல்வி எந்த காரணத்தினாலும் தடைப்பட கூடாது என்பதற்காகவும், பெண்களுக்கு குறிப்பாக ஏழை பெண்களுக்கு வழங்கப்படும் கல்வி சமுதாயத்திற்கே பயன்பெறும் வகையில் செயல்படுத்தி உள்ளார்.

புதுமை பெண் திட்டத்தின் கீழ் நாமக்கல் மாவட்டத்தில் செயல்பட்டு வரும் 146 கல்லூரிகளில் சுமார் 15,725 மாணவியர்கள் பயன்பெற்று வருகின்றார்கள். அந்தவகையில் நாமக்கல் கவிஞர் இராமலிங்கம் கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் பயிலும் 1,883 மாணவியர்கள் பயன்பெற்றுள்ளனர். புதுமை பெண் திட்டத்தில் பயன்பெற நீங்கள் நேரடியாக ஆன்லைன் மூலம் விண்ணப்பிக்கலாம். மாணவியர்கள் இந்த திட்டத்தின் நோக்கத்தை கருத்தில் கொண்டு தங்கள் கல்வியை மேம்படுத்தி உயர்நிலையை அடைய வேண்டும்.

பெண்கள் கல்லூரி படிப்பில் இளநிலை படிப்புடன் நின்றுவிடாமல், முதுகலை பட்டப்படிப்பு வரை பயில வேண்டும். அரசு தேர்வுகளில் பெண்கள் அதிகளவில் பங்கேற்க, தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பெண்களின் வேலைவாய்ப்பினை உறுதி செய்யும் வகையில் அரசு பணியில் 50 சதவிகிதம் இட ஒதுக்கீடு மற்றும் உள்ளாட்சி அமைப்புகளில் பெண்களுக்கு 50 சதவிகித ஒதுக்கீடு, இந்து சமய அறநிலையத்துறையில் திருக்கோவில்களில் பெண்கள் நியமனம் போன்ற திட்டங்களை செயல்படுத்தி வருகிறார்கள். எனவே, பெண்கள் கல்வியின் முக்கியத்துவத்தை உணர்ந்து உயர் கல்வி பயின்று உயர் பதவிகளை வகித்திட வேண்டும். அரசின் அனைத்து திட்டங்களையும் பயன்படுத்தி கொண்டு பெண்கள் தங்கள் பெற்றோருக்கும், ஆசிரியர்களுக்கும், சமுதாயத்திற்கும் பெருமை சேர்த்திட வேண்டும் என கே. ஆர்.என்.இராஜேஸ்குமார் எம்.பி. தெரிவித்தார்.

மேலும், சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறையின் சார்பில், பெண் குழந்தைகளை காப்போம், பெண் குழந்தைகளுக்கு கற்பிப்போம் திட்டத்தின் விழிப்புணர்வு கையெழுத்து இயக்கத்தை தொடங்கி வைத்து, வளரிளம் பெண்களுக்கான சிறப்பு மருத்துவ முகாம் மற்றும் பாரம்பரிய உணவு திருவிழாவை கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் எம்.பி. பார்வையிட்டார்.

இந்நிகழ்ச்சியில் நாமக்கல் நகர்மன்ற தலைவர் து.கலாநிதி, நகர்மன்ற துணைத் தலைவர் செ. பூபதி, மாவட்ட சமூக நல அலுவலர் (பொறுப்பு) க.பிரபா, மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலுவலர் சதீஷ்குமார், மாவட்ட முன்னோடி வங்கி பொது மேலாளர் முருகன், நாமக்கல் கவிஞர் இராமலிங்கம் கலை மற்றும் அறிவியல் கல்லூரி முதல்வர் முனைவர்.மா.கோவிந்தராசு, நாமக்கல் தெற்கு நகர செயலாளர் ராணா ஆனந்த், உள்ளாட்சி பிரதிநிதிகள் மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் உட்பட கல்லூரி மாணவியர்கள், கல்லூரி பேரசிரியர்கள் பலர் கலந்து கொண்டனர்.

## பி.எல்.எஸ்.உதயகுமார் தலைமை!

# தென்காசி வடக்கில் வீரவணக்க நாள் பொதுக்கூட்டம்!

## எஸ்.ஆஸ்டின் - சலாவுதீன் - ஈ.ராஜா எம்.எல்.ஏ. சிறப்புரை!

தென்காசி.ஜன.25-

தென்காசி வடக்கு மாவட்ட தி.மு.க. மாணவர் அணி சார்பில் மொழிப்போர்த் தியாகிகளுக்கு வீரவணக்க நாள் பொதுக்கூட்டம் இன்று (25ஆம் தேதி - வியாழக்கிழமை) மாலை 6 மணி அளவில் சங்கரன் கோவில் முப்புடாதி அம்மன் கோவில் முன்பு மாவட்ட மாணவர் அணி அமைப்பாளர் பி.எல்.எஸ். உதயகுமார் தலைமையில்

மாவட்ட அவைத்தலைவர் பத்மநாபன், மாவட்ட பொருளாளர் சரவணன், மாவட்ட துணை செயலாளர்கள் மனோகரன், ராஜதுரை,புனிதா,நகர அவைத் தலைவர் முப்புடாதி, மாவட்ட மாணவர் அணி துணை அமைப்பாளர்கள் விக்ரம் மணிகண்டன், தினேஷ் குமார், முத்து லட்சுமி, வீரமணிகண்டன் ஆகியோர் முன்னிலையில் நடைபெறுகிறது. சங்கரன்கோவில் தெற்கு ஒன்றிய செயலாளர்,ஒன்றிய குழு தலைவர் லாலா சங்கர பாண்டியன் வரவேற்புரையாற்றுகிறார். நிகழ்ச்சியை சங்கரன்கோவில் நகர செயலாளர் மு.பிரகாஷ் தொகுத்து வழங்குகிறார்.

இந்நிகழ்வில் தலைமைக் கழக பேச்சாளர்கள் எஸ். ஆஸ்டின், குளித்தலை சலாவுதீன், தென்காசி வடக்கு மாவட்ட செயலாளர் ஈ.ராஜா எம்.எல்.ஏ ஆகியோர் பங்கேற்று சிறப்புரையாற்றுகின்றனர்.

நிகழ்வில் தென்காசி நாடாளுமன்ற உறுப்பினர் தனுஷ் எம். குமார், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் தங்கவேலு, சீனிவாசன், பரமகுரு,தீர்மான குழு உறுப்பினர் சரவணன்,மருத்துவர் அணி அமைப்பாளர் செண்பக விநாயகம், மாநில வர்த்தக அணி இணைச் செயலாளர் முத்துச்செல்வி, பொதுக் குழு உறுப்பினர்கள் தேவதாஸ்,சாகுல் ஹமீது,மாரிசாமி, பராசக்தி, பா. மாரிசாமி, மகேஸ்வரி, ஒன்றிய செயலாளர்கள் கடற்கரை, பொன்.முத்தையா பாண்டியன்,பூசைப்பாண்டியன்,சேர்மத் துரை, கிறிஸ்டோபர், வெற்றி விஜயன், பெரியதுரை, இராமச்சந்திரன்,மதி மாரி முத்து,புளியங்குடி நகரச் செயலாளர் அந்தோணி சாமி,

பேரூர் கழகச் செயலாளர்கள் மாரிமுத்து,ரூபி பாலசுப்பிரமணியன்,கே. டி.சி.குருசாமி, நகர்மன்ற தலைவர்கள் உமா மகேஸ்வரி சரவணன்(சங்கரன் கோவில்) விஜயா (புளியங்குடி) பேரூராட்சி தலைவர்கள் கோமதி, இந்திரா, லாவண்யா உள்பட இளைஞரணி,மாணவரணி மற்றும் சார்பு அணிகளின் நிர்வாகிகள்,நகர கழக நிர்வாகிகள்,வார்டு கழக நிர்வாகிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள், கழக முன்னோடி கள், தொண்டர்கள் கலந்து கொள்கின்றனர்.

நிகழ்ச்சி நிறைவில் மாவட்ட மாணவரணி துணை அமைப்பாளர் சதீஷ்குமார் நன்றி உரையாற்றுகிறார்.



சென்னை, தலைமைச் செயலகத்தில், நேற்று முன்தினம் (23.01.2024) செய்தி மக்கள் தொடர்புத் துறை இயக்குநர் த. மோகன், இந்திய பத்திரிகை கவுன்சிலின் (Press Council of India) அங்கீகாரத்திற்கான துணைக் குழுவின் (SubCommittee on Accreditation) ஒருங்கிணைப்பாளர் வினோத் கோஹ்லி (Thiru. Vinod Kohli) மற்றும் உறுப்பினர்கள் ஜெய் சங்கர் குப்தா (Thiru. Jai Shankar Gupta), கிங்ஷுக் பிராமணிக் Thiru. Kingshuk Pramanik), பிரசன்ன குமார் மொஹந்தி (Thiru. Prasanna Kumar Mohanty), எல். சி. பார்தியா (L. C. Bhartiya) ஆகியோருடன் ஆலோசனை மேற்கொண்டார். இக்கூட்டத்தில், செய்தி மக்கள் தொடர்புத் துறை கூடுதல் இயக்குநர் ச.செல்வராஜ் மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# வீர வணக்கம் செலுத்துவோம்! வீர சபதம் ஏற்றுக்கொள்வோம்!

“போர்க்களத்தில் பாய்ந்து வரும் எதிரியின் ஈட்டிக்கும், வாளுக்கும் அஞ்சாமல் மார்பு காட்டும் போர் வீரன் கூட, தன் வீட்டு தோட்டத்தின் நெருஞ்சி முள் மீது படுத்துருளச் சொன்னால், தயங்குவான்.” என நமது தலைவர் கலைஞர் அவர்கள் ஒரு முறை குறிப்பிட்டார்கள்.

ஆனால் அந்த படைகளத்துப் பெருவீரனை விட, மன உரம் கொண்ட சிங்கத்தமிழ் இளைஞர் கூட்டம், தங்கத்தமிழ் மொழி காக்க, தங்களது தேகத்தை தீக்கிரையாக்கியும், நச்சுக்கோப்பையேந்தியும், கொடியோரின் கொலைபாதக குண்டுகளுக்கு தங்களையே காணிக்கையாக்கிய நிகழ்ச்சி தான் தியாக வரலாற்று பக்கங்களைக் கொண்ட இந்தி எதிர்ப்புப் போர்.

இத்தியாக செம்மல்களை நினைவு கூர்ந்து வழங்கிடும் நாள் தான் இந்த ஜனவரி 25 வீரவணக்க நாள்.

“ எப்பக்கம் வந்து விடும் இந்தி? அதன் இடுப்பொடிக்க கிளம்புது காண் தமிழ் சிங்க கூட்டம் “ என கர்ஜித்த கம்பீரத் தலைவர் கலைஞர் அவர்களின் வீர உரை கேட்டும்,

“ எதிர்ப்பை இனிப்பாக்கிக் கொள்ளும் ஏந்தல்களன்றோ என்தம்பிகள் “ என்ற பேரறிஞர் அண்ணா அவர்களின் அன்பு மொழி கேட்டும், ஆர்ப்பரித்த பெரும் இளைஞர் பட்டாளம், வீடு மறந்து, தாய் தந்தை, மனைவி மக்கள் உறவு மறந்து அன்னை தமிழ் காக்க, ஆதிக்க இந்தியை எதிர்த்த வீர வரலாற்று தியாகச் சரித்திரமன்றோ இந்தி எதிர்ப்புப் போராட்டம்.

ஒருநாட்டை அழிக்க வேண்டுமாயின் முதலில் அதன் மொழி அழிக்கப்பட வேண்டும் என்பது ஜெர்மானிய பழமொழி.

இதை மெய்ப்பிக்கும் வகையில் கன்னித்தமிழ் மீது காட்டு தர்பார் இந்தித் திணிப்பு கட்டாயமாக்கப்பட சட்டம் கொண்டு வந்த ஆட்சியாளர்கள் எண்ணம் பொடிபட, தமிழகமே கொந்தளித்த காலமன்றோ, இந்தி எதிர்ப்புப் போர்.

1938, 1963 65 என இரு கட்டமாக நடைபெற்ற மொழிப்போரின் வேகம் 63 65 ஆம் ஆண்டுகளில் பெருந்தீயாகவே பற்றி எரிந்தது.

முதல் மொழிப்போரின் களபலியாக நடராசன், தாளமுத்து தொடங்கி, 1964 கீழப்பாவூர் சின்னசாமி, 1965 ல் கோடம்பாக்கம் சிவலிங்கம், விருகம்பாக்கம் அரங்கநாதன், சிவகங்கை ராஜேந்திரன், பீளமேடு தண்டபாணி, சத்தியமங்கலம் முத்து, ஆசிரியர் வீரப்பன், கீரனூர் முத்து, விராலிமலை சண்முகம், மயிலாடுதுறை சாரங்கபாணி போன்ற தியாக தீபங்கள் தீக்குளித்தும், விஷமருந்தியும், துப்பாக்கி தோட்டங்களுக்கிறையாகியும் மாண்டனர்.

உலக வரலாற்றில் எத்தனை, எத்தனை போராட்டங்கள், கிளர்ச்சிகள், புரட்சிகள், ஆர்ப்பாட்டங்கள், விடுதலை வேட்கையை நாம் அறிந்திருக்கிறோம். ஆனால் தாய்மொழி தமிழ் மீது கொண்ட காதலால், தங்களின் இன்னுயிரையே தந்து, செந்தணலின் சூட்டிலும், செம்மொழியாம் தமிழ் வாழ்க! வாழ்க! என தேக்குமரம் போல் வீழ்ந்த தியாக மறவர் பாசறைக் கொண்டது தமிழகம் மட்டுமே!

**வழக்கறிஞர் வெ.அன்புவாணன்**
*கொள்கை பரப்பு துணைச் செயலாளர்*



சுதந்திர போராட்டமெனச் சொல்லிக் கொண்டு, வெடிகுண்டு வீசியதைக் கேட்டிருக்கிறோம். ரயில் தண்டவாளங்களைத் தகர்த்த அமைப்புக்களை நாம் அறிவோம். ஏதுமறியா அப்பாவி மக்களை கொன்று போட்ட கொடிய சம்பவங்கள் ஏராளம், ஏராளம்.

மறுபரிசீலனை செய்ய முடியாத செயல் மரணம் மட்டுமே!

ஆனால்,

பத்து மாதம் சுமந்து பெற்ற அன்னை,

பாசத்தோடு பள்ளிக்கனுப்பிய தந்தை,

நேசமணம் புரிந்த மனைவி,

ஆசைமொழி பேசும் பிள்ளை செல்வங்கள் இவர்களைவிட தாய்மொழி தமிழே உயர்ந்ததென எண்ணிய உத்தமர் கூட்டம் உடனடி சட்டத்தின் மூலம் ஆதிக்க இந்தி திணிக்கப்படுவது கண்டு, நெஞ்சம் பதறி, அதை தடுக்க, எதிர்க்க தம்மிடமுள்ள விலை மதிப்பற்ற செல்வமாம் இன்னுயிரையும் மாய்த்துக் கொண்ட, பலியான தியாக வேள்வி தான் மொழிப் போர் புரட்சி!

அதில் லட்சோபலட்சம் தமிழ் உள்ளங்களிலிருந்து பீறிட்டுக் கிளம்பி,

தமிழ் வாழ்க! தமிழினப்பகைவர் வீழ்க! இந்தி ஒழிக!

அண்ணா வாழ்க! கலைஞர் வாழ்க! என அதிர்ந்தது தமிழர் முரசு.

பின்னர் அடங்கியது மத்திய மாநில அரசு.

இக்காலகட்டத்தில் கழகம் ஆற்றியபங்கும், ஏற்ற தியாகமும், தமிழ் மொழி வரலாற்றில் மறுக்க முடியாத, மறைக்க முடியாத பக்கங்களாகும்.

மறைந்த மாமேதை முரசொலி மாறன் அவர்கள் அறிவார்ந்த கணையொன்றை தொடுத்தார். “ அக்பர் காலத்திலே ஜஹாங்கீர் காலத்திலே பிரபலமாக இருந்த மொழி பிராஜ்பாஷா இந்தி அல்ல.(அக்பர் பிரா ஜ்பாஷாவிலே கவிதைகள் கூட இயற்றியிருக்கிறார் ).

இந்தி நேற்று உருவான மொழி.

1920 ஆம் ஆண்டிலே பிரபல ஆங்கில நூலாசிரியர் கோல்ட்ஸ்மித் எழுதிய “ ஹெர்மிட் ( Hermit ) என்ற கவிதையை ஒருவர் மொழி பெயர்த்தார்.

அதுதான் நவீன இந்தியில் எழுதப்பட்ட முதல் கவிதை!

அதுகூட மொழி பெயர்ப்பு!

ஆனால், இங்கோ “ தொல்காப்பியம் “ மூவாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு எழுதப்பட்டதா? அல்லது ஏழாயிரம் ஆண்டுகளுக்கு முன் எழுதப்பட்டதா? என்கிற விவாதம் ஆராய்ச்சியாளர்களுக்கிடையே நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

இத்தகைய தொன்மையான மொழிக்கு சொந்தக்காரர்கள் இந்தியை எப்படி ஏற்றுக்கொள்ளமுடியும்?

இந்தி நுழைவை கலாச்சார ஆக்கிரமிப்பாக கருதுவதில்லை தவறென்ன இருக்கமுடியும்? “

பதிலேதுமில்லை. இந்திக்காரரிடமிருந்து அல்ல. அம்மொழியில் பாண்டியத்துவம் மிக்கவர் என்று பிதற்றிக் கொண்டிருந்தோரிடமிருந்தும்.

“ இந்தியாவிற்கு பொதுமொழி தேவை என்பதற்காக எந்த மொழியையும் நாம் வலுக்கட்டாயமாகத் திணிப்பது என்பது நிச்சயமாக கூடாது. “ என பண்டித நேரு 1948 ல் நாடாளுமன்றத்தில் பேசிய பேச்சுக்கு மாறாக இந்தி கட்டாயமாக தமிழ்நாட்டில் திணிக்கப்படுவதை எதிர்த்து அறவழியில் தங்கள் எதிர்ப்பைக் காட்ட நம் தலைவர் பேரறிஞர் அண்ணா 1965 ஜனவரி 26 ம் நாளை துக்கநாளாக அறிவித்தார்கள்.

இந்தி ஆதிக்க கண்டன கூட்டம் 26.1.1965 செவ்வாய் மாலை 4.30 மணிக்கு சென்னை நுங்கம்பாக்கம் ஏரிக்கரை மைதானத்தில் அறிஞர் அண்ணா எம். ஏ.எம்.பி, கே.ஏ.மதியழகன் எம். எல். ஏ, இரா. செழியன் எம். பி, இராம. அரங்கண்ணல் எம். எல். ஏ, இரா. தருமலிங்கம் எம். பி, காஞ்சி மணிமொழியார் எம். எல். ஏ, நீலநாராயணன் ஆகியோர் பேசுவதாக அறிவிக்கப்பட்டது.

பேரறிஞர் அண்ணா 25.1.1965 அன்று இரவு 1.30 மணிக்கு கைது செய்யப்படுகிறார்.

தலைவர் கலைஞர் குளித்தலை கூட்டத்தை முடித்துக் கொண்டு, கோவைக்குச் செல்லும் முன் மசூதிபாளையம் திலக் லாட்ஜுக்குச் சென்று கொண்டிருக்கையில் இரவு 1 மணிக்கு சிதம்பரம் வேணு, குளித்தலை முத்துகிருஷ்ணன் ஆகியோருடன் வழியிலேயே கைது செய்யப்படுகிறார்.

அண்ணாவும், கலைஞரும், கழக முன்னணித் தலைவர்களும், இந்திய தண்டனைச் சட்டப் பிரிவு 151 ன் படி கைது செய்யப்பட்டு பிப்ரவரி 2, 3 தேதிகளில் விடுதலை செய்யப்பட்டனர்.

அமைதியின் உருவமாம் அண்ணா அவர்கள் ஜனவரி 26 ல் எந்தவிதமான அமைதிக் குறைவான காரியங்களும் நடைபெறவொட்டாமல், கழகத் தோழர்கள் மிகக் கட்டுப்பாடுடன் நடந்து கொள்ள வேண்டும் என்பதை பொறுப்புடன் எடுத்துக் கூறியிருந்தார்கள்.

ஆனால் பொறுப்புள்ள பதவியில் அமர்ந்திருந்தோர் பொறுப்பற்ற முறையில், ஆணவ, அராஜக, அசிங்கமான முறையில் பேசினர்.

ஜனவரி 25 ல் கருப்புக்கொடி ஏற்றினால், ஏற்றியவனின் கையை வெட்டுவோம்.

அன்று எந்த கட்சியிலும் இல்லாத பெண்கள் கூட தப்பித்தவறி கறுப்பு சேலை, கறுப்பு ரவிக்கை அணிந்து கொண்டு போனால், நடுத் தெருவில் அவர்கள் நிர்வாணமாக்கப்படுவார்கள்.

தி.மு.க. தலைவர்களின் தலைகளை வெட்டி, காமராசர் காலடியில் போடுவோம்.

இப்படியெல்லாம் அன்றைய அமைச்சர்கள் முன்னிலையில் பேசப்பட்டது.

ஆனால் முரசொலி நாளேட்டில் தலையங்கம் தீட்டியதாகவும், முதலமைச்சர் பக்தவத்சலம் அவர்களை கேவலப்படுத்தி கார்ட்டூன் வெளியிட்டதாகவும், எல்லாவற்றையும் விட முரசொலியில் கேலிச் சித்திரங்கள் தீட்டியதின் மூலம் மாணவர் கிளர்ச்சியை தூண்டினாரென இந்திய பாதுகாப்புச் சட்டம் 30 (1) பிரிவின் படி தலைவர் கலைஞர் அவர்கள் மீண்டும் 16 . 2.1965 இரவு சென்னையில் கைது செய்யப்பட்டு 17 ந்தேதி பாளையங்கோட்டை சிறையில் அடைக்கப்பட்டார்.

இந்த சட்டப்பிரிவின்படி கைது செய்யப்பட்ட ஒரே தலைவர் அன்றைய நாளில் நம் தலைவர் கலைஞர் அவர்கள் மட்டுமே.

பாளைச்சிறையில் தனிமைக் கொட்டடியில் அடைக்கப்பட்ட தலைவர் கலைஞர் 62 நாட்களுக்குப் பிறகு 17.4.1965 விடுதலை செய்யப்பட்டார்.

இத்தகைய தியாக வரலாற்று தலைவரின் தடம் பற்றி நடைபோடும் தி.மு.க. கடந்த 60 ஆண்டுகளாக மொழிப்போர்த் தியாகிகளுக்கு வீரவணக்கம் செலுத்திடும் நாள்தான் ஜனவரி 25.

வீரவணக்கம் செலுத்திடும் இந்நாளில் வீர சபதம் ஒன்றையும் நாம் ஏற்றுக் கொள்வோம்.

அது ஆதிக்க இந்தியை விடவும் ஆபத்தான மதவாத ஒன்றிய அரசை அகற்றிடும் சபதம்!

இந்தித் திணிப்பு எதிர்ப்பு போர்க்களத்தில் தமிழ் இளைஞர்களுக்கு துணைநின்ற பேரியக்கம், அதே இளைபடையைக் கொண்டு, அதன் தளபதி நமது இளைய தலைவர் உதயநிதி அவர்கள் சுற்றிச் சுழன்று களமாடவிருக்கும் நாடாளுமன்றத் தேர்தலில் வெற்றி வாகை சூடிட,

தலைவராக தேர்வு பெற்ற 2018 முதல் நடைபெற்ற அனைத்துத் தேர்தல்களிலும் வெற்றிக்கனி பறித்த வெற்றி திருமகன் தமிழ்நாடு முதலமைச்சர், தலைவர் தளபதியவர்களின் தேர்தல் வியூகங்கள் கணையென பாய்ந்து இலக்கை அடைய அயராது நாம் பாடுபட வேண்டும் எனும் வீர சபதமேற்போம்.

ராகுல் காந்திக்கு ஆபத்து!

# நடைபயணத்தின் போது பா.ஜ.க.வினர் நாசவேலை!

## காங்கிரஸ் கட்சித் தலைவர் கார்கே – அமித்ஷாவுக்கு கடிதம்!

கவுகாத்தி, ஜன. 25-

அசாமில் பாரத் ஜடோ நியாய நடைபயணத்தில், காங்கிரஸ் தொண்டர்களுக்கும் அம்மாநில போலீசாருக்கும் இடையே மோதல் ஏற்பட்ட நிலையில், இந்த விவகாரத்தில் தலையிடக் கோரி அமித்ஷாவுக்கு, கட்சியின் தலைவர் மல்லிகார்ஜுன கார்கே கடிதம் எழுதியுள்ளார்.

கடந்த ஆண்டு கன்னியாகுமரி முதல் காஷ்மீர் வரை ராகுல் காந்தி மேற்கொண்டிருந்த பாரத் ஜடோ யாத்திரை காங்கிரஸுக்கு பெரும் உத்வேகத்தை கொடுத்தது. கடந்த 10 ஆண்டுகளாக காங்கிரஸ் எதிர்கொண்டிருந்த இடர்பாடுகள் கொஞ்சம் நஞ்சமல்ல. ஏற்கெனவே ஆட்சியிலிருந்த மாநிலத்தில் ஆட்சியை இழந்தது, சொந்த கட்சியின் நிர்வாகிகளே கட்சி தலைமைக்கு எதிராக புகார்களை எழுப்பியது, மூத்த தலைவர்களின் விலகல், பா.ஜ.க.வுக்கு தாவிய முக்கிய நிர்வாகிகள் என காங்கிரஸ் தனது மொத்த பலத்தை கொஞ்சம் கொஞ்சமாக இழந்துக் கொண்டே வந்திருந்தது.

இப்படி இருக்கையில் தான் பாரத் ஜடோ யாத்திரை கட்சியின் தொண்டர்களுக்கு காங்கிரஸ் மீது புதிய நம்பிக்கையை ஏற்படுத்தியது. அவர்கள் ராகுல் காந்தியுடன் வீதியிறங்கி நடந்தார்கள். களப்பணியில் ஈடுபட்டார்கள், 10 ஆண்டுகளில் காங்கிரஸ் தன்னை வளர்த்துக்கொள்ள முழுவீச்சில் செயல்பட்டது. அதன் அங்கமாக தொண்டர்கள் இருந்தார்கள். இந்நிலையில் 'பாரத் ஜடோ நியாய யாத்திரை' என இரண்டாம் கட்ட யாத்திரையை ராகுல் காந்தி தொங்கியுள்ளார்.

இந்த யாத்திரை மணிப்பூரில் தொடங்கி மொத்தமாக 15 மாநிலங்கள், 110 மாவட்டங்கள், 100 மக்களவைத் தொகுதிகள் மற்றும் 337 சட்டமன்ற தொகுதிகள் என 67 நாட்கள் நீள்கிறது. இறுதியாக மகாராஷ்டிராவின் மும்பையில் முடிவடைகிறது. சில இடங்களில் பேருந்திலும், பல இடங்களில் நடத்தும் சுமார் 6,713 கி.மீ தூரத்தை ராகுல் காந்தி இந்த யாத்திரை மூலம் கடக்கிறார். பயண திட்டத்தின்படி மணிப்பூர், நாகலாந்தில் யாத்திரையை முடித்த அவர், கடந்த 18ம் தேதி அசாமில் யாத்திரையை தொடக்கினார்.

இம்மாநிலத்தில் 8 நாட்களில் 17 மாவட்டங்களில் 833 கி.மீ தூரமும் பயணம் மேற்கொள்கிறார். ஆனால் அசாமில் அவர் நுழைந்ததிலிருந்து சலசலப்புகள் மேலெருந்திருக்கின்றன. கடந்த 19ம் தேதி யாத்திரை வாகனங்கள் மீது சிலர் தாக்குதல் தொடுத்திருக்கின்றனர். பா.ஜ.க.வின் இளைஞர் அமைப்பான பாரதிய ஜனதா யுவ மோர்ச்சா அமைப்பினர்தான் இந்த நாச வேலையில் ஈடுபட்டிருப்பதாக காங்கிரஸ் குற்றம் சாட்டியது.

இதனை தொடர்ந்து நேற்று முன்தினம் கவுகாத்தியில் ராகுல் காந்தியின் யாத்திரை நுழைய முயன்ற போது, காவல்துறை அனுமதி மறுத்தது. போக்குவரத்து நெரிசல் அதிகம் ஏற்படும் என்று கூறி தடை விதிக்கப்பட்டதாக சொல்லப்பட்டது. ஆனால், இதை ஏற்காத காங்கிரஸ் தொண்டர்கள் காவல்துறையினரின் தடுப்புகளை மீறி உள்ளே நுழைய முயன்றனர். அப்போது காவல்துறைக்கும், காங்கிரஸ் தொண்டர்களுக்கும் இடையே தள்ளுமுள்ளு ஏற்பட்டது. இதனால் ராகுல் காந்தி உட்பட பலர் மீது வழக்குப்பதிவு செய்திருக்கிறது. இந்த வழக்குப்பதிவில் உள்நோக்கம் இருப்பதாக காங்கிரஸ் கூறி வந்த நிலையில், அம்மாநில முதல்வரான பா.ஜ.க.வின் ஹிமந்த பிஸ்வ சர்மா, "நான் தான் ராகுல் காந்தி மீது வழக்குப்பதிவு செய்ய உத்தரவிட்டேன்" என்று வெளிப்படையாகவே கூறியுள்ளார். எனவே அசாமில் அசாதாரண சூழல் உருவாகியுள்ளது. இந்நிலையில், ராகுல் காந்திக்கும், அவரது பயண குழுவினருக்கும் பாதுகாப்பு அச்சுறுத்தல் எழுந்திருக்கிறது என மத்திய உள்துறை அமைச்சர் அமித்ஷாவுக்கு, காங்கிரஸ் தலைவர் மல்லிகார்ஜுன கார்கே கடிதம் எழுதியுள்ளார். அதில், பா.ஜ.க.வினர் வேண்டும் என்றே ராகுல் காந்தியின் கான்வாய் அருகே அனுமதிக்கப்பட்டுள்ளனர். இதற்கு அசாம் காவல்துறையினர் உடந்தை என்றும் குற்றம்சாட்டியுள்ளார்.

எனவே, இந்த விவகாரத்தில் தலையிட்டு ராகுல் காந்தி மற்றும் அவரது பயண குழுவினரின் பாதுகாப்பை உறுதி செய்ய வேண்டும் என்று அமித்ஷாவுக்கு எழுதிய கடிதத்தில் கார்கே குறிப்பிட்டுள்ளார்.

கே.கே.செல்லப்பாண்டியன் தலைமை! கே.எஸ்.ச.இளைய சூரியன் வரவேற்புரை!

# புதுக்கோட்டை வடக்கில் வீரவணக்க நாள் பொதுக்கூட்டம்!

## பேராசிரியர் கான்ஸ்டன்டைன் ரவீந்திரன் – அமைச்சர்கள் எஸ்.ரகுபதி – சிவ.வீ.மெய்யநாதன் மற்றும் மருத்துவர் கலை கதிரவன் சிறப்புரை!

புதுக்கோட்டை ஜன.25-

புதுக்கோட்டையில் வடக்கு மாவட்ட மாணவரணி நடத்தும் மொழிப் போர்த் தியாகிகளுக்கு வீர வணக்கநாள் பொதுக் கூட்டம் இன்று (25.01.2024 - வியாழக்கிழமை) திலகர் திடல், புதுக்கோட்டையில், வடக்கு மாவட்ட கழக செயலாளர் கே.கே. செல்லபாண்டியன் தலைமையில் நடைபெறுகிறது. வடக்கு மாவட்ட மாணவர் அணி அமைப்பாளர் கே.எஸ்.இளையசூரியன் வரவேற்புரைபுரையாற்றுகிறார். புதுக்கோட்டை நகர கழக செயலாளர் ஆ.செந்தில், சிப்காட்நகர் பா.சதீஷ்குமார் செ.பிரசன்னா, ராயல் ஆர்.சபாபதி, கோ.அண்ணாதுரை ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர். கழக செய்தி தொடர்பு செயலாளர் பேராசிரியர் கான்ஸ்டன்டைன் ரவீந்திரன், சட்டத்துறை அமைச்சர், புதுக்கோட்டை தெற்கு மாவட்ட செயலாளர் எஸ். ரகுபதி, சுற்றுச்சூழல், காலநிலை மாற்றத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன்,

தலைமைக் கழக பேச்சாளர் மருத்துவர் கலை கதிரவன் ஆகியோர் சிறப்புரையாற்றுகின்றனர்.

எம்.எம்.அப்துல்லா எம்.பி, டாக்டர் வை. முத்துராஜா எம்.எல்.ஏ, பெரியண்ணன் அரசு, கவிச்சுடர் கவிதைப்பித்தன், புதுகை விஜயா. அஞ்சுகா மீனாட்சி சுந்தரம், த.சந்திரசேகரன், வி.என்.மணி, பி.டி.அரசக்குமார், சுப.சரவணன், கே.ஆர்.என். போஸ், செ. அசோக்பாண்டியன், டாக்டர் எஸ்.ஆர். அண்ணாமலை, . அரு.வீரமணி, எஸ்.எஸ்.கருப்பையா, க.மதியழகன், பெ.இராஜேஸ்வரி, எம். லியாகத் அலி,

கீரை.தமிழ்ராஜா, சு.சண்முகம் , ஜெயலெட்சுமி தமிழ்ச்செல்வன், திலகவதி செந்தில், கே.எஸ்.சந்திரன் மு.க.ராமகிருஷ்ணன், என்.சேட்டு, தவ.பாஞ்சாலன், மு.பி.ம.சத்தியசீலன், எம்.பரமசிவம், வெ.முத்துகிருஷ்ணன் ஆர்.ஆர்.எஸ். மாரிமுத்து சி.சண்முகம் மா.தமிழ்அய்யா, அ.இளங்குமரன், கே.பி.ஐயப்பன், ஓ. எஸ்.வெங்கடாஜலம், ஆர்.சாமிநாதன், தென்னலூர் எம்.பழனியப்பன், இராப்பூசல் எம்.செந்தில் குமார், என்.சாத்தையா இரா.சந்தோஷ், ஆர்.செல்லத்துரை சி.ஆர்.வி.சித்ரா,

உ.முருகேசன், எம். எஸ்.ஏ.முகமது ரிஷா, வை.விஜயக்குமார், பா.அண்ணாத்துரை, உரக்கடை எம்.கருப்பையா, டாக்டர் சி.குறிஞ்சி வாணன், டாக்டர் மு.க.முத்து கருப்பன், வி.என்.எம். பாலு, வி.ஜி.ஆர்.மணி வண்ணன், சி.அரங்க நாயகம்,

ஆர்.டி.ராமசாமி, க.கவி வேந்தன், டி.சூசைராஜ், மஜீத் முபாரக் கி.கணபதி, எம்.ராஜா, வே.ராஜேஷ், செந்தாமரைபாலு, கா.இளவரசன், டி.எம்.ஆர்.ராமமூர்த்தி, பொன்.பாரிவள்ளல் எம்.சுப்பையா, க.வீரையா தவசுமணி, அ.பிரபா, எஸ்.வி.ஆர். ஜெய் ஸ்டாலின், மு.கலைஞர் கருணாநிதி, மு.இளஞ்சேரன், அன்சாரி பாசித் , விளாப்பட்டி சிவா,

நா.ஸ்டாலின், வி.ஏ.டி. சி. வேலுச்சாமி, இபி சண்முகம், மு..பி.மணி, வை.கோ.ராஜன், மு.கலியமூர்த்தி க.ரெங்கராஜ், திருஞானசம்பந்தம் க.நைனா முகமது, எம்.எம்.பாலு, எம்.சிவா மற்றும் மாவட்ட, ஒன்றிய,,, நகர, பேரூர், கிளைக் கழக நிர்வாகிகள், கழக முன்னோடிகள், செயல் வீரர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பிக்கின்றனர். முடிவில் மாவட்ட மாணவர் அணி துணை அமைப்பாளர் தெய்வானை நன்றி கூறுகிறார்.

ஏ.கே.எஸ்.விஜயன் – டி.பி.எம்.மைதீன்கான் சிறப்புரை!

# நெல்லை மத்தியில் வீரவணக்க நாள் பொதுக்கூட்டம்!

## என்.மாலை ராஜா தலைமை! சு.சுப்பிரமணியன் பங்கேற்பு!

நெல்லை.ஜன.25-

நெல்லை மத்திய மாவட்ட தி.மு.க மாணவர் அணி சார்பில் மொழிப் போர்த் தியாகிகளுக்கு வீர வணக்க நாள் பொதுக்கூட்டம் இன்று (25ஆம் தேதி -வியாழக்கிழமை) மாலை 6 மணி அளவில் நெல்லை டவுன் வாகையடி முனை குளப்பிறை தெருவில் மாநில வர்த்தக அணி இணைச் செயலாளர் என். மாலை ராஜா தலைமையில் மாநகர செயலாளர் சு.சுப்பிரமணியன் நெல்லை பகுதி கழக செயலாளர் நமச்சிவாயம் என்ற கோபி ஆகியோர் முன்னிலையில் நடைபெறுகிறது.

மாவட்ட மாணவர் அணி அமைப்பாளர் கல்லூர் பாலசுப்பிரமணியன் வரவேற்புரையாற்றுகிறார்.நிகழ்ச்சியை மாணவரணி துணை அமைப்பாளர்கள் ரம்சான் அலி, ஆறுமுகராஜா ஆகியோர் தொகுத்து வழங்குகின்றனர்.

இந்நிகழ்வில் கழக விவசாய அணி செயலாளர் தமிழக அரசின் டெல்லி சிறப்பு பிரதிநிதி ஏ.கே. எஸ்.விஜயன், நெல்லை மத்திய மாவட்ட பொறுப்பாளர் டி.பி.எம்.மைதீன்கான் ஆகியோர் பங்கேற்று சிறப்புரையாற்றுகின்றனர்.

நிகழ்வில் நெல்லை நாடாளுமன்ற உறுப்பினர் ஞானதிரவியம், தலைமைக் கழக பேச்சாளர் தரமணி ஜெகதீசன், நெல்லை சட்டமன்ற தொகுதி பார்வையாளர் வசந்தம் ஜெயக்குமார், பாளை சட்டமன்ற உறுப்பினர் மு.அப்துல் வகாப், தலைமை செயற்குழு உறுப்பினர்கள் ஏ.எல்.எஸ். லெட்சுமணன் பேச்சி பாண்டியன், தீர்மானக்குழு உறுப்பினர் சுப.சீதாராமன், மாநில மகளிர் தொண்டரணி துணைச் செயலாளர் விஜிலா சத்யானந்த், நெசவாளர் அணி செயலாளர் பெருமாள்

மாவட்ட அவைத்தலைவர் முருகன், துணை செயலாளர்கள் சுரேஷ்,தர்மன், கிரிஜா குமார், பொருளாளர் வண்ணை சேகர்,மேயர் சரவணன்,துணைமேயர் ராஜ்,பகுதி கழக செயலாளர்கள் சுப்பிரமணியன், சாகுல் ஹமீது, செல்லத்துரை,ஒன்றிய செயலாளர்கள் அருள்மணி,மாரியப்பன், அன்பழகன், வேலங்குளம் முருகன், பொதுக்குழு உறுப்பினர்கள் ராஜேஸ்வரி,நடராஜன், பேரூர் கழக செயலாளர்கள் செல்வபாபு, பேச்சிகுட்டி, உள்பட இளைஞர் அணி, மாணவர் அணி மற்றும் அனைத்து சார்பு அணிகளின் நிர்வாகிகள்,மாவட்ட, மாநகர, கழக நிர்வாகிகள்,பகுதி கழக நிர்வாகிகள், மாமன்ற உறுப்பினர்கள், கழகத் தொண்டர்கள் கலந்து கொள்கின்றனர்.

நிகழ்ச்சி நிறைவில் மாவட்ட மாணவர் அணி துணை அமைப்பாளர்கள் வினோத்,முத்துகிருஷ்ண ராஜா, அஸ்வின் பேபி ஆகியோர் நன்றி உரையாற்றுகின்றனர்.

இல.பத்மநாபன் தலைமை!

# திருப்பூர் தெற்கில் வீரவணக்க நாள் பொதுக்கூட்டம்!

## நடிகர் போஸ் வெங்கட் – முரசொலி மூர்த்தி சிறப்புரை!

திருப்பூர், ஜன. 25-

திருப்பூர் தெற்கு மாவட்ட தி.மு.கழகத்திற்குட்பட்ட ஒன்றிய, நகர, பேரூர் கழகங்கள் மற்றும் ஒன்றிய, நகர, பேரூர் கழக மாணவர் அணி நடத்தும் வீரவணக்க நாள் பொதுக்கூட்டம் இன்று (25.01.2024- வியாழக்கிழமை) அன்று மாலை 6.00 மணியளவில் உடுமலைப் பேட்டை, தாராபுரம் சாலையில், தாஜ் திடலில் நடைபெறும் வீரவணக்க நாள் பொதுக் கூட்டத்தில் திரைப்பட நடிகர் போஸ் வெங்கட், தலைமைக் கழக பேச்சாளர் முரசொலி மூர்த்தி, தாராபுரம், அண்ணா சிலை அருகில் நடைபெறும் வீரவணக்க நாள் பொதுக்கூட்டத்தில் கழக கொள்கை பரப்பு துணைச் செயலாளர், முன்னாள் அமைச்சர் டாக்டர். விஜய், தலைமைக் கழக பேச்சாளர் செங்கல்பட்டு சீனிவாசன், வெள்ளக் கோவில்

VPMS நகரில் நடைபெறும் வீரவணக்க நாள் பொதுக் கூட்டத்தில் கழக கொள்கை பரப்பு இணைச் செயலாளர் வி.சி.சந்திரகுமார், திருப்பூர் தெற்கு மாவட்டக் கழக செயலாளர் இல.பத்மநாபன் ஆகிய நான், தலைமைக் கழக பேச்சாளர் குமரி பிரபாகரன் ஆகியோர் சிறப்புரையாற்ற உள்ளனர்.

அதுசமயம், அந்தந்த பகுதிக்குட்பட்ட மாநில, மாவட்டக் கழக நிர்வாகி கள், தலைமைக் கழக செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், ஒன்றிய, நகர, பேரூர் கழக நிர்வாகிகள், மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர் கழக மாணவர் அணி அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள் மற்றும் ஏனைய துணை அமைப்புகளின் நிர்வாகிகள், வார்டு, கிளைக் கழக நிர்வாகிகள், இந்நாள் முன்னாள் மக்கள் பிரதிநிதிகள், கழகத் தோழர்கள் தவறாது கூட்டத்தில் கலந்து கொண்டு கூட்டத்தை சிறப்பிக்க வேண்டுமாய் கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு திருப்பூர் தெற்கு மாவட்டக் கழக செயலாளர், மாநகராட்சி 4ம் மண்டலத்தலைவர் இல.பத்மநாபன் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.




‘கலைஞர் நூற்றாண்டு பேருந்து முனையத்திலிருந்து’ தென் மாவட்டங்களுக்கு

# கிளாம்பாக்கத்திலிருந்து ஆம்னி பேருந்துகளை இயக்கிட நடவடிக்கை!

## போக்குவரத்துத்துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் - துறை அலுவலர்களுடன் ஆலோசனை!

சென்னை, ஜன.25-

“கலைஞர் நூற்றாண்டு பேருந்து முனையத்திலிருந்து” தென் மாவட்டங்களுக்கு SETC, TNSTC & MTC பேருந்துகள் முறையாக இயக்கப்படுவது குறித்தும் மற்றும் ஆம்னி பேருந்துகள் தென் மாவட்டங்களுக்கு இம்முனையத்திலிருந்து முழுமையாக இயக்குவது குறித்து உரிய நடவடிக்கை மேற்கொள்வது தொடர்பாகவும், போக்குவரத்துத் துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் தலைமையில் துறைச் சார்ந்த அலுவலர்களுடன் ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது.

அதன் விவரம் வருமாறு:-

முதலமைச்சர் அவர்கள் செங்கல்பட்டு மாவட்டம், கிளாம்பாக்கத்தில் ரூ.393.74 கோடி மதிப்பீட்டில் 88.52 ஏக்கர் பரப்பளவில் கட்டப்பட்டுள்ள இந்தியாவின் மிகப்பெரிய பேருந்து நிலையங்களுள் ஒன்றான “கலைஞர் நூற்றாண்டு பேருந்து முனையத்தை” 30.12.2023 அன்று திறந்து வைத்து, பொதுமக்கள் பயன்பாட்டிற்கு அர்ப்பணித்தார். இப்பேருந்து முனையத்தை முழுமையாக மக்கள் மகிழ்ச்சியோடு பயன்படுத்துகின்ற அளவிற்கு அனைத்து தேவையான கூடுதல் வசதிகளும் செய்யப்பட்டு வருகிறது.

முதலமைச்சர் அவர்களின் நல்வழிகாட்டுதலின்படி நேற்று முன்தினம் (23.01.2024) சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழும அலுவலகக் கூட்டரங்கில் போக்குவரத்துத் துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் தலைமையில் செங்கல்பட்டு மாவட்டம், கிளாம்பாக்கம் “கலைஞர் நூற்றாண்டு பேருந்து முனையத்திலிருந்து” தென் மாவட்டங்களுக்கு போக்குவரத்துக் கழக பேருந்துகள் (SETC, TNSTC & MTC) முறையாக இயக்கப்படுவது குறித்தும் மற்றும் ஆம்னி பேருந்துகள் இம்முனையத்திலிருந்து தென் மாவட்டங்களுக்கு முழுமையாக இயக்குவது குறித்தும் உரிய நடவடிக்கை மேற்கொள்வது தொடர்பாக துறை சார்ந்த அலுவலர்களுடன் ஆலோசனைக்கூட்டம் நடைபெற்றது.

இக்கூட்டத்தில், கிளாம்பாக்கம் “கலைஞர் நூற்றாண்டு பேருந்து முனையத்திலிருந்து” தென் மாவட்டங்களுக்கு தற்பொழுது SETC பேருந்துகள் மட்டுமே புறப்பாடு உள்ளது. மேலும் இம்முனையத்திலிருந்து அனைத்து TNSTC பேருந்துகளும் புறப்பாடு செய்வது குறித்தும் மற்றும் தென் மாவட்டங்களுக்குச் செல்லக்கூடிய ஆம்னி பேருந்துகள் கிளாம்பாக்கம் பேருந்து முனையத்திலிருந்து முழுமையாக புறப்பாடு செய்வது குறித்தும் உரிய நடவடிக்கைமேற்கொள்ள ஆலோசனை செய்யப்பட்டது.

மேலும் சென்னை கோயம்பேடு மற்றும் பிற முக்கிய இடங்களிலிருந்து தென் மாவட்டங்களுக்கு செல்லக்கூடிய ஆம்னி பேருந்துகளில் பயணிகளை ஏற்றிச் செல்வதைத் தடுக்க போலீசார் தீவிர நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இக்கூட்டத்தில் வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை செயலாளர் சி.சமயமூர்த்தி, சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழும உறுப்பினர் செயலர் அன்சுல் மிஸ்ரா, சென்னை ஒருங்கிணைந்த பெருநகர போக்குவரத்துக் குழுமம் (CUMTA) சிறப்பு அலுவலர் ஐ.ஜெயக்குமார், போக்குவரத்துத்துறை ஆணையர் அ.சண்முகசுந்தரம், மாநகர் போக்குவரத்துக் கழக (MTC) மேலாண் இயக்குநர் டாக்டர்.ஆல்பி ஜான் வர்கீஸ், பெருநகர சென்னை காவல் கூடுதல் ஆணையாளர் (போக்குவரத்து) ர.சுதாகர், காவல் துணை ஆணையர்கள் (தாம்பரம் சட்டம் மற்றும் ஒழுங்கு) பவன் குமார், (தாம்பரம் போக்குவரத்து) ந.குமார், (சென்னை வடக்கு, போக்குவரத்து) பி.குமார், SETC மேலாண் இயக்குநர் கே.இளங்கோவன், உயர் அலுவலர்கள் மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

---

சே.முத்துத்துரை தலைமையில் - நா.குணசேகரன் வரவேற்புரையில்

# காரைக்குடியில் மொழிப் போர்த் தியாகிகள் வீரவணக்க நாள் பொதுக்கூட்டம்!

## அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் - மு.தென்னவன் - பொள்ளாச்சி மா.உமாபதி - ஆத்தூர் வெங்கடேசன் சிறப்புரை!

காரைக்குடி, ஜன.25-

காரைக்குடி நகரக் கழகம் மற்றும் நகரக் கழக மாணவரணி சார்பில் மொழிப்போர்த் தியாகிகளுக்கு வீரவணக்க நாள் பொதுக்கூட்டம் இன்று (25.1.2024 - வியாழக்கிழமை) மாலை 6.00 மணயளவில் ஐந்து விளக்கு அருகில் நடைபெறுகிறது.

இப்பொதுக்கூட்டத்திற்கு நகர்மன்றத் தலைவர் சே.முத்துத்துரை தலைமை வகிக்கிறார். நகரக் கழகச் செயலாளர் நா.குணசேகரன் வரவேற்புரையாற்றுகிறார்.

சுப.துரைராஜ், பா.செந்தில்குமார், கதி.ராஜ்குமார் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

இப்பொதுக்கூட்டத்தில் மாவட்டச் செயலாளர் - அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன், முன்னாள் அமைச்சர் மு.தென்னவன், தலைமைக் கழகப் பேச்சாளர்கள் பொள்ளாச்சி மா.உமாபதி, ஆத்தூர் வெங்கடேசன் ஆகியோர் சிறப்புரையாற்றுகின்றனர்.


இக்கூட்டத்தில் இரா.கோ.அரசு, துரை கணேசன், சன் சுப்பையா, இராம.அன்பழகன், சொ.கண்ணன், வி.குமரேசன், ஹேமலதா செந்தில், தெய்வானை இளமாறன், ஆதி கண்ணாத்தாள், துரை நாகராஜன், ஹரிதாஸ் துரைராஜ், மெ.பழனியப்பன், இராம.சீனிவாசன், டி.முருகேசன், பி.பாண்டிசெல்வம், எம்.ரவி, ஆர்.கே.பி.முனீஸ்வரன், டாக்டர். எஸ்.பிரபாவதி, எம்.சசிவர்ணன், அன்னை மைக்கேல் ராஜ், காரை சுரேசு, ருக்மா சரவணன், பிரசன்னா, சாய்சுரேசு, ஜான் பீட்டர், பீமிநாதன், திவ்யா சக்தி, சேட், ஆட்டோ எம்.கிட்டு, கலா காசிநாதன், உதயம் ராசன், லெட்சுமி ராஜ்கணேஷ், பி.ஆர்.வைரவன், சே.சொக்கலிங்கம், போஸ் குணசேகரன், அ.சேவியர், கே.ஜான் கென்னடி,

க.பொன்முடி, எல்.பாலசுப்பிரமணியன், ராஜபாண்டி. ஆர்.மணிகண்டன், மு.இளங்கோ, ஆறுமுகம், நகர்மன்ற உறுப்பினர்கள் மெ.கார்த்திகேயன், நாச்சம்மை சிவாஜி, எஸ்.முகமது சித்திக், தே.பிளோமினாள், தனம் சிங்கமுத்து மற்றும் பலர் பங்கேற்கின்றனர்.

முடிவில் எஸ்.அஷரப், முத்துராஜ் (எ) குட்டி ஆகியோர் நன்றி கூறுகின்றனர்.

---

# 59 வது நினைவு தினம்



தோற்றம் 27.12.1931

மறைவு 27.01.1965

விருகம்பாக்கம்

## ஒய்.அரங்கநாதன்

1965 ஆம் ஆண்டு மொழிப்போர் உயிர்த் தியாகி

என்றென்றும் நீங்காத நினைவுகளுடன்...

அர.அமுதவாணன்

திருமதி. மஞ்சுளாதேவி அமுதவாணன்

அர.அன்பழகன்

திருமதி. மாலதி அன்பழகன்

அர. இரவிச்சந்திரன்.B.A.B.L.,
(துணைப் பதிவாளர் - சென்னை)

திருமதி. மாலதி இரவிச்சந்திரன்
(வட்டார வளர்ச்சி அலுவலர் - மதுராந்தகம்)

................பேரப்பிள்ளைகள்................

அ.அகல்யாவினோத்குமார்.B.E., அ.தேனருவிராஜாபிரதீப்.B.E.M.BA.,
அ.அன்பரசன்.B.Sc., அ.கோமதி.M.B.B.S., இர.பூங்குழலி.M.B.B.S.,

அர.அ.எழில்வாணன்
தி.மு.க. மாவட்டப் பிரதிநிதி
சென்னை தெற்கு மாவட்டம் கலைஞர்நகர் வடக்கு பகுதி

---

# இந்தியாவுக்கே வழிகாட்டிய இளைஞரணி மாநாடு...

சேலத்தில் ஜனவரி 21 ம் தேதி நடைபெற்ற தி.மு.க. இளைஞரணியின் 2 வது மாநில மாநாடு மற்றுமொரு அரசியல் மாநாடு போல் இன்றி மாற்றத்திற்கான அரசியலை முன்னெடுக்கும் மாநாடாக, மாநிலங்களின் உரிமைகளை மீட்கும் மாநாடாக அமைந்திருந்தது.

மாநாட்டில் இணைப்புரை வழங்கியவன் என்ற முறையில் மட்டுமின்றி ஒரு பார்வையாளனாக, பத்திரிகையாளனாக அந்த மாநாட்டின் சிறப்பம்சங்களை பேசுவது அவசியம் என்று கருதுகிறேன். நாடாளுமன்றத் தேர்தலுக்கு இன்னும் சில மாதங்களே உள்ள நிலையில் அந்த மாநாடு ஒன்றை மிகத் தெளிவாக தெளிவுபடுத்தியது. அடுத்து, “இந்தியாவில் யார் ஆட்சிக்கு வர வேண்டும்” என்பதை விட “யார் ஆட்சிக்கு வரக் கூடாது” என்பதை உரக்க உணர்த்தியது அம்மாநாடு.

இளைஞரணிச் செயலாளர் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் முதல் முதலமைச்சர் வரை அனைவரும் அக்கருத்தை ஆழமாக வலியுறுத்தினர். அந்த மாநாட்டின் இணைப்புரையில் நான் சொன்ன கருத்துகளை இங்கேயும் பதிவு செய்வது அவசியம் என்று கருதுகிறேன்.

“இந்த மாநாடு சேலத்தில் நடைபெறுவது ஏன்” என்று பலரும் கேள்வி எழுப்பினர். சேலத்திற்கும், திராவிட இயக்கத்திற்கும் ஒரு பெரிய வரலாற்றுத் தொடர்பு உண்டு.

1971 ல் தந்தை பெரியார் அவர்கள் சேலத்தில் ஒரு மாபெரும் பேரணியை நடத்தினார்கள். அந்தப் பேரணியில் பெரியார், ராமரை அவமதித்து விட்டார் என்று சொல்லி மதவாதத்தை கையில் எடுத்த கூட்டம் ஒன்று அதை தி.மு.க.விற்கு எதிராகத் திருப்பியது. அடுத்த சில மாதங்களில் வந்த சட்டப்பேரவைத் தேர்தலில் தி.மு.க. வெற்றி பெறாது என்று அடித்துச் சொல்லி அவதூறுகளைப் பரப்பியது அந்தக் கூட்டம். ஆனால், அந்தக் கூட்டத்தின் ஆட்டத்தை முடிக்கும் விதமாக அந்தத் தேர்தலில் யாரும் எதிர்பாராத இமாலய வெற்றியைப் பெற்றது திராவிட முன்னேற்றக் கழகம். 184 இடங்களில் வெற்றி பெற்று முதலமைச்சராக பொறுப்பேற்றார் முத்தமிழ் அறிஞர் கலைஞர்.



தமிழ் கேள்வி
**தி.செந்தில் வேல்**
மூத்த ஊடகவியலாளர்.

அரை நூற்றாண்டுகள் கடந்துவிட்டது, அன்றைக்கு தி.மு.க.விற்கு எதிராக மதவாதத்தைப் பரப்பிய அதே கூட்டம், இன்றும் தி.மு.க.விற்கு எதிராக அவதூறுகளைப் பரப்புகிறது.

மக்கள் பிரச்சினைகளை மறந்து விட்டு ராமரை நம்பி தேர்தலில் வெற்றி பெறலாம் என்று பகல் கனவோடு காத்திருக்கிறது அக்கூட்டம்.

அன்றைக்கு சேலத்தில் பெரியார் பேரணி நடத்தினார், அந்தக் கூட்டத்தின் கனவை பொய்யாக்கி கழகத்திற்கு மாபெரும் வெற்றி பெற்றுத் தந்தார் முத்தமிழ் அறிஞர் கலைஞர்.

இன்றைக்கு அதே சேலத்தில் பெரியாரின் பேரன் உதயநிதி ஸ்டாலின் மாநாடு நடத்தியிருக்கிறார். வரும் நாடாளுமன்றத் தேர்தலில் தமிழகத்தில் 40 க்கு 40 லும் வெற்றி பெறுவதோடு, இந்தியாவிலும் பாசிச பா.ஜ.க. ஆட்சிக்கு முற்றுப் புள்ளி வைக்கப் போகிறார் தமிழ்நாடு முதலமைச்சர் மாண்புமிகு மு.க.ஸ்டாலின் அவர்கள், அதற்கு கட்டியம்கூறும் விதமாகவே அமைந்திருந்தது அந்த மாநாடு.

இளைஞரணிச் செயலாளராகப் பொறுப்பேற்றது முதலே கழகத்தினருக்கு திராவிட இயக்கப் பயிற்சிப் பாசறை நடத்தி அவர்களை கொள்கை வீரர்களாகவும் உருவாக்கும் பணியைச் செய்யத் தொடங்கியிருந்தார் மாண்புமிகு உதயநிதி ஸ்டாலின். அதன் நீட்சியாக இந்த மாநாட்டிலும், அறிவார்ந்த தலைப்புகளில் 22 பேச்சாளர்கள் தேர்வு செய்யப்பட்டு சமூக நீதி, பெண்விடுதலை திருநர் வாழ்வியல், திராவிட இயக்க முன்னோடி கள், ஹிந்தி எதிர்ப்பு, மாநில உரிமைகள் உள்ளிட்ட தலைப்புகளில் பேசவைக்கப்பட்டனர்.

சமீபத்தில் மதுரையில் அ.தி.மு.க. மாநாடு நடைபெற்றது. அம்மாநாட்டில் பா.ஜ.க.வை கண்டித்து ஒரே ஒரு தீர்மானம் போடக் கூட துணிவில்லாத நிலையில்தான் அம்மாநாடு நடந்தது. ஆனால், சேலத்தில் நடைபெற்ற தி.மு.க.வின் இளைஞரணி மாநாட்டில் 25 தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

அதில், குலக்கல்வியைத் திணிக்கும் புதிய கல்விக் கொள்கையை தி.மு.க. கடுமையாக எதிர்க்கும் என்பதோடு இளைஞரணியினர் அதை எதிர்த்து தொடர்ந்து போராடுவார்கள் என்றும், நீட் விலக்கை பெறும் வரை தி.மு.க.வின் போராட்டம் ஓயாது என்றும் அழுத்தம் திருத்தமாக தீர்மானம் நிறைவேற்றியிருப்பது பாராட்டத்தக்கது.

கல்வியை மாநிலப்பட்டியலுக்கு மாற்ற வேண்டும், பல்கலைக்கழகங்களின் வேந்தராக முதலமைச்சரே செயல்படுவார் என்ற சட்ட முன் வடிவை ஆதரிக்கும் தீர்மானம் ஆகியன, கல்வி உரிமை காப்பதில் தி.மு.க. இளைஞரணிக்கும், அதன் மாநிலச் செயலாளர் மாண்புமிகு உதயநிதி ஸ்டாலின் அவர்களுக்கும் இருக்கும்.

### தெளிந்த பார்வைக்கான சான்றுகள்

மாநாட்டின் 17வது தீர்மானம், ஆளுநர் பதவியை நிரந்தரமாக அகற்றிடுவதை வலியுறுத்துகிறது. பெரியாரின் பேரனாக, அண்ணாவின் வழியில் இம்மியளவும் சமரசமின்றி தி.மு.க.வின் இளைஞரணியை உதயநிதி ஸ்டாலின் வழிநடத்துகிறார் என்பதற்கு இதுவே சான்று. மிக மிக குறிப்பாக தமிழர்கள் உரிமை காக்கும் தீர்மானமாக, தமிழ்நாட்டில் செயல்படும் ஒன்றிய அரசின் அலுவலகங்களில், தமிழர்களையே நியமித்திட வலியுறுத்தும் தீர்மானத்தை குறிப்பிடலாம்.

மாநிலங்களில் உரிமை மீட்பு என்பதை வலியுறுத்திய இந்த மாநாட்டின் 19 வது தீர்மானம், ஜம்மு காஷ்மீரை இரண்டாக பிளந்து, அதை யூனியன் பிரதேசமாக மாற்றிய பா.ஜ.க. அரசின் செயலை வன்மையாக கண்டித்திருப்பதன் மூலம் கன்னியாகுமரி முதல், காஷ்மீர் வரை அனைத்து மாநிலங்களுக்குமான உரிமைக் குரலாக ஓங்கி ஒலித்திருக்கிறது.

நாடாளுமன்ற உறுப்பினர்களை இடை நீக்கம் செய்தது, அமலாக்கத்துறையை வைத்து எதிர்க்கட்சிகளை மிரட்டுவது உள்ளிட்ட பா.ஜ.க.வின் அனைத்துவிதமான ஜனநாயக விரோதப் போக்கையும் துணிவோடு கண்டித்திருக்கிறது சேலத்தில் நடைபெற்ற இளைஞரணி மாநாடு.

மதவாதத்தை வைத்து அரசியல் செய்யும் பா.ஜ.க.வின் மண்டையில் குட்டு வைப்பது போல் இந்துக்களின் உண்மையான எதிரியே பா.ஜ.க. தான் என்பதை ஓங்கிச் சொல்லியிருப்பதோடு, பா.ஜ.க.வை வீழ்த்தும் போரில் முன்களப் பணியாளர்களாக இளைஞரணி செயல்படும் என்பதையும், வரும் நாடாளுமன்ற மக்களவைத் தேர்தலில் இந்தியாவில் பாசிச பா.ஜ.க. ஆட்சிக்கு முற்றுப்புள்ளி வைத்து ஆட்சி மாற்றம் ஏற்பட சூளுரைக்கிறது இளைஞரணியின் மாநாடு.

நமது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆற்றிய சிறப்புரையில் மிகத் தெளிவாக, மாநில உரிமைகள் எப்படி எல்லாம் பா.ஜ.க.அரசால் பறிக்கப்படுகிறது என்பதைக் குறிப்பிட்டு, “சும்மா திருக்குறளை சொல்வதால், பொங்கல் கொண்டாடுவதால், ராமர் கோவில் திறப்பதால் மக்களை ஏமாற்றி விடலாம் என்று பா.ஜ.க. நினைக்கிறது. மாநிலங்களை ஏ.டி.எம்.மெசின்களாக பா.ஜ.க. நினைக்கிறது. நம் மொழியை, பண்பாட்டை அழித்து நம்மை அடையாளமற்றவர்களாக மாற்ற பா.ஜ.க. முயற்சிக்கிறது” என்று தமது கடும் கண்டனங்களை பா.ஜ.க.விற்கு எதிராக வைத்தார்.

நிறைவாக தமிழ்நாட்டிற்கு விடியல் பிறந்தது போல், வரும் நாடாளுமன்றத் தேர்தலில் இந்தியாவிற்கும் நிச்சயம் விடியல் பிறக்கும் என்று உறுதியளித்தார். முன்னதாகப் பேசிய மாண்புமிகு அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள், அடுத்த பிரதமர் யார் என்பதை தீர்மானிப்பது மாண்புமிகு முதலமைச்சர் ஸ்டாலினாகத்தான் இருப்பார் என்ற செய்தியை அவரின் பேச்சின் மூலமாக உணர்த்தினார். மாண்புமிகு பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழியோ ஒரு படி மேலே போய்,” ஒரு வேளை பிரதமர் வாய்ப்பு தமிழ்நாடு முதலமைச்சரைத் தேடி வந்தால் அதை நிராகரிக்க வேண்டாம் ஒரு கை பார்ப்போம். தமிழ்நாட்டைப் போலவே இந்தியாவுக்கும் விடியல் பிறக்கட்டும்” என்றார்.

இப்படி 9 லட்சம் சதுர அடி பரப்பளவில் போடப்பட்ட மாபெரும் மாநாட்டுப் பந்தலில், உலக சாதனையில் இடம்பெற்ற மாநாட்டுப் பந்தலில், பல லட்சம் பேர் கூடிய மாநாட்டுப் பந்தலில் மாநில உரிமை, மொழி உரிமை, இட ஒதுக்கீடு, மதவாத எதிர்ப்பு என்று மாபெரும் வகுப்பு நடத்தி அதை ஒரு பல்கலைக்கழகத்தின் ஒரு நாள் பிரமாண்ட வகுப்பறையாக மாற்றியிருந்தார் மாண்புமிகு உதயநிதி ஸ்டாலின். மொத்தத்தில் இந்தியாவிற்கு வழிகாட்டியாகவும், இந்தியா கூட்டணிக்கு திசைகாட்டியாகவும் அமைந்திருந்தது இந்த மாநாடு. மாண்புமிகு உதயநிதி ஸ்டாலின் அவர்களுக்கு உளம்கனிந்த வாழ்த்துகள். மாநாட்டின் நோக்கம் வெல்லட்டும். பாசிச பா.ஜ.க. ஆட்சி அகலட்டும், இந்தியாவிற்கும் விடியல் பிறக்கட்டும்.

---

## விருகம்பாக்கத்தில் மொழிப்போர்த் தியாகி ஒய்.அரங்கநாதன் நினைவிடத்தில் வீரவணக்கம்!

சென்னை, ஜன. 25 -

சென்னை தெற்கு மாவட்ட மாணவரணி அமைப்பாளர் பா.அருண் குமார் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

தீந்தமிழ் மொழி காக்க தங்கள் தேக்குமரத் தேகத்தை தீயின் நாக்குகளுக்கு இரையாக்கிய. அத்தகைய வீரர்களின் நினைவுகளைப் போற்றுவதுடன் அதனை அடுத்து வரும் இளைய சமுதாயத்தினறக்கும் கொண்டு சேர்க்கும் வகையில் கழகத்தின் சார்பில் தொடர்ந்து வீர வணக்கம் நாள் நிகழ்வு நடத்தப்பட்டு வருகிறது.

அந்த வகையில் சென்னை தெற்கு மாவட்ட தி.மு.க. சார்பில் இன்று (25.01.2024 - வியாழக்கிழமை) காலை 8.00 மணியளவில் விருகம்பாக்கம் விநாயகம் தெருவில் அமைந்துள்ள தியாகி அரங்கநாதன் நினைவிடத்தில் வீரவணக்கம் செலுத்தப்படுகிறது.

சென்னை தெற்கு மாவட்டச் செயலாளரும் மருத்துவம் மற்றும் மக்கள் நல் வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் தலைமையில் கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி பங்கேற்று அஞ்சலி செலுத்துகின்றனர்.


ஆகவே சென்னை தெற்கு மாவட்டத்திற்கு உட்பட்ட மாணவர் அணி மாவட்ட துணை அமைப்பாளர்கள், பகுதி மற்றும் ஒன்றிய அமைப்பாளர்கள், கல்லூரி மாணவர்கள் பெரும் திரளாக பங்கேற்று வீரவணக்கம் செலுத்துவதோடு மாலை 6.00 மணியளவில் அண்ணா நகர்புனித ஜார்ஜ் பள்ளி வளாகத்தில் நடைபெறும் வீரவணக்கம் நாள் பொது கூட்டத்தில் கழக தலைவர் தமிழ் நாட்டின் முதல் அமைச்சர் அவர்கள் வீரவணக்க உரை நிகழ்த்த உள்ளதால் மாணவர் அணி நண்பர்கள் பெரும் திரளாக கலந்து கொள்ள வேண்டுகிறேன்.

இவ்வாறு அவர் தனது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

---

# திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

## கீழப்பழுவூர் சின்னச்சாமி
## சனவரி 25 (1964)



இந்தித் திணிப்பை எதிர்த்து தனது 27வது வயதில் தமிழ்மொழி காக்க – திருச்சி மாவட்டம், கீழப்பழுவூர் என்கிற சிற்றூர் கழகத் தோழர் திருச்சி ரயில் நிலையத்தின் வாசலில் விடியற்காலை 4.30 மணிக்கு தன் தலையில் பெட்ரோலை ஊற்றிக் கொண்டு நெருப்பில் பற்றவைத்து, கொழுந்துவிட்டு எரியும் தீச்சுவாலைகளுக்கு இடையே ‘தமிழ் வாழ்க! தமிழ் வாழ்க!’ என முழக்கமிட்டபடி தியாகத் தீயில் தன்னை மாய்த்துக் கொண்ட தீரன்.

“இந்தி எதிர்ப்புப் போரில் முதன்முதலாகத் தீக்குளித்தவர் என் கணவர்தான். அந்தப் பெருமை ஒன்றுதான் அவர் எனக்கு விட்டுப்போன சொத்து” என அவரது துணைவியார் தெரிவித்தார்.

தலைமைக் கழகம்
தி.மு.க.

## இன்று (ஜன.25) - மொழிப்போர்த் தியாகிகளுக்கு

# தமிழ்நாடு முழுவதும் வீரவணக்க நாள் பொதுக்கூட்டங்கள்!

## சென்னையில் முதல்வர் - கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின், ஆவடி - பொதுச்செயலாளர் துரைமுருகன், மன்னார்குடி - பொருளாளர் டி.ஆர்.பாலு, திருச்சி - முதன்மைச் செயலாளர் கே.என்.நேரு!









**இந்திக்குத் தமிழ்நாட்டில் ஆதிக்கமாம் - நீங்கள்**
**எல்லோரும் வாருங்கள் நாட்டினரே!**
**செந்தமிழுக்குத் தீமைவந்த பின்னும் - இந்தத்**
**தேகம் இருந்தொரு லாபமுண்டோ?**
**விந்தைத் தமிழ்மொழி எங்கள் மொழி! - அது**
**வீரத் தமிழ் மக்கள் ஆவி என்போம்!**

**சிங்கமென்ற இளங்காளைகளே - மிகத்**
**தீவிரங் கொள்ளுவீர் நாட்டினிலே!**
**பங்கம் விளைத்திடல் தாய்மொழிக்கே - உடற்**
**பச்சை ரத்தம் பரிமாறிடுவோம்!**

**-பாவேந்தர்**

- பெரும் சிறப்புப் பெற்ற நம் தாய் மொழியாம் தமிழ்மொழி, நீராலும் - நெருப்பாலும், வஞ்சகர்களின் வெறுப்பாலும் வெல்லமுடியாத - வீழ்த்த முடியாத செம்மாந்த மொழியாகும்! தத்தமது உரைநடையின் வாயிலாகவும், கவிதைத் தீரமுடனும் தமிழறிஞர்கள்பலர் தங்கள் விழியெனப் போற்றி வளர்த்த வண்டமிழ் மொழியாகும்.

- 1938ஆம் ஆண்டு தமிழ்நாட்டில் ஆட்சி புரிந்த மூதறிஞர் இராஜாஜி அவர்கள், தமிழ்நாட்டு மாணவர்கள் இனி இந்தி கட்டாயமாகக் கற்க வேண்டுமென்று அறிவிப்பினை எதிர்த்து, 27.02.1938 அன்று காஞ்சிபுரத்தில் நடைபெற்ற முதல் இந்தி எதிர்ப்பு மாநாட்டில், தாய் மொழியைக் காக்க இந்தித் திணிப்பினை எதிர்க்க வேண்டும் என்று முடிவெடுக்கப்பட்டு அதனடிப்படையில், தந்தை பெரியார், மறைமலை அடிகள், திரு.வி.க., நாவலர் சோமசுந்தர பாரதி, பேரறிஞர் அண்ணா போன்ற தமிழறிஞர்கள் மற்றும் அரசியல் தலைவர்கள் தாய் மொழி காக்க களம் கண்டனர்.

அப்போது, 14 வயதே ஆன பள்ளி மாணவர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள், திருவாரூர் வீதியில் தன்னுடன் பயிலும் மாணவர்களை அணி திரட்டி, "கயல், வில், புலி" சின்னம் பொறித்த தமிழ்க் கொடியினை கையிலேந்தி,

**"ஓடி வந்த இந்திப் பெண்ணே கேள்! - நீ**
**தேடி வந்த கோழையுள்ள நாடிதல்லவே!"**

என்று, இந்தித் திணிப்பு எதிர்ப்பு போர்ப்பரணி பாடி, தமிழ்மொழி காக்கும் போர்வீரராய் முன்வந்தார்.

அன்னைத் தமிழ் காக்க, முதற்கட்ட இந்தித் திணிப்பு எதிர்ப்புப் போராட்டத்தில் கலந்து கொண்டு, சிறை சென்ற நடராசன் 15.01.1939 அன்றும்; தாளமுத்து 12.03.1939 அன்றும் வீர மரணம் அடைந்தனர்.தமிழக மக்களின் தொடர் போராட்டத்தினால், அரசு 21.02.1940-ல் கட்டாய இந்தித் திணிப்பைக் கைவிடும் முடிவுக்கு வந்தது.

தாராளமாகவும் - ஏராளமாகவும் தமிழ்ச் சொற்கள் இருந்தும், பிறமொழிச் சொற்கள் கலந்து பேசியும், எழுதியும் தமிழுக்கு ஊறு விளைத்திட முனைந்தோர், முடிந்தளவு முயன்றும், 'யாதொன்றும் புரிந்திட இயலாது', என்று முடங்கிடும் நிலையில், என்றென்றும் மாறாத இனிமைத் தமிழுக்கு ஒன்றிய அரசால் ஆபத்து வரவிருந்தபோது,

**"செந்தமிழுக்கு தீங்கொன்று வந்துற்ற பின்னும் - இத்**
**தேகம் இருந்தென்ன லாபம்?"**

என, தனக்குத் தானே கேள்வி எழுப்பிக் கொண்ட அன்னைத் தமிழின் அருந்தவப் புதல்வர்களாம் - கீழுப்பழூவூர் சின்னச்சாமி, விருகம்பாக்கம் அரங்கநாதன், கோடம்பாக்கம் சிவலிங்கம், மாயவரம் சாரங்கபாணி, விராலிமலை சண்முகம், கீரனூர் முத்து, பீளமேடு தண்டபாணி, சத்தியமங்கலம் முத்து, அய்யம்பாளையம் ஆசிரியர் வீரப்பன் தீக்குளித்தும், துப்பாக்கியால் சுட்டுக் கொல்லப்பட்ட அண்ணாமலைப் பல்கலைக் கழக மாணவர் ராஜேந்திரன் உள்ளிட்ட நூற்றுக்கணக்கானோரின் தீரத்தை நினைவு கூர்ந்திடும் நாள்தான், இன்று (25.01.2024) மொழிப் போர்த் தியாகிகள் நினைவு தினம் ஆகும்.

உலக வரலாற்றில், நாட்டின் விடுதலைக்காக, இனப் போராட்டத்திற்காக தங்களை மாய்த்துக் கொண்டோர் நிரம்ப உண்டு. ஒரு மொழிக்காக, தங்களது வாழ்க்கையையே சுருக்கிக் கொண்டு - கருகியவர்கள் உண்டு என்றால், அது தமிழ் மக்களையே சாரும்.

பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர் ஆகியோரின் வழியில் வந்த நமது கழகத் தலைவர் - தமிழ்நாடு முதலமைச்சர் தளபதி அவர்கள், 1972ஆம் ஆண்டு கோவையில், தி.மு.க. மாணவரணியின் சார்பில் நடைபெற்ற மாநாட்டில் உரையாற்றுகின்ற போது...

"மொழிக்காக - நம்முடைய இனத்திற்காகப் போராடுகிறோம். போராடுகிற நேரத்திலே நம்முடைய உயிரை இழக்கிற தியாகத்தைச் செய்வதற்குக் கூடக் காத்திருக்கிறோம். என்னுடைய தந்தைக்கு நான்கு ஆண் பிள்ளைகள் இருக்கிறார்கள். எனவே, அந்த நான்கு ஆண்பிள்ளைகளில் ஒரு ஆண்பிள்ளை போய் விடுவதால் என்னுடைய தந்தை நிச்சயமாக கவலைப்பட மாட்டார். அதுவும், 'மொழிக்காக, ஒரு இனத்திற்காக தனயனை இழந்த தந்தை' -என்று என்னுடைய தந்தைக்குப் பாராட்டுக் கிடைக்கும். பாராட்டுகின்ற பெருமையை வாங்கித் தந்த மகிழ்ச்சி எனக்குச்சேரும் அல்லவா?"

-என்று வீர உரையாற்றி, தமிழ் மொழிக்காக தனது இன்னுயிரையும் துறப்பது எனக்குப் பெருமை உடையது என, தனது 18-வது வயதில் சபதமேற்று; இன்றும் தமிழ் மொழிக்கான அனைத்துப் போராட்டங்களிலும் தலைமகனாக விளங்குகிறார்.

'இந்தி பேசாத மக்களின் மீது இந்தியைத் திணித்தே தீருவேன்' என்று ஒன்றியத்தில் ஆட்சி நடத்தும் பாசிச பா.ஜ.க. அரசும், அதன் தலைவர்களும் அனைத்து வழிகளிலும் இந்தியைத் திணிப்பதற்கான முயற்சியை மேற்கொண்டு வருகின்றனர். தமிழ்நாட்டுக்கு வந்தால், 'தொன்மையான மொழி தமிழ்' என்று நாக்கில் தேன் தடவுவதும், டெல்லிக்குச் சென்றதும் நஞ்சைப் பரப்புவதும் அவர்களுக்கு வாடிக்கையாகி விட்டது.

ஒன்றிய அமைச்சர் அமித்ஷா அவர்கள் சமீபத்தில் நாளிதழ் ஒன்றுக்கு அளித்த பேட்டியில், "இந்திதான் நாட்டு மக்களை ஒன்றிணைக்கிறது - பிராந்திய மொழிகளுக்கு அதிகாரமளிக்கிறது" என்று இந்தித் திணிப்புக் கூச்சலின் மாற்று வடிவமாகப் பேசியதும், எதிர்ப்பின்றி அனைவரும் இந்தியை ஏற்றுக் கொள்ள வேண்டும் என தொடர்ந்து பேசுவதும் மற்ற மொழி பேசும் அனைத்து இன மக்களையும் இந்திக்குக் கொத்தடிமை ஆக்கும் எதேச்சாதிகார முயற்சிக்கு பல்வேறு இடங்களில் இருந்து கண்டனங்கள் வந்தது!

மேலும், ஒன்றிய பொதுத் துறை காப்பீட்டு நிறுவனமான "நியூ இந்தியா இன்சூரன்ஸ்" நிறுவனம், தனது ஊழியர்களுக்கு அனுப்பிய சுற்றறிக்கையில், "இந்தியை கட்டாயம் படிக்க வேண்டும் - இந்திப் புத்தகங்களை வாங்க வேண்டும் - இந்தி திறனறிய சோதனைகளை நடத்த வேண்டும்" என நீண்டதொரு இந்தித் திணிப்புக்கான பட்டியலை சுற்றறிக்கை என்ற பெயரில் அனுப்பியதும்,

சமீபத்தில் கோவை விமான நிலையத்தில் மத்திய தொழில்துறை பாதுகாப்புப் படை வீரர் ஒருவர், தமிழ் நாட்டைச் சேர்ந்த பெண்ணிடம், இந்திதான் தேசிய மொழி, இது கூடத் தெரியாதா? என 'கூகுள்' செய்து பார்க்கச் சொல்லி வற்புறுத்தி மிரட்டிய அவல நிலையும்;

மத்திய பின்னிருப்புக் காவல் படையினருக்கான (சி.ஆர்.பி.எப்.) வேலை வாய்ப்பு அறிவிப்பில், தேர்வுகள் அனைத்தும் இந்தி மற்றும் ஆங்கிலத்தில் மட்டுமே நடத்தப்படும் என அறிவிக்கப்பட்டு, கழகத் தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணையின் பேரில், மொழி உரிமையைக் காக்கவும், இந்தி பேசாத மக்களை தொடர்ந்து வஞ்சிக்கும் ஒன்றிய அரசைக் கண்டித்தும் தி.மு.க. இளைஞர் அணியும், மாணவர் அணியும் இணைந்து அறிவித்த கண்டன ஆர்ப்பாட்டத்தைக் கண்ட ஒன்றிய அரசு, 1965 மொழிப்புரட்சிக் காலம் மீண்டும் தமிழ்நாட்டில் உருவாகி விடுமோ என அஞ்சி, இத்தேர்வை இந்தி மற்றும் ஆங்கிலம் உள்ளிட்ட 13 பிராந்திய மொழிகளில் நடத்திடவும் ஒப்புக் கொண்டது!

எப்பொதெல்லாம் இந்தித் திணிப்பு தலை தூக்குமோ - அப்பொதெல்லாம் கழகத் தலைவரின் ஆணையேற்று, தி.மு.க. மாணவர் அணியின் புலிப் போத்துகள் சீறிப் பாய்ந்திடத் தயங்கியதில்லை.

இந்தியை எப்படியாவது பின்வாசல் வழியாக திணிக்கத் துடிக்கும் ஒன்றிய அரசு ஒன்றை உணர வேண்டும்; இந்தித் திணிப்புக்கு ஆதரவு தெரிவித்து கைக் கட்டி, வாய் பொத்தி அமைதி காக்க தமிழ்நாட்டில் நடப்பது அடிமைகளின் ஆட்சி அல்ல! பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர் ஆகியோரின் வழியில் கழகத் தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் நடத்தும் திராவிட மாடல் ஆட்சி!

இந்தியைத் திணிக்க முயன்றோருக்கும், முயல்வோருக்கும் அச்சத்தை உருவாக்கிவிட்டுச் சென்றுள்ள மொழிப்போர்த் தியாகிகளுக்கு வீரவணக்கம் செலுத்திட, பொதுக்கூட்டங்கள் நடத்தி அவர்கள் கொண்டிருந்த தூய தமிழுணர்வுடன் நாமும் வாழ்ந்திட வேண்டும் என்ற சூளுரையை இந்நாளில் மேற்கொண்டிட, கழகத் தலைவர் - தமிழ்நாடு முதலமைச்சர் தளபதி அவர்களின் ஆணைக்கிணங்க, தமிழ்நாடு முழுவதும் பட்டித்தொட்டி முதல் பட்டினக்கரை வரை, தி.மு.க. மாணவர் அணியின் சார்பில், கீழ்க்காணும் உரையாற்றுவோர் பட்டியல் வெளியிடப்படுகிறது.

**தமிழ் வாழ்க! தமிழர் வாழ்க!**
**தமிழ்நாடு வாழ்க! திராவிட மாடல் ஆட்சி வெல்க!**

**வீரவணக்கம்! வீரவணக்கம்!**
**மொழிப்போர்த் தியாகிகளுக்கு வீரவணக்கம்!**
**இந்தித் திணிப்பை என்றும் எதிர்ப்போம்!**
**ஆதிக்கமற்ற சமுதாயத்தை அமைத்தே தீருவோம்!**
**தமிழை வளர்த்து தமிழரைக் காப்போம்!**

**தமிழ்நாடு முழுவதும் உரையாற்றுவோர் பட்டியல்:**

| | |
|---|---|
| அண்ணாநகர் | கழகத் தலைவர் - |
| | மாண்புமிகு **முதலமைச்சர்** அவர்கள். |
| ஆவடி | மாண்புமிகு. பொதுச் செயலாளர் |
| | **துரைமுருகன்** |
| | எஸ். ஜெகத்ரட்சகன், எம்.பி., |
| | சா.மு. நாசர், எம்.எல்.ஏ., |
| | சி. ஜெரால்டு |
| மன்னார்குடி | பொருளாளர் |
| | **டி.ஆர். பாலு, எம்.பி.,** |
| | மன்னை த. சோழராஜன் |
| திருச்சி | மாண்புமிகு. முதன்மை செயலாளர் |
| | **கே.என். நேரு** |
| | கரூர் முரளி |
| | அல்லூர் பி.எம். ஆனந்த் |
| ஆண்டிப்பட்டி | மாண்புமிகு. ஐ. பெரியசாமி |
| | நா. இராமகிருஷ்ணன், எம்.எல்.ஏ., |
| | மீனாகண் இரமேஷ் |
| காஞ்சிபுரம் | முனைவர் க. பொன்முடி |
| | க. சுந்தர், எம்.எல்.ஏ., |
| | நா.சே. பிரபாகரன் |
| நாமக்கல் | ஆ. இராசா, எம்.பி., |
| | என். ராஜேஸ்குமார், எம்.பி., |
| | கம்பம் பாண்டிதுரை |
| தென்காசி | கனிமொழி கருணாநிதி, எம்.பி., |
| | என். ஜெயபாலன் |
| | நாகை மு. சாகுல் அமீது |
| மேட்டூர் | அந்தியூர். ப. செல்வராஜ், எம்.பி., |
| | டி.எம். செல்வகணபதி |
| | நெய்வேலி தங்கம் |
| உளுந்தூர்பேட்டை | ஆர்.எஸ். பாரதி |
| | தா. உதயசூரியன், எம்.எல்.ஏ., |
| | கோமல் விஜய் அறிவழகன் |
| பல்லாவரம் | மாண்புமிகு **உதயநிதி ஸ்டாலின்** |
| | மாண்புமிகு தா.மோ. அன்பரசன் |
| இராணிப்பேட்டை | சி.வி.எம்.பி.எழிலரசன் எம்.எல்.ஏ. |
| | மாண்புமிகு ஆர். காந்தி |
| | வழக்கறிஞர் எஸ்.எஸ்.ஆர்.சசிகுமார் |
| கும்மிடிபூண்டி | திருச்சி சிவா, எம்.பி., |
| | டி.ஜெ. கோவிந்தராஜன், எம்.எல்.ஏ., |
| | கதிர் மீனாட்சிசுந்தரம் |
| கடலூர் | டி.கே.எஸ்.இளங்கோவன் |
| | மாண்புமிகு. |
| | எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் |
| | ஆலங்குடி செல்வராஜ் |
| | எஸ்.எஸ்.ஆர். சசிக்குமார் |
| திருச்சி கிழக்கு | மாண்புமிகு. எ.வ. வேலு |
| மாநகரம் | மாண்புமிகு |
| | அன்பில் மகேஷ் பொய்யாமொழி |
| | ஒரத்தநாடு நடராஜன் |
| சேலம் | எஸ்.எஸ். பழனிமாணிக்கம், எம்.பி., |
| | ஆர். இராஜேந்திரன், எம்.எல்.ஏ., |
| | சேலம் இரா. தமிழரசன் |
| | ஆம்பூர் பொய்யாமொழி |
| திருவாரூர் | பொன். முத்துராமலிங்கம் |
| | பூண்டி கலைவாணன், எம்.எல்.ஏ., |
| | அ.வெ. அறவரசன் |
| தருமபுரி | மாண்புமிகு கு. பிச்சாண்டி |
| | தடங்கம் பெ. சுப்பிரமணி |
| | திருச்சி ராதாகிருஷ்ணன் |
| திருமங்கலம் | கடலூர் இள. புகழேந்தி |
| | மு. மணிமாறன் |
| | தீக்கனல் கருணாநிதி |
| சிவகங்கை | சுப. வீரபாண்டியன் |
| | மாண்புமிகு. கே.ஆர். பெரியகருப்பன் |
| | போடி கலைசெல்வன் |
| | பூர்ணசங்கீதா சின்னமுத்து |
| புதுச்சேரி | மாண்புமிகு ஆர்.எஸ். ராஜகண்ணப்பன் |
| | ஆர். சிவா, எம்.எல்.ஏ., |
| | லயோலா ராஜசேகர் |

தொடர்ச்சி 14 ஆம் பக்கம்

# தமிழ்நாடு முழுவதும் வீரவணக்க நாள் பொதுக்கூட்டங்கள்!

13-ஆம் பக்கத் தொடர்ச்சி

| | |
|---|---|
| அரியலூர் | மாண்புமிகு முனைவர் கோவி. செழியன் |
| | மாண்புமிகு எஸ்.எஸ். சிவசங்கர் |
| | சென்னை மதிவாணன் |
| வேலூர் | ப. தாயகம் கவி, எம்.எல்.ஏ., |
| | ஏ.பி. நந்தகுமார், எம்.எல்.ஏ., |
| | சிறுவனூர் பரசுராமன் |
| சங்கரன்கோயில் | எஸ். ஆஸ்டின் |
| | ஈ. ராஜா, எம்.எல்.ஏ., |
| | குளித்தலை சலாவுதீன் |
| திண்டிவனம் | பூச்சி எஸ். முருகன் |
| | மாண்புமிகு. கே.எஸ். மஸ்தான் |
| | சென்னை உதயசூரியன் |
| பொன்னேரி | தஞ்சை கூத்தரசன் |
| | முனைவர். நா. சந்திரபாபு |
| | க. எழிலன் |
| அருப்புக்கோட்டை | க. வேங்கடபதி |
| | மாண்புமிகு |
| | கே.கே.எஸ்.எஸ்.ஆர்.இராமச்சந்திரன் |
| | வழக்கறிஞர் அ. கணேசன் |
| ஈரோடு | குத்தாலம் பி. கல்யாணம் |
| | மாண்புமிகு. சு. முத்துசாமி |
| | தூத்துக்குடி தமிழ்ப்பிரியன் |
| | ஜெ. வீரமணி |
| கள்ளக்குறிச்சி | தி.அ. முகமது சகி |
| | வசந்தம் கார்த்திகேயன், எம்.எல்.ஏ., |
| | இளந்தளிர் இளங்கோ |
| மதுரை | கம்பம் செல்வேந்திரன் |
| | கோ. தளபதி, எம்.எல்.ஏ., |
| | சேலம் ஜான்பாட்ஷா |
| | அதலை பி. செந்தில்குமார் |
| காரைக்குடி | பொள்ளாச்சி மா. உமாபதி |
| | ஆத்தூர் வெங்கடேசன் |
| திருப்பூர் | வழக்கறிஞர் இரா. கிரிராஜன், எம்.பி., |
| | க. செல்வராஜ், எம்.எல்.ஏ., |
| | கோவை. அ. திராவிடமணி |
| திருவள்ளூர் | திண்டுக்கல் ஐ. லியோனி |
| | திருத்தணி எஸ். சந்திரன், எம்.எல்.ஏ., |
| | புலவர் சாமிநாகப்பன் |
| திருப்பத்தூர் (வேலூர்) | முனைவர் சபாபதி மோகன் |
| | உடுமலை தண்டபாணி |
| இராமநாதபுரம் | கவிச்சுடர் கவிதை பித்தன் |
| | காதர்பாட்ஷா முத்துராமலிங்கம், எம்.எல்.ஏ., |
| | ஆக்காட்டி ஆறுமுகம் |
| விழுப்புரம் | வாகை சந்திரசேகர் |
| | நா. புகழேந்தி, எம்.எல்.ஏ., |
| | அன்னவயல் கணேசன் |
| கோயம்புத்தூர் | மாண்புமிகு முனைவர் |
| | பி.டி.ஆர். பழனிவேல் தியாகராஜன் |
| | நா. கார்த்திக் |
| | தா. ஆதித்தன் |
| | வி.ஜி. கோகுல் |
| விருதுநகர் | முனைவர் தமிழச்சி |
| | தங்கபாண்டியன், எம்.பி., |
| | மாண்புமிகு தங்கம் தென்னரசு |
| | மதுரை சாதுராஜன் |
| நெய்வேலி | உ.மதிவாணன் |
| | எஸ்.கே.ஸ்ரீராம் |
| | பழனி அப்பாஸ் |
| மயிலாடுதுறை | புதுக்கோட்டை விஜயா |
| | நிவேதா முருகன், எம்.எல்.ஏ., |
| | சித்திரைகுடி பாலகிருஷ்ணன் |
| இராசிபுரம் | நாஞ்சில் சம்பத் |
| | ஆவடி அமுதநேசன் |
| வந்தவாசி | மருத்துவர். நா. எழிலன், எம்.எல்.ஏ., |
| | ரஷித்கான் |
| புதுக்கோட்டை | பேராசிரியர் |
| | கான்ஸ்டன்டைன் இரவீந்திரன் |
| | மாண்புமிகு. எஸ். இரகுபதி |
| | மருத்துவர் கலை. கதிரவன் |
| கரூர் | வி.பி. ராஜன் |
| | குடந்தை இரமேஷ் |
| | செந்தாமரை கண்ணன் |

| | |
|---|---|
| மதுராந்தகம் | அன்னியூர் சிவா |
| | மங்கலம் பிரபாகரன் |
| கோபிசெட்டிபாளையம் | டி.எம். கதிர் ஆனந்த், எம்.பி., |
| | என். நல்லசிவம் |
| | பாலக்கரை டி. கோவிந்தன் |
| செய்யாறு | நெல்லிக்குப்பம் புகழேந்தி |
| | திருச்சி சேகர் |
| பெரம்பலூர் | குத்தாலம் க. அன்பழகன் |
| | குன்னம் இராஜேந்திரன் |
| | கு. மொழிமாறன் |
| திருவண்ணாமலை | கவிஞர் ஈரோடு இறைவன் |
| | மயிலாடுதுறை அருள்தாஸ் |
| நெல்லை | ஏ.கே.எஸ். விஜயன் |
| | டி.பி.எம். மைதீன்கான் |
| | தரமணி ஜெகதீசன் |
| திண்டுக்கல் | தமிழன் பிரசன்னா |
| | ஐ.பி. செந்தில்குமார், எம்.எல்.ஏ., |
| | செந்தூர் பாலகிருஷ்ணன் |
| ஆரணி | வழக்கறிஞர் இ. பரந்தாமன், எம்.எல்.ஏ., |
| | எம்.எஸ். தரணிவேந்தன் |
| | தி.நகர் ச. சண்முகநாதன் |
| விருத்தாசலம் | சூர்யா வெற்றிக்கொண்டான் |
| | மாண்புமிகு. சி.வி. கணேசன் |
| | டாக்டர் அபிபுல்லா |
| சிவகாசி | வழக்கறிஞர் அ. சரவணன் |
| | தமிழ் சாதிக் |
| துறையூர் | கவிஞர் காசிமுத்து மாணிக்கம் |
| | சன்.கோ. ஆறுமுகம் |
| இடங்கணசாலை | வி.பி. கலைராஜன் |
| | ஈரோடு சத்தியாவதி |
| ஒட்டன்சத்திரம் | எஸ்.கே.பி. கருணாநிதி |
| | மாண்புமிகு அர. சக்கரபாணி |
| | ஆம்பூர் தருமன் |
| | கா. பொன்ராஜ் |
| கோவில்பட்டி | இரா. ராஜீவ்காந்தி |
| | மாண்புமிகு கீதா ஜீவன் |
| | முஜ்பூர் ரகுமான் |
| குளித்தலை | ச. தங்கவேல் |
| | பா.கோ. குமார் |
| திருமயம் | கவிஞர் தமிழ்தாசன் |
| | தமிழ்கொண்டான் |
| வேதாரண்யம் | பி.டி. அரசகுமார் |
| | ஏர்போர்ட் பொன்னுசாமி |
| தாராபுரம் | டாக்டர் விஜய் |
| | செங்கல்பட்டு சீனுவாசன் |
| தஞ்சாவூர் | கவிஞர் ஆண்டாள் பிரியதர்ஷினி |
| | எஸ். துரைசந்திரசேகர், எம்.எல்.ஏ., |
| | கு. வாஞ்சிநாதன் |
| பாலக்கோடு | பெருநற்கிள்ளி |
| | பி. பழனியப்பன் |
| | தமிழன்பன் |
| செஞ்சி | பூங்கோதை ஆலடி அருணா |
| | உடுமலை தாரை சிவா |
| காங்கேயம் | வி.சி. சந்திரகுமார் |
| | இல. பத்மநாபன் |
| | குமரி பிரபாகரன் |
| நாகர்கோயில் | நந்தனம் நம்பிராஜன் |
| | மேயர் ஆர். மகேஷ் |
| | நெல்லை மணி |
| கிருஷ்ணராயபுரம் | அர. திராவிடம் |
| | கோட்டூர் முருகன் |
| பெருந்துறை | செந்தலை கவுதமன் |
| | ஆர்காடு அகிலன் |
| சோளிங்கர் | விஜயா தாயன்பன் |
| | ஆத்தூர் சபரி |
| தொண்டாமுத்தூர் | கோவி.லெனின் |
| | பாரதி மோகன் |
| | என். இரவி |
| | கோபி. குமணன் |
| ஊட்டி | தமிழ் கா. அமுதரசன் |
| | பா.மு. முபாரக் |
| | காவேரிப்பட்டினம் இளையராஜா |
| நாகப்பட்டினம் | கந்திலி கரிகாலன் |
| | என்.கௌதமன் |
| | குடியாத்தம் புவியரசி |

| | |
|---|---|
| போடி | சைதை சாதிக் |
| | துறையூர் பாஸ்கரன் |
| கிருஷ்ணகிரி | முனைவர் பொன்னேரி சிவா |
| | தே. மதியழகன், எம்.எல்.ஏ., |
| | விஷார் க. தமிழரசன் |
| மானாமதுரை | கவிஞர் சல்மா |
| | வழக்கறிஞர் மணிமுடி |
| கீழ்பென்னாத்தூர் | சென்னை அரங்கநாதன் |
| | கலைச்செல்வி ஜெகநாதன் |
| திருத்துறைப்பூண்டி | சோம. செந்தமிழ்செல்வன் |
| | கொரஞ்சூர் முனுசாமி |
| பர்கூர் | போடி. காமராஜ் |
| | வெ. அன்புவாணன் |
| பவானி | அத்திப்பட்டு சாம்ராஜ் |
| | புலவர் இராவணன் |
| மேட்டுப்பாளையம் | வேலூர் கென்னடி |
| | தருமபுரி அதியமான் |
| அறந்தாங்கி | ஆரூர் மணிவண்ணன் |
| | வண்ணை புகாரி |
| சிதம்பரம் | ஆடுதுறை உத்திராபதி |
| | கா.வி. நெடுஞ்செழியன் |
| திருப்போரூர் | மனுஷ்யபுத்திரன் |
| | திருவொற்றியூர் கருணாநிதி |
| மேலூர் | தூத்துக்குடி சரத்பாலா |
| | மாண்புமிகு. பி. மூர்த்தி |
| | ஈரோடு இளையகோபால் |
| உடுமலைப்பேட்டை | போஸ் வெங்கட் |
| | முரசொலி மூர்த்தி |
| | வேடசந்தூர் முருகவேல் |
| இராஜபாளையம் | ஆவடி பாஸ்கர் |
| | எம்.எல். நாதன் |
| கம்பம் | வேலூர் இரமேஷ் |
| | தாம்பரம் ஜின்னா |
| சீர்காழி | மன்னை சோம. இளங்கோவன் |
| | கரூர் மதி |
| திருச்செங்கோடு | திருப்பூர் மனோகர்பாபு |
| | மதுரா. செந்தில் |
| | குன்னூர் கலீம் |
| கலசப்பாக்கம் | நாத்திகம் நாகராஜன் |
| | எழும்பூர் கோபி |
| விராலிமலை | ஆலந்தூர் ஒப்பிலாமணி |
| | வஹிதா பேகம் |
| தேனி | வரகூர் காமராஜ் |
| | தங்க தமிழ்செல்வன் |
| | கணல் சுப்பிரமணி |
| பல்லடம் | ஜோன்ஸ் ரூசோ |
| | போர்முரசு கதிரவன் |
| பொள்ளாச்சி | வயலூர் கிருஷ்ணமூர்த்தி |
| | தளபதி முருகேசன் |
| | குடந்தை ராமகிருஷ்ணன் |
| குன்னூர் | மாண்புமிகு கா.இராமச்சந்திரன் |
| | கவிஞர் சிவமுத்துவளவன் |
| | வா.சு. முத்துசாமி |
| பேராவூரணி | திருப்பூர் ரஜினி செந்தில் |
| | தீக்கனல் தியாகு |
| ஜெயங்கொண்டம் | சிங்கை பிரபாகரன் |
| | மதுரை சேவியர் |
| பட்டுக்கோட்டை | வே. மதிமாறன் |
| | க. அண்ணாதுரை, எம்.எல்.ஏ., |
| | வீர. வெள்ளைச்சாமி |
| நிலக்கோட்டை | ஆலந்தூர் மலர்மன்னன் |
| | கடையநல்லூர் இஸ்மாயில் |
| விக்கிரவாண்டி | கோவை சம்பத் |
| | புலவர் பெரியாழ்வார் |
| பெரியகுளம் | ஜஸ்டின் வில்பர்ட் |
| | கோவை இக்பால் |
| திருச்சுழி | உடன்குடி தனபால் |
| | செங்குன்றம் திராவிடமணி |
| மொடக்குறிச்சி | கோதை மதிவாணன் |
| | போலீஸ் ஆல்பிரட்தாஸ் |
| சின்னசேலம் | பிரம்மபுரம் பழனி |
| | ஆவடி கா.மு. ஜான் |

| | |
|---|---|
| நன்னிலம் | தஞ்சை காமராஜ் |
| | வேங்கை சந்திரசேகர் |
| செங்கம் | பவானி கண்ணன் |
| | செங்கை சந்தானம் |
| சேந்தமங்கலம் | திப்பம்பட்டி ஆறுச்சாமி |
| | எம்.பி. ஆலன் |
| வாணியம்பாடி | சேப்பாக்கம் பிரபாகரன் |
| | குன்னூர் ஜாகீர் உசேன் |
| குடியாத்தம் | வழக்கறிஞர். சிவ. ஜெயராஜ் |
| | கோவை சௌந்தர் |
| திட்டக்குடி | தஞ்சை கலைமணிபாரதி |
| | பேர்னாம்பட்டு இராஜேந்திர பிரசாத் |
| ஓமலூர் | பசும்பொன் இரவிசந்திரன் |
| | கே.இ. செந்தமிழ் அரசு |
| கும்பகோணம் | சேலம் சுஜாதா |
| | சு. கல்யாணசுந்தரம், எம்.பி., |
| | நாமக்கல் இராஜகோபால் |
| வேடசந்தூர் | மதுரை ஜவகர் |
| | புத்தூர் ஆனந்தன் |
| பூம்புகார் | நளினி சாரங்கன் |
| | எசனை ஆறுமுகம் |
| அரூர் | ஆரணி மாலா |
| | கவிஞர் வீரமுரசு |
| குமாரபாளையம் | பொள்ளாச்சி சித்திக் |
| | எழும்பூர் தேவநிதி |
| பாப்பிரெட்டிபட்டி | ஒசூர் அப்துல் ரஹ்மான் பாரி |
| | கோவை சேரலாதன் |
| திருப்பத்தூர் (சிவகங்கை) | தக்கோலம் தேவபாலன் |
| | வண்ணை மோகன் |
| அரவக்குறிச்சி | திருப்பூர் கூத்தரசன் |
| | ரம்ஜான் பேகம் |
| | கலை கமால் |
| ஒசூர் | குடியாத்தம் பெரிய கோட்டீஸ்வரன் |
| | ஒய். பிரகாஷ், எம்.எல்.ஏ., |
| | மதுரை குருசாமி |
| பரமக்குடி | இடிமுரசு மணிமுத்து |
| | நெல்லை மூர்த்தி |
| கமுதி | வழக்கறிஞர் முத்து முத்தையா |
| | நன்னிலம் சந்திரசேகர் |
| ரிஷிவந்தியம் | நெல்லை ரவி |
| | குடியாத்தம் அன்பு |
| ஆலங்குடி | குடியாத்தம் பாரி |
| | கே.வி. ராமகிருஷ்ணன் |
| போளூர் | செங்கை தாமஸ் |
| | காரை கு. அருளானந்தம் |
| வாழப்பாடி | மதுரை அலெக்சாண்டர் |
| | எஸ்.ஆர். சிவலிங்கம் |
| | துறையூர் துரைப்பாண்டி |
| பண்ருட்டி | நாகம்மை கருப்பையா |
| | முகவை ராமர் |
| ஆம்பூர் | கவிஞர் நன்மாறன் |
| | ஈகை தனசேகரன் |
| ஊத்தங்கரை | சேலம் கோவிந்தன் |
| | சைதை பாஸ்கர் |
| நத்தம் | அதிரடி அல்தாப் |
| | பெரம்பலூர் விஜயரத்தினம் |
| மார்த்தாண்டம் | நெல்லை முத்தையா |
| | மாண்புமிகு மனோ. தங்கராஜ் |
| | சிவகாசி ஜீவா |
| வள்ளியூர் | கம்பம் பாண்டியன் |
| | இரா. ஆவுடையப்பன் |
| | சி.பி. சிங்காரவேல் |
| சாத்தான்குளம் | வண்ணை அரங்கநாதன் |
| | மாண்புமிகு அனிதா ராதாகிருஷ்ணன் |
| | முருக்கம் முனுசாமி |
| சாத்தூர் | மார்ஷல் முருகன் |
| | தா. பழூர் இளஞ்செழியன் |
| வேப்பனஹள்ளி | பூங்கா நகர் ஜெ. கண்ணன் |
| | தீக்கனல் செல்வம் |
| சூலூர் | மதுரை சுந்தரராஜன் |
| | ஆசிரியர் அன்புமணி |
| சங்ககிரி | நாகை. நாகராஜன் |
| | மொழிப்போர் காவலர் கு.வெங்கட்ராமன் |

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை – 18


**சி.வி.எம்.பி.எழிலரசன், எம்.எல்.ஏ.**
செயலாளர்,
தி.மு.க. மாணவர் அணி

# தமிழனின் வீரத்தைப் பறைசாற்றும் 'கலைஞர் நூற்றாண்டு ஏறுதழுவுதல்' பிரமாண்ட அரங்கை - திராவிட மாடல் அரசின் முதல்வர் மு.க.ஸ்டாலின் திறந்து வைத்த எழில்மிகு காட்சிகள் !





முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (24.1.2024) மதுரை மாவட்டம், அலங்காநல்லூர், கீழக்கரை கிராமத்தில் உலகத்தரத்துடன் கட்டப்பட்டுள்ள கலைஞர் நூற்றாண்டு ஏறுதழுவுதல் அரங்கம் திறப்பு விழாவில், அரங்கத்தில் நிறுவப்பட்டுள்ள முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் திருவுருவச் சிலையை திறந்து வைத்தார். இவ்விழாவில், அமைச்சர் பெருமக்கள், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.


முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (24.1.2024) மதுரை மாவட்டம், அலங்காநல்லூர், கீழக்கரை கிராமத்தில் 66.80 ஏக்கர் நிலப்பரப்பில், 77,683 சதுரஅடி பரப்பளவில் 62.78 கோடி ரூபாய் செலவில் உலகின் முதல் பிரம்மாண்டமான ஏறுதழுவுதல் அரங்கமான கலைஞர் நூற்றாண்டு ஏறுதழுவுதல் அரங்கத்தை திறந்து வைத்தார். இவ்விழாவில், அமைச்சர் பெருமக்கள், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.





முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (24.1.2024) மதுரை மாவட்டம், அலங்காநல்லூர், கீழக்கரை கிராமத்தில் 66.80 ஏக்கர் நிலப்பரப்பில், 77,683 சதுரஅடி பரப்பளவில் 62.78 கோடி ரூபாய் செலவில் உலகின் முதல் பிரம்மாண்டமான ஏறுதழுவுதல் அரங்கமான கலைஞர் நூற்றாண்டு ஏறுதழுவுதல் அரங்கத்தை திறந்து வைத்து, ஏறுதழுவுதல் போட்டியை கொடியசைத்து தொடங்கி வைத்து பார்வையிட்டார். இவ்விழாவில், அமைச்சர் பெருமக்கள், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.





முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (24.1.2024) மதுரை மாவட்டம், அலங்காநல்லூர், கீழக்கரை கிராமத்தில் 66.80 ஏக்கர் நிலப்பரப்பில், 77,683 சதுரஅடி பரப்பளவில் 62.78 கோடி ரூபாய் செலவில் உலகின் முதல் பிரம்மாண்டமான ஏறுதழுவுதல் அரங்கமான கலைஞர் நூற்றாண்டு ஏறுதழுவுதல் அரங்கத்தை திறந்து வைத்து, ஏறுதழுவுதல் போட்டியில் வெற்றி பெற்ற வீரர்களுக்கு தங்க மோதிரம் வழங்கி பாராட்டினார். இவ்விழாவில், அமைச்சர் பெருமக்கள், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

பல்வேறு துறைகளில் தொலைநோக்குப் பார்வையுடன், முத்தமிழறிஞர் கலைஞர் செயல்படுத்திய திட்டங்கள், உருவாக்கிய கட்டமைப்புகள் குறித்து இந்தப் பகுதியில் பார்த்து வருகிறோம். இந்த வாரம் **கோவை அவிநாசி சாலை மேம்பாலம்.**



# 54 இடம் பொருள் கலைஞர்



**அ**ன்றைக்குக் கிடைத்த தரவுகள் படி, அன்று அவிநாசி இருப்புப் பாதையை ஒரு நாளில் கடந்து சென்ற வாகனங்களின் எண்ணிக்கை இவை:

கார்கள் சுமார் 500; லாரி, வேன் போன்ற வணிக ஊர்திகள் சுமார் 400; மாட்டு வண்டிகள் சுமார் 600; சைக்கிள்கள் சுமார் 5 ஆயிரம்; பாதசாரிகள் சுமார் 10 ஆயிரம். இது 60களில் கிடைத்த கணக்கு.

அடுத்தப் பத்தாண்டுகளில், அதாவது 70களின் தொடக்கத்தில் இவற்றின் எண்ணிக்கை இவ்வாறாக இருந்தது:

கார்கள் சுமார் 6 ஆயிரம்; லாரி, வேன் சுமார் 2 ஆயிரம்; மாட்டு வண்டிகள் சுமார் ஆயிரம்; சைக்கிள்கள் சுமார் 17 ஆயிரம்; பாதசாரிகள் 60 ஆயிரம்.

# கோவை அவிநாசி சாலை மேம்பாலம்

## இந்தியாவின் முதல் மூன்றடுக்கு மேம்பாலம்!

**வ**ரும் நாடாளுமன்றத் தேர்தலுக்கு மேற்குப் பகுதிப் பொறுப்பாளராக நமது இளைஞர் அணிச் செயலாளர் அறிவிக்கப்பட்டிருக்கும் நிலையில், சேலத்தில் வெற்றிகரமாக நடந்து முடிந்திருக்கிறது கழக இளைஞர் அணியின் இரண்டாவது மாநில மாநாடு.

மிகப் பிரமாண்டமான முறையில் நடைபெற்ற இந்த மாநாட்டுக்கு வந்த பலரும், தேசிய நெடுஞ்சாலை 47 வழியாக வந்திருக்கக் கூடும். குறிப்பாக, கோவை பகுதி மக்கள் இந்தச் சாலை வழியே மிகச் சுலபமாக, விரைவாக வந்திருக்கலாம். இன்றைக்கு, மிக எளிதாக அந்தச் சாலையில் எண்ணற்ற வாகனங்கள் பயணிக்கின்றன என்றால், அதற்குக் காரணம் 50 ஆண்டுகளுக்கு முன்பு முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் போட்ட அடித்தளம்தான்..!

ஆம்... கோவை மாவட்டத்தில் உள்ள அவிநாசி சாலை மேம்பாலம் 1974 ஆம் ஆண்டு புத்தாண்டில் ஜனவரி 10-ஆம் தேதி பொதுமக்கள் பயன்பாட்டுக்காக கலைஞர் அவர்களால் திறந்துவைக்கப்பட்டது. ‘உப்பிலிப்பாளையம் மேம்பாலம்’, ‘ரவுண்டானா’ என்று பல பெயர்களால் அறியப்படும் இந்த மேம்பாலம், இந்த ஆண்டு தனது பொன்விழாவைக் கொண்டாடுகிறது.

இந்தப் பாலத்துக்கு மேலும் சில பெருமைகள் உண்டு. சென்னையில் அண்ணா மேம்பாலம் கட்டப்பட்ட பிறகு, தமிழ்நாட்டில் திறக்கப்பட்ட இரண்டாவது மேம்பாலம் இதுவாகும். மேலும் இந்தியாவிலேயே, ரவுண்டானா வடிவில் கட்டப்பட்ட வாகன வகைப் பிரிப்பு (கிரேடு செபரேட்டர்) முறை கொண்ட மேம்பாலம் இதுதான்.

### இருப்புப்பாதை தந்த இன்னல்

அன்றைய கோவை நகராட்சி எல்லைக்குள், சேலம் -கொச்சி சாலையில், கிலோ மீட்டர் 157/8-இல் இருந்த இருப்புப் பாதை கடப்புக்கு (லெவல் கிராஸிங்) பதிலாக, ஏறத்தாழ 40 இலட்சம் ரூபாய் செலவில் இப்படி ஒரு மேம்பாலத்தைக் கட்ட கழக அரசு முடிவெடுத்தது.



மேம்பாலம் கட்டப்படுவதற்கு முன்பு, அந்த இருப்புப் பாதையால் சாலைப் போக்குவரத்துக்குப் பல வகையில் இன்னல்கள் ஏற்பட்டன. இந்த இருப்புப் பாதையால், ஒரு நாளைக்கு 34 முறை மூடப்பட்டு, சாலைப் போக்குவரத்துக்குப் பெரும் சிரமத்தை ஏற்படுத்தியது.

1951-52 ஆம் ஆண்டுகளுக்கு முன்னர், அவிநாசி சாலையில் அமைந்த இந்த இருப்புப் பாதை இருக்கும் ரயில் பாதை, மேட்டுப்பாளையம் மட்டும் செல்லும் ரயில்களுக்கான பாதையாக இருந்தது. இது 1951-52 ஆம் ஆண்டில் பீளமேடு, சிங்காநல்லூர் ரயில் நிலையங்கள் திறக்கப்பட்டு, சென்னை செல்லும் ரயில்களும் பயணிக்கிற முதன்மைப் பாதையாக மாறியது.

### கால் மணிக்கும் அதிகமாகக் காத்திருப்பு

அடுத்த இருபதாண்டுகளில், தொழிற்துறையில் கோவை அபரிமிதமான வளர்ச்சியைக் கண்டது. அதனால், சாலைப் போக்குவரத்தின் எண்ணிக்கையும் அதிகரித்தது. இன்னொரு புறம், ரயில் போக்குவரத்து எண்ணிக்கையும் பெருகியது. இதனால், மேற்சொன்ன அவிநாசி இருப்புப் பாதையில், ஒரு நாளைக்கு 8 முறைகள் ‘கேட்’ மூடப்படும் நிலையில் இருந்து, ஒரு நாளைக்கு 34 முறைகள் என்ற நிலையை அடைந்தது.

சாலைப் போக்குவரத்தின் எண்ணிக்கை மட்டுமல்லாது, மக்கள் பயன்படுத்திய வாகனங்களின் வகைமையும், அவை ஏற்றிச் செல்லும் பளுக்களின் நிறையும் பெருமளவில் உயர்ந்தன. இதனால் லெவல் கிராஸிங்கின் இருபுறமும், சாலைப் போக்குவரத்து தடைப்பட்டு, வாகனங்கள் சாரி சாரியாக இரு பக்கமும், சுமார் ஒரு கிலோ மீட்டர் தூரத்துக்கும் மேல் தேங்கி நின்றன. இதனால் கால் மணி நேரத்துக்கும் அதிகமான அளவில் காத்திருக்க வேண்டியதாக இருந்தது.

அந்தத் தேக்கம் கலைவதற்குள் மீண்டும் வண்டிகள் வந்த வண்ணமே இருந்ததால், போக்குவரத்தில் நெரிசல் ஏற்பட்டு, மக்களின் உழைப்பும் நேரமும் சக்தியும் பெரிதும் பாழ்பட்டன. எனவே, பெருகி வரும் போக்குவரத்துத் தேவையை நிறைவு செய்வதற்காக, ‘போக்குவரத்து நெரிசலைக் குறையுங்கள்’ என்ற கோவை மக்களின் நெடுநாளைய கோரிக்கையைச் செயல்படுத்தும் விதமாகவும் இந்த மேம்பாலம் கலைஞர் தலைமையிலான கழக அரசால் கட்டப்பட்டது.

மேம்பாலம் மற்றும் சுரங்கப் பாதை, ஈரடுக்குப் போக்குவரத்து ஒழுங்கு என இந்த மேம்பாலம், இந்தியாவிலேயே முதல் மூன்றடுக்குப் பாலமாகத் திகழ்ந்தது. இவ்வாறான பொறியியல் சாதனைகளை எல்லாம் கலைஞர் எவ்வாறு தொலைநோக்குடன் சிந்தித்தார் என்பதை நினைத்தால், வியப்புதான் ஓங்குகிறது.

### எதிரிகளின் வஞ்சகம்!

கலைஞர் ஏற்படுத்திய இந்தக் கட்டமைப்பைப் புனரமைக்கிறோம் என்று சொல்லி, அ.தி.மு.க. அரசு 2019-ஆம் ஆண்டு சில பணிகளை மேற்கொண்டது. ‘அடடா... இவர்கள் கூட மக்களுக்காகச் செய்கிறார்களே’ என்று நினைத்தால், முடிவில், கலைஞரின் பெயரை அழிக்கத்தான் அவர்கள் திட்டமிட்டிருக்கிறார்கள் என்பது தெரிய வந்தது.

ஆம்... அந்த மேம்பாலத்தில், அவிநாசி சாலையில் நுழையும்போது தொடங்கும் இந்த மேம்பாலத்தின் அடியில், திருவள்ளுவரின் சிலைக்குக் கீழே பாலம் தொடர்பான கல்வெட்டு ஒன்று இருந்தது. அதில் ‘இந்தப் பாலம் கலைஞர் தொடங்கி வைத்தது’ என்று அவரது பெயர் இடம்பெற்றிருந்தது.

எதிரிகள், வள்ளுவர் சிலையை சுத்தப்படுத்தி விட்டு, கல்வெட்டுக்கு வெள்ளை பெயின்ட் அடித்துவிட்டார்கள். கலைஞரின் பெயரை பெயின்ட்டால் அழித்துவிட்டால், அவரது சாதனைகள் மறக்கப்பட்டுவிடும் என்று நினைத்தார்களோ அந்தக் கயவர்கள்..?

...வலம் வருவோம்

### பா.ஜ.க.வின் தாரக மந்திரம்!

**நா**ட்டின் மிக நீண்ட கடல் பாலமான ‘அடல் சேது’ பாலத்தை இந்த மாத தொடக்கத்தில், பிரதமர் மோடி தொடங்கி வைத்தார். 22 கிலோ மீட்டர் பாலத்தில் பயணிக்க, சுங்கக் கட்டணம் 250 ரூபாய். நெடுஞ்சாலைப் பயணம் என்றாலே, பயப்படும் அளவுக்குக் கட்டண வசூலைக் கூட்டிக்கொண்டே செல்கிறது ஒன்றிய அரசு. 2014-15 நிதியாண்டில் நாட்டில் இருந்த 145 சுங்கச்சாவடிகள் எண்ணிக்கை, தற்போது 959-ஆக அதிகரித்துவிட்டது.

ஆனால், நெடுஞ்சாலைகளின் நீளம் 18,807 கிலோ மீட்டரில் இருந்து 38,315 கிலோ மீட்டராக மட்டுமே அதிகரித்துள்ளது. நெடுஞ்சாலைகள் ஒரு மடங்கு அதிகரித்தால், சுங்கச்சாவடிகள் எண்ணிக்கையோ 6 மடங்குக்கு மேல் அதிகரித்துவிட்டது. சுங்கச்சாவடிகள் மூலமான வருவாயும் 17,759 கோடி ரூபாயில் இருந்து 48,028 கோடி ரூபாயாகப் பெருகியிருக்கிறது.

2030-ஆம் ஆண்டுக்குள் சுங்கச்சாவடி வருவாயை 1.3 லட்சம் கோடி ரூபாயாக உயர்த்த இலக்கு நிர்ணயித்திருக்கிறார் ஒன்றிய அமைச்சர் நிதின் கட்கரி. சுங்கச் சாவடி எண்ணிக்கையை அதிகரித்து, வருவாயைப் பெருக்குவது நாட்டின் வளர்ச்சிக்கு என்றால் கூடப் பரவாயில்லை. 2025-ஆம் ஆண்டு மார்ச் மாதத்துக்குள் சுமார் 27 ஆயிரம் கிலோ மீட்டர் தேசிய நெடுஞ்சாலையைத் தனியாருக்குத் தாரை வார்க்க திட்டம் வகுத்திருக்கிறது நிதி ஆயோக்.

கடந்த 4 நிதியாண்டுகளாக அந்த இலக்கை நோக்கி வேகமாக ஓடிக் கொண்டிருக்கிறது ஒன்றிய அரசு. ‘தனியார் வாழ்க’ என்பதுதான் ஒன்றிய பா.ஜ.க. அரசின் தாரக மந்திரம் என்பதை இந்தப் புள்ளிவிவரங்கள் உணர்த்துகின்றன.

### :ப்ளாஷ்பேக்



### திருமணத்தில் தலைவர்கள் வாழ்த்து!



புகழேந்தி

**எ**ன் தந்தையார், மா.மீனாட்சிசுந்தரம், பெரியார் விருது பெற்றவர். அவர் மீது தலைவர் கலைஞர் கொண்டிருந்த பரிவால், 1993-ஆம் ஆண்டு, என் திருமண விழாவில் பங்கேற்பதற்காக நாகை மாவட்டம், வேதாரண்யத்துக்கு வருகை தந்திருந்தார். மணமக்களான எங்களை (எனது இணையர், உமா) அவர் வாழ்த்தியபோது, அவருடன் இசை முரசு நாகூர் ஹனிபா, சேலத்துச் சிங்கம் வீரபாண்டியார், ஆற்காட்டார் ஆகியோரும் உடனிருந்தனர்.

**-மா.மீ.புகழேந்தி, நகர மன்றத் தலைவர், வேதாரண்யம்**


இது போன்ற அரிய புகைப்படங்களை சிறு குறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம். அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை-600 018. வாட்ஸ்அப் எண் : 90033-24473, மின்னஞ்சல் youthwing@dmk.in

### கருவூலம்

### இங்கிலாந்தில் பெரியாருக்குக் கூட்டம்!

**1932-ஆம் ஆண்டு தந்தை பெரியார் இங்கிலாந்தில் சுற்றுப்பயணம் செய்தார். மேக்ஸ் பரோலேக் பார்க்கில் பெரியாரை வரவேற்க ஏற்பாடு செய்யப்பட்டிருந்த கூட்டத்தில், 20 ஆயிரம் பேருக்கு மேல் கூடியிருந்தனர். பிரிட்டிஷ் தொழிற்சங்கத் தலைவராக இருந்த லான்ஸ் பரியும் அந்தக் கூட்டத்தில் உரையாற்றினார். பிரிட்டிஷ் அரசாங்கம் இந்தியத் தொழிலாளர்களை எப்படியெல்லாம் சிறைக் கொடுமைப்படுத்தியது, கொன்று குவித்தது என்றெல்லாம், மிகத் துணிச்சலோடு அந்தக் கூட்டத்தில் பேசினார், பெரியார்.**

### திராவிடத்தால் வாழ்கிறோம் 368




எழுத்து : கோவி.லெனின்
ஓவியம் : கி.சொக்கலிங்கம்

-வாழ்வோம்

RNI 1244/57 - Postal Reg.No.MA/43/2024-2026.Licenced to post under without pre payment of postage vide No.TN/WPP-94/SR/2024-2026 Published by Karthikeyan Shanmugasundaram on behalf of Murasoli Trust from No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 and Printed by R.N.Murugan at Dinakaran Press, No.2/2, Melur Main Road, Uthangudi, Madurai - 625 107. Editor: Karthikeyan Shanmugasundaram, Regn.No.7436, Ph:044-2817 9191, 2817 9131 Fax: 2817 9292.